க்கங்கள்: இருபது

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

ர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 17 ஞாயிற்றுக்கிழமை (01.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:095

## க்குண்டுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வசதியாக

# புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை ஏற்க

# இலங்கை அரசைக் கேட்கிறது இந்தியா

## அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று அறிக்கை



புதுடில்லி, மார்ச் 01

போர் நிறுத்தம் செய்வதற்கு தயார் என்று விடுதலைப்புலிகள் அறிவித்திருப்பதைப் பயன்படுத்தி-

மோதல் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களைக்காப்பாற்றுவதற்கு இலங்கை அரசு வழி செய்ய வேண்டும்-

அதன் பொருட்டு இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும் என்று இந்தியா கேட்டுள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்புப் பகுதியில் வெள்ளியன்று 38 பேர் பலி

வவுனியா, மார்ச் 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு,மாத்தளன் மற்றும் அம்பலவன் பொக்கணை ஆகிய பிரதேசங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு நடத்தப்பட்ட ஆட்லறி,பல்குழல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 17 சிறுவர்கள் உட்பட 38 பேர் பலியாகினர்; 65 பேர் காயமடைந்துள்ளனர் என்று இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

நேற்று முன்தினம் மாலை 6.50 மணிக்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

## முகர்ஜிக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம் நடத்த முயன்ற வைகோ மற்றும் 185 பேர் கைது

### னைவரையும் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ணாப் முகர்ஜியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று கறுப்புக் கொடி போராட்டம் நடத்த முயன்ற ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ மற்றும் அவரது கட்சியைச் சேர்ந்த (20ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வைத்திய சாலையில் சிக்ச்சை பெற்று வந்த தாயையும் இரண்டு பிள்ளைகளையும் காணவில்லை

கொழும்பு, மார்ச் 1

வன்னிப் பகுதியில் இருந்து காய முற்ற நிலையில் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு பின்னர் மன்னார் வைத்தியலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களில் தாய் ஒருவரும் அவரது இரண்டு பிள்ளைகளும் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் முதல் காணாமல் போயுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த சகுந்தலா என்ற தாயும் அவருடைய மகனும், மகளும் காணாமல்போயுள்ளனர். வைத்திய சாலையில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மருந்து (20ஆம் பக்கம் பார்க்க)

## தற்காலிக மோதல் தவிர்ப்பு அல்லது மனிதாபிமான நடைபாதை மூலம் போரில் சிக்குண்டுள்ள மக்கள் வெளியேற அரசு வகை செய்ய வேண்டும்

### இலங்கை வந்திருந்த ஐ.நா. அதிகாரி ஹோம்ஸ் பாதுகாப்புச் சபையில் அறிக்கை



கொழும்பு, மார்ச் 01

இலங்கையின் வடக்கே வன்னிப் பெருநிலப்பரப்பில் மோதலில் அகப்பட்டுள்ள பொதுமக்கள் அங்கிருந்து பாதுகாப்பாக வெளியேற்றப்பட வேண்டும் என்றும் அதனை ஒரு தற்காலிக போர் நிறுத்தம் மூலமோ அல்லது பாதுகாப்பான மனிதாபிமான 'நடைபாதையை' ஏற்படுத்துவதன் மூலமே செய்ய வேண்டும் என்று இலங்கை அரசை ஐ.நா. சபை கேட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் சபையின் மனிதாபிமான விவகாரங்களுக்கானசெயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ், தமது சமீபத்திய இலங்கைக்கான விஜயம் குறித்து ஐ.நா.பாதுகாப்புச்சபை உறுப்பினர்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக ஹோம்ஸ் வெளியிட்டுள்ள (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் இலங்கை விவகாரம் பிரேரிக்கப்படவில்லை

### பிரிட்டனும் அமெரிக்காவும் அக்கறை காட்டவில்லை

- இன்னர் சிற்றி பிறெஸ் பிரதிநிதி மத்தியு ரஸ்ஸல் -

ஐக்கியநாடுகள் சபை,மார்ச்1

இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபை நிகழ்ச்சி நிரலில் இடம்பெறமாட்டாது று அதன் தலைவர் யுக்கியோ டக்காசு றுமுன்தினம் வெள்ளிக்கிழமை 'இன் சிற்றி பிறெஸ்' செய்தியாளரிடம் தெரிதார்.

பாதுகாப்புச் சபையின் கூட்டம் ஆரம்பதும் அண்மையில் இலங்கைக்கு விஜ செய்திருந்த மனிதாபிமான விவகாரங்க்கான செயலாளர் நாயகம் ஜோன் ாம்ஸை அவரது அறிக்கை யைச் சமர்ப்பிக்குமாறு ரஷ்யப் பிரதிநிதி விற்றாலி சேர்க்கின் கோரினார். ஹோம்ஸும் தனது நீண்ட அறிக்கையைச் சமர்ப்பித்தி ருந்தார்.

எனினும் இலங்கை விவகாரத்தைப் பாதுகாப்புச்சபைக்கூட்டத்தில் ஆராய்வதற்கான வாய்ப்பு இல்லை என்று யுக்கியோ டக்காசு கூட்ட முடிவில் கூறினார்.

பாதுகாப்புச் சபைக் கூட்டம் மூடிய கதவுகளுக்குள் (20ஆம் பக்கம் பார்க்க)

## முல்லையில் உள்ள கூட்டமைப்பு எம்.பியின் செயலாளர் வவுனியாவில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டார்

வவுனியா, மார்ச் 1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். கனகரத்தினத்தின் செயலாளர், வைரவப் புளியங்குளத்தில் வைத்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில்(20ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் நவீன தொலைத்தொடர்பு நிலையம் கண்டுபிடிக்கப்பட்டது - பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு, மார்ச் 1

விடுதலைப் புலிகளின் அதிநவீன தொலைத்தொடர்பு நிலையமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்துள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

8 ஆம் ஆண்டை முன்னிட்டு
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும்
கொசி உணவகம்
Free Delivery Town Limit
Food Festival
Fried Rice Day
CHICKEN FRIED RICE
MUTTON FRIED RICE
EGG FRIED RICE
VEGE FRIED RICE
Fried Rice

Cosy Hotel & Restaurant
No.15, Sirambiyady Lane, Jaffna. T.P.No: 021-2225899

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# துரையப்பா விளையாட்டரங்கில் உதைபந்தாட்டம்

வண்ணை,மார்ச்1

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கின் வசந்தம் எழுச்சி விழாவை ஒட்டி யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட சுற்றுப்-போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிமை நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.மணிக்கு 'ஏ' பிரிவில் வேலணை ஐயனார் கழகத்தை எதிர்த்து நயினாதீவு வி. கழகமும் மோதும்.

மாலை 4 மணிக்கு 'ஏ' பிரிவில் அரி யாலை வி. கழகத்தை எதிர்த்து பொற்பதி வி.கழகம் மோதும்.

அதேவேளை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3.மணிக்கு 'பி' பிரிவில் புங்குடு தீவு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஊர்காவற்றுறை, தம்பாட்டி விளை யாட்டுக் கழகம் மோதும்.

மாலை 4.00மணிக்கு 'பி' பிரிவில் யூனியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பாரதி விளையாட்டுக்கழகம் மோதவுள் ளது. (1-160)


**Pravin Best (பிரவிந்தர்)**

elementary world for the people's happiness

மக்களின் மன மகிழ்விற்கான ஆதார உலகம்


## வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2009

பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் 15.03.2009 (ஞாயிற்றுக் கிழமை) மு.ப. 10 மணிக்கு பெரிய பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அனைத்துப் பெற்றோர்களையும் தவறாது சமுகமளித்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**அதிபர்.**

யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

## றோட்டரக்ட் கழகம் - யாழ்ப்பாணம் சீட்டிழுப்பு முடிவுகள்

எமது கழகத்தால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பு முடிவின் வெற்றி யீட்டிய இலக்கங்கள்:

| | |
|---|---|
| முதலாம் இடம்: | 2574 |
| இரண்டாம் இடம்: | 1357 |
| மூன்றாம் இடம்: | 3589 |

ஆறுதல் பரிசுகள்: 1038, 592, 2426, 1276, 1602

றோட்டரக்ட் கழகம்,
யாழ்ப்பாணம்.

**தலைவர்.**

## நீ களைப்படைந்துவிட்டாயா? அது யோசனையால் மட்டுமே வருகிறது!



உள்ளே நான்காம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ள தொகுப்பு **ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகளின்** அரிய கருத்துக்களில் ஒன்றாகும். (ஆ-4)

## நிகழ்வுகள்

கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று மருத்துவ முகாமும் நடமாடும் சேவையும் இடம்பெறவுள்ளன.

இலங்கை வங்கி, சாவகச்சேரி லயன்ஸ் கழகம், கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் ஆலயமும் ஆகியன இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

காலை 8 மணிக்கு இ.குழந்தைவடிவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் ந.சிவரட்ணம் கலந்துகொள்வார். (1-288)

* * *

ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆய்வுகூடத் திறப்பு விழா நாளை காலை 9மணிக்கு வித்தியாலய அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும்,சிறப்பு விருந்தினராக வலிகாம வலய தொழில்நுட்ப உத்தி யோகத்தர் எஸ்.ஜெயசீலனும் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (1-38)

## தவறிவிட்டது

28.02.2009 அன்று உயர்தொழில்நுட்ப நிறுவனத்திலிருந்து முலவைச் சந்தி ஊடாக நாவலர் வீதி பொருளியல் கல்லூரிக்குமிடையில் கைச்சங்கிலி (1¼ பவுண்) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0771707224 என்னும் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## ஐங்கரன் திருமண சேவை

உலகமெல்லாம் பரந்து வாழும் தமிழ் மக்களை இணைக்கும் சேவை:

எம்மிடம் கனடா Citizen 33,39 வயது, UK Citizen 31, 37, 40 வயது, சுவிஸ் Citizen 30,38 வயது, அமெரிக்கா Citizen 36 வயது, பிரான்ஸ் Citizen 27 வயது மணமகன்மார் உள்ளனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு.

லண்டன் தொடர்பு: 00447535384166
00447508295863

Fax NO:00442086810701, 00442086720673

## வீடு தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளும் உள்ள 3 அல்லது 4 அறைகளுடன் வீடு தேவை.

தொடர்பு:

**போதகர் சாம் இராஜசூரியர்**

0777 238300, 021 222 9124

(83149)

## ஐங்கரன் திருமண சேவை மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 40 வயது UK Citizenசொந்தமாக கம்பனி வைத்திருப்பவர் தற்போது விடுமுறையில் கொழும்பு வந்துள்ளார் A/L படித்த கொம்பியூட்டர் அறிவுள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.உடன் ஸ்பொன்சர் செய்துஅழைத்துச் செல்வார்.

கொழும்புத் தொடர்பு:
0771165081 (பெற்றோர்)

## கண்டெடுக்கப்பட்டது

கடந்த 14.02.2009 அன்று யாழ்-பருத்தித்துறை வீதியில் (இருபாலை) தங்க கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்,

**சு.அப்பன்**

நாவலடி,கோப்பாய் மத்தி,கோப்பாய்.

## விற்பனைக்கு

ஜப்பான் தயாரிப்பு யமகா, Newsmate, நீல நிறம் MP தொடரிலக்கம் தனிப்பாவனையில் இருக்கும் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பெண்களின் பாவனைக்கேற்ற வகையில் கூடை, பின் கரியர் என்பன மாற்றப்பட்டுள்ளன. சைலென்சர் துப்பரவு செய்யக்கூடிய புதிய வகை.

தொடர்பு: 396, நாவலர் வீதி (கைலாய பிள்ளையார் கோயிலடி, பழைய உதயன் அலுவலகம் முன்பாக) சனி, ஞாயிறு காலை 9-11 மணிவரை மட்டும் பார்வையிடலாம். தரகர்கள் தவிர்க்கப்படுவர்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா கந்தசாமி

இமையாணன் வடக்கு,உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கந்தசாமி 25.02.2009 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் உமாதேவியின் அன்புக் கணவரும் செந்தூரனின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(01.03.2009)ஞாயிற்றுக் கிழமை கனடாவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை(02.03.2009)திங்கட்கிழமை கனடா நேரப்படி நண்பகல் 12 மணிக்கு கனடா, பிறாம்ரனை நகரில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி. 021 226 4855

தகவல்:
பொ.அழகம்மா (தாய்).

### சுப்பிரமணியம் சிவபாக்கியம்



திருநெல்வேலி கிழக்கு, அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம் நேற்று (28.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் இராஜரட்ணம், கனகம்மா, தவமணிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் புஷ்பராஜலிங்கம், ஜீவரட்ணம் (அமரர்), இலங்கைநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ரேணுகா, பாஸ்கரன், மாலினி, ஜெயப்பிரகாஷ், ஜெயவாணி, தயாளன், ஜெயதீஸ், அகிலன் (அமரர்), வத்சலா, சண்முகபாலன், விஜயன், சிவகுமார், மாலா, தனுசியா, மஞ்சுசீதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அருந்ததி, ஐஸ்வர்யா, அகிலன், தீபிகா, ஹரிணி, ஸ்ருதி, வருண், ஸ்வாதி ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது என்பதனை அறியத்தருகின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி ஒழுங்கை,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள்.

## விகாஷ் தங்குமிட விடுதி VIKASH REST

இந்தியா, சென்னையில் தங்குமிட வசதிகள், திருமண வைபவங்களுக்கான மண்டப ஒழுங்குகள், யாழ்ப்பாண முறைப்படியான சாப்பாட்டு ஒழுங்குகள் மற்றும் சுற்றுலா, யாத்திரை, திருமணங்களுக்கான வாகன வசதிகள் யாவும் நிதானமான கட்டணத்தில் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

CONTACT:
1/2 H, COSMOPOLITON COLONY
THIRUVANMIYUR CHENNAI.41
+919840862548
E-Mail: vikashrest@gmail.com

6, SOMAGIRI AVE.,
WELLAWATTE,
COLOMBO - 06
+94777732863

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் பொன்னையா இராமுப்பிள்ளை



(பிரபல புகையிலை வர்த்தகர், தாவடி)

தோற்றம்: 25★06★1929 மறைவு: 29★02★2008

திதி: பூர்வபக்கம் அட்டமி (19.03.2009)

இன்று உங்கள் நினைவு நாள்
மேன்மை மிகு ஊராகிய தாவடியில்
வான் புகழாய் வாழ்ந்து - வையகம்
போற்றிட பலரும் புகழ்ந்திட - எங்களை
அன்புடன் பேணிக்காத்த
எங்கள் அப்பப்பாவே உங்கள்
பிரிவு எங்களால் தாங்க முடியாது
அப்பப்பா நீங்கள் எங்கள்
தெய்வம் அப்பப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல வேதவிநாயகரை
பிரார்த்திக்கின்றோம்.

வன்னியசிங்கம் வீதி,
தாவடி வடக்கு, தாவடி.

அன்பான
பேரன், பேர்த்திமார்.

## மரண அறிவித்தல்

### திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி (சின்னமணி)



கொக்குவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திவாகரமூர்த்தி பாக்கியலட்சுமி (26.02.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் திவாகரமூர்த்தியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னுத்துரை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையா - செல்லம்மா தம்பதியரின் மருமகளும் பாஸ்கரன் (லண்டன்), சுபாசினி (சுவிஸ்), தயாளினி (சுன்னாகம் பிரதேசசபை), அருள்நிதி (லண்டன்), ஜனுயா ஆகியோரின் பாசமிகு தாயும் பாலகுமாரன், ஸ்கந்தரூபன் (சுவிஸ்), கனிஷ்டா (லண்டன்), சுபாஸ்கரன் (ஆசிரியர், யா/வயாவிளான் ம.ம.வித்தியாலயம்), சிவராஜா (லண்டன்), வாகீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான தவமணி, மல்லிகாதேவி, சிறிபாலன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி சொக்கநாதன் மற்றும் தில்லையம்பலம் (கனடா), இராசேந்திரன் (கனடா), இராசசௌந்தரி (கனடா), சௌபாக்கிய லட்சுமி, பாலசுந்தரம் (பொறியியலாளர், நீர்கொழும்பு), ஸ்ரீ இராமச்சந்திரன் (நாதன் பிறதஸ், இணுவில்), சிவசுப்பிரமணியம் (அமெரிக்கா), விக்கினேஸ்வரன் (நோர்வே), சண்முகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் றஞ்சிதகுமார், கலைச்செல்வி, சுமதி, தயாளன், பிரசாந்தி ஆகியோரின் சிறியதாயும். ஜிசானி, டறிக்ஷன், டதுசன், சரணிகா, சந்திசன், மானசன், தக்சாயினி, ருக்சாயினி, நிருஜன், மதுசாயினி, வானுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.


தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றின் அடையாளமாக விளங்கும் முதுசொம்களைப் பேணி எதிர்காலச் சந்ததிக்கும் அவற்றைக் கையளிக்க முனையவேண்டும்

யாழ்ப்பாணத்தில் சென்ற வருடம் இடம்பெற்ற சில சம்பவங்கள் நமது விழுமியங்களையும், பாரம்பரியங்களையும் நேசிப்போருக்கு ஆறுதல் அளிப்பவையாக அமைந்திருந்தன. 'ஆவணப் பெட்டகம்' என்னும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் பிரபலமாக விளங்கியவர்கள், சஞ்சிகைகள், பாரம்பரிய பயன்பாட்டுப் பொருள்கள், பிரசித்திபெற்ற ஆலயங்கள் என்னும் விடையங்கள் புகைப்படங்களாக காட்சிப்படுத்தப் பட்டன. இந்நிகழ்வு இடம்பெற்ற ஒருசில மாதங்களில் 'யாழ்ப்பாண தகவல் களஞ்சியம்' என்னும் பெயரில் குடாநாட்டின் குறுக்குவெட்டுப் பிரதிபலிப்பாக இங்குள்ள முக்கியமான இடங்கள், பெரியவர்கள், பாரம்பரியச் சின்னங்கள் சிலைகள் போன்ற பல விடயங்கள் புகைப்படங்கள், விளக்கங்கள் என்பன இணைந்த இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பட்டது. இவ்விரண்டு நிகழ்வுகளையும் இருவேறு பிரதேச செயலகங்கள் முன்னெடுத்திருந்தன. இந்த இரு நிகழ்வுகளையும் கண்டு, அப்பாடா! இப்போதாவது எமது தொன்மங்களைக் காக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு வந்ததே என்று பலரும் நிம்மதியடைந்தனர். ஆனால் அந்த நிம்மதியை நீடிக்க விடக்கூடாது என்பதுபோல சில காரியங்கள் நடந் தேறியுள்ளன.

ஆனைக்கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள நமசிவாய முதலியார் சத்திரம் அண்மையில் இடிக்கப் பட்டுள்ளது. நமது பண்பாட்டு முதுசொங்களில் ஒன்றாக [illegible]சியிருந்த இந்த மடம், இப்போது குற்றுயிராகக் [illegible]கின்றது. அதனைத் திருத்திக் கட்டுவதற்காகவே [illegible]த்ததாகச் சொல்லப்படுகின்றது. எனினும் அவ்வாறான நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும்போது.



ஆனைக்கோட்டை நமசிவாய முதலியார் சத்திரம்
(இடிக்கப்படும் முன்னர்)

ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த வரலாற்றுச் சின்னத்துக்கு எவ்வித பங்கமும் ஏற்படாதவாறே செய்யப்படவேண்டும். உதாரணமாகத் தென்னிலங்கைப் பகுதிகளில் உள்ள பல புராதன விகாரைகள் எல்லாம் அவற்றின் மூலத்தன்மை சிதையாதவாறு மீளமைக்கப் பட்டுள்ளன. ஆனால் இவ்வாறான பிரக்ஞை எதுவுமற்று நமது வரலாற்றை நாமே இடிக்கின்றோம் என்பதைக்கூட உணராது நமசிவாய முதலியார் சத்திரம் என்ற வரலாற்றுச் சின்னமொன்று சின்னாபின்னமாகத் தொடங்கியுள்ளது.

இதனைவிட யாழ்ப்பாணத்தின் வரலாற்றுச் சின்னங்கள் என்றவுடனேயே எல்லோருக்கும் உடனே ஞாபகத்துக்கு வருவது நல்லூர், சட்டநாதர் ஆலயத்துக்கு அருகில் அமைந்துள்ள மந்திரிமனை. யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னனான சங்கிலி மன்னனின் மந்திரி ஒருவரின் இல்லமே இதுவெனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில்



தமிழ்மன்னர்களின் ஆட்சி சிறப்பாக இருந்தது என்பதற்கும், நவீனத்தின் நுழைவு ஏற்படுவதற்கு முன்னரே எம்முடையே விஞ்ஞான தொழிநுட்ப அறிவும், கட்டடக் கலையும் சிறப்பாகவே இருந்தது என்பதனையும் வெளிப்படுத் துமளவிற்கு, ஓரளவேனும் முழுமையான தன்மையோடு காணப்படுகின்ற நல்லூர் மந்திரிமனையை இன்று பார்க்கின்றபோது மனதில் நெருடலொன்று எழவே செய்கின்றது. புதர்கள் மண்டிப் போயுள்ள சூழலில், ஒரு பேய் பங்களாவைப்போல இருளடைந்து கிடக்கிறது எமது வரலாற்றின் எச்சம். சமூகச்சீர்கேடான சில செயற்பாடுகளுக்கு இந்த மந்திரிமனை பயன் படுத்தப்படுவதாகவும் அவ்வப்போது சில முறைப்பாடுகள் எழவே செய் கின்றன.



கல்விச் சுற்றுலாவுக்காக மந்திரி மனையைப் பார்வையிட வருகின்ற மாணவர்கள் பலரும் இதன் முழுப்பரிமாணத்தையும் காணமுடியாத நிலையே காணப் படுகின்றது. ஏனெனில் கால் வைக்கக்கூட இடமற்று, பார்க்கும் இடமெங்கும் இப்பகுதியில் பற்றைகள்தான் காணப் படுகின்றன. அதனைவிட இதன் உட்கட்டமைப்பும் மிக நீண்டகாலம் யாராலும் பேணப்படாததால் துர்நாற்றமும், தூசுப்படலமும் தாராளமாகவே இங்குண்டு.

## ஆடம்பர விழாக்களுக்கு வீணே வாரி இறைக்கப்படும் பணத்தை கொண்டு பயனுள்ள வகையில் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாக்கலாமே.....!

இதனால் வீதியில் நின்றபடியே 'இதுதான் மந்திரிமனை' என்று வெறும் முகப்பை மட்டுமே பார்த்துவிட்டுச் செல்கின்ற நிலைதான் இன்றளவும் தொடர்கின்றது. இதனால் மந்திரிமனையின் கட்டட நுணுக்கங்கள், நிலத்தின்கீழான சுரங்க அறை, நமது பண்பாட்டின் வாழ்வியல் முறைமை என்பவற்றை முழுமையாகத் தரிசிக்க முடியாமலே போய்விடுகின்றது. எனவே வெறுமனே இடிந்த கட்டடம் மட்டுமே நமது வரலாறாக எஞ்சிவிடுகின்றது. அது கொண்டுள்ள அர்த்தப் பெறுமானங்கள் வலுவற்றதாகவே மாறிவிடுகின்றன.

சங்கிலிமனை கொண்டுள்ள அதே வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டதாகக் காணப்படுகின்ற யமுனா ஏரியின் நிலை இதைவிட மோசமானதாகவே இருக்கின்றது. இதுதான் பிரசித்தி பெற்ற யமுனா ஏரி என்று சத்தியம்பண்ணிச் சொன்னால்கூட எவருமே நம்பமாட்டார்கள். அந்தளவு தூரத்திற்கு கரைகள் எல்லாம் தூர்ந்துபோய், பாசிபடர்ந்து உருமாறிய நிலையிலேயே யமுனா ஏரி காணப்படுகின்றது. பராமரிப்பவர் எவருமில்லாததால் சிலவேளைகளில் இன்னும் கொஞ்சக் காலத்தில் நமது வரலாற்றின் பக்கங்களிலிருந்து யமுனா ஏரி மறக்கடிக்கப்பட்டு விடும் அபாயமும் தோன்றியுள்ளது. இவையெல்லாம் ஒருசில உதாரணங்கள் மட்டுமே. இன்னும் ஏராளமான முதுசொம்கள் அழிகின்ற செய்திகூட வெளியே தெரியாது அமுங்கிப்போய் விடுகின்றன.

நம்முடைய தொல்லியல் சின்னங்களின் சிதைவடைந்த நிலையினைக் காணும்போது சட்டெனத் தென்னிலங்கையில் மிகக் கவனமாகப் பேணப்படுகின்ற இலங்கையின் புராதன விகாரைகளும், சிகிரியா, தம்புள்ள போன்ற பிரசித்த பெற்ற இடங்களும் மனக்கண்முன் தோன்றுவதைத் தவிர்க்க முடியவில்லை. தமக்குரிய அடையாளங்களை சரிவரப் பேணுவதிலும், அதுபற்றிய ஆதாரங்களை அழியவிடாது காப்பதிலும், தென்னிலங்கை மக்களின் முயற்சி முன்மாதிரியானது. சான்றுகளை தங்கமலை இரகசியம் போன்று பொத்தி வைக்காமல் அவற்றைச் சுற்றுலாத் தலங்களாக்கி அதன்மூலம் பெறப்படும் வருமானத்தைக்கொண்டு வரலாற்றுச் சின்னங்களை ஆவணப்படுத்துகின்ற தென்னிலங்கை மக்களின் செயற்பாட்டினை எம்மவர்கள் ஏன் முன்மாதிரியாகக் கொள்வதில்லை?

சரியான பேணுகை இல்லாதவர்கள் என்றதொரு குற்றச்சாட்டு குடாநாட்டு மக்கள்மீது கூறப்படுகின்றது. பேணுகை மட்டுமல்லாது எமது முதுசொம்கள் பற்றிய அக்கறையும் இல்லாதவர்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. இதனால்தான் ஒருசில தசாப்தங்களுக்கு முன்புவரை கூட உபயோகத்திலிருந்த நமது பண்பாட்டு அம்சங்களையும், பாரம்பரியப் பொருள்களையும் நாம் தொலைத்து நிற்கின்றோம். யாழ்ப்பாணத்தில் உள்ள மிகப்பழமை வாய்ந்த மரச்சிற்பங்களைக்கொண்ட பறாளாய் ஆலயத்தேர் இன்று சிற்பங்கள் எல்லாம் களவாடப்பட்டு அம்மணமாக நிற்கின்றது.

இத்தனைக்கும் குறித்த தேர்ச்சிற்பங்களின் வரலாற்று மதிப்பையும், முக்கியத்துவத்தையும் விளக்கி யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரின் விழிப்புணர்வு நடவடிக்கையொன்றும் நடந்தது. அதன்பின்னரும் மக்கள் உரிய பிரதிபலிப்பை வெளிக்காட்டாததன் பயனாக இன்று தன்னுடைய எல்லாச் சிற்பங்களையும் பறாளாய்த்தேர் காவு கொடுக்க வேண்டியேற்பட்டுள்ளது. அநேகமாக இச்சிற்பங்கள் எல்லாம் களவாடப்பட்டு பெருந்தொகையான பணத்துக்கு வெளிநாட்டவருக்கும், தென்னிலங்கைக்காரர்களுக்கும் விற்கப் பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப் படுகின்றது.

எமது வரலாற்றை நாமே அழித்துக் கொண்டிருக்கிறோம். இதுதொடர்பாக செயற்பட வேண்டியவர்களும் புகைப்படக் கண்காட்சி, இறுவட்டு வெளியீடு, நூல் வெளியீடு என்ற மட்டுப்படுத்தப்பட்ட - ஏட்டுச் சுரைக் காய்த்தனமான - செயற்பாடுகளோடு நின்று விடுகின்றனர். தம்மால் ஆவணப் படுத்தப்பட்ட வரலாற்று எச்சங்களை இனியும் அழியவிடாது பாதுகாக்க வேண்டும் என்றோ, அவை தொடர்பான விழிப்புணர்வை சரியான முறையில் சமூகத்திடம் ஊட்ட வேண்டும் என்றோ எவருமே எண்ணுவதில்லை. அவ்வப்போது முதுசொங்கள் தொடர்பான ஒருசில ஆக்கபூர்வமான முயற்சிகள் இடம்பெற்றாலும் அவை தமது தொடர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்ளாமல் செயலிழந்து போனமையையும் இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகங்களிலும் ஒவ்வொரு கலாசார உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் நூல் வெளியீடுகள், இறுவட்டு வெளியீடுகள், கலாசாரப் பெருவிழாக்கள் என்பவற்றோடு மட்டுமே இவர்களது பணிகள் நிறைவடைந்து விடுகின்றன. அதையும் தாண்டி, எஞ்சியுள்ள ஒருசில முதுசொம்களையாவது காப்பாற்றுவ தற்கான, ஆக்கபூர்வமான செயற்பாடு களில் இவர்கள் ஈடுபட்டதாக அறியமுடியவில்லை. மிகப்பெரிய பணச்செலவில் மாலை மரியாதை களுடனும், மேளதாளங்களுடனும் நடந்தேறுகின்ற கலாசாரப் பெருவிழாக்களுக்கு வீணாக வாரியிறைக்கப்படும் மனித உழைப்பையும், பொருளாதார



இழப்பையும் நமது அடையாளங்களைப் பேணுவதற்கு செலவிட்டால் அது காலங்காலமாக நிலைத்திருக்கக் கூடியதாக இருக்கும். கலாசாரப் பெருவிழாக்களில் கலந்து கொள்ளும் விருந்தினர்களைக் கௌரவிப்பதற்காகவும், தமது பிரதேச செயலகத்தின் பெருமையைப் பீற்றிக்கொள்வதற் காகவும் அணிவிக்கப்படும் மலர் மாலை களுக்கான செலவே மூன்று இலட்சத்தையும் தாண்டுவதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய தேவையற்ற ஆடம்பரத்துக்கான செலவுகளைப் பயனுள்ளதாக்க, ஒவ்வொரு கலாசார உத்தியோகத்தரும், ஒவ்வெரு பிரதேச செயலகமும் தமது பகுதியில் உள்ள வரலாற்றுச் சின்னங்களைத் தத்தெடுத்துப்பேண முன்வரவேண்டும்.

தனியே பிரதேச செயலகங்கள் ஊடாக மட்டுமே இப்பணியை மேற்கொள்ளாது குறித்த பகுதியில் உள்ள பொது அமைப்புகள், வர்த்தகர்கள், ஊர்ப் பெரியவர்கள் போன்றோரினையும் இவற்றில் ஒருங்கிணைத்துச் செயற் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் எமது பண்பாடு, வரலாறு, கலாசாரம் என்பன ஓரளவுக்கேனும் தழைப்பதற்கு வழிபிறக்கும். அதைவிடுத்து வருடத்துக்கு ஒருமுறைமட்டும் கலாசாரப் பெருவிழாக்களையும், ஆய்வுரைகளையும், நூல்வெளியீடுகளையும், இறுவட்டுத்தொகுப்பு வெளியீடுகளையும் நிகழ்த்துவதால் மட்டுமே எம்முடைய கலாசாரங்கள் எல்லாம் பத்திரமாக இருக்குமென எண்ணி இனியும் செயற்படுவோமாக இருந்தால், எம்முடைய எதிர்கால சந்ததிக்கு எமது வரலாறு எனச்சொல்லிக் கொள்வதற்கு எதுவுமே மிஞ்சப்போவதில்லை என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

***** – ஓவண்யன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ களைப்படைந்து விட்டாயா?

நீ களைப்படைந்திருக்கிறாயா?
இல்லையெனில் களைப்படைந்துவிடு!

நீ களைப்படையவில்லை எனில் நீ ஒரு போதும் (முக்தி) வீடு போய் சேரமாட்டாய். நீ களைப்படைந்தால் மட்டுமே நீ ஓய்வெடுப்பாய், நீ இல்லம் சென்றடைவாய். இவ்வுலகிலுள்ள அனைத்தும் உன்னைச் சலிப்படையச் செய்கிறது. ஒன்றே ஒன்று மட்டுமே சலிப்பைத் தருவதில்லை. அதுதான் அன்பு, ஏனெனில் அதுதான் இலக்கு. அதுதான் வீடு.

அன்பு செலுத்தி ஒருவரும் சோர்வடைய முடியாது. எப்போதாவது யாராவது "ஓ ... நான் அன்பு செலுத்திக் களைத்துப்போய்விட்டேன்" என்று சொல்லக் கேட்டிருக்கிறாயா? இது கேள்விப்படாத ஒன்று, ஏனெனில், அன்பால் சோர்வடையச் சாத்தியமே இல்லை.

நீ மற்றவர்களை நம்பவைப்பதில், அவர்களுக்கு விளக்கம் அளிப்பதில், அவர்களைச் சௌகரியமாய் வைத்திருப்பதில், திருப்தி செய்வதில் சோர்ந்து போகலாம். நீ மற்ற எல்லாவற்றாலும் சோர்வடைந்து இருக்கலாம். ஏன் மகிழ்ச்சியை அனுபவித்தலில் கூட சலித்துப் போயிருக்கலாம். உண்மையில் களைப்பு, சந்தோஷத்தின் நிழலே. எது உன்னை வீதியில் நிறுத்துகிறது என்றால், அது "சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டும்" என்ற உன்னுடைய ஆசைதான், எது உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்கிறது என்றால், அது அன்புடன் இருத்தல் தான்.

சந்தோஷத்தைத் தேடிச் செல்லும் பயணத்தில் நீ ஒன்றிலிருந்து மற்றொன்றுகக்குத் தாவுகிறாய். நீ சந்தோஷத்தைக் காண்கிறாய். ஆனால், நீ அங்கு போய்ச் சேரும்போது, அது இன்னும் சற்று தூரத்தில், வேறெங்கோ இருப்பதைக் கண்டு நகர்ந்து போய்க்கொண்டே இருக்கிறாய். அந்த தேடி அலைதல் உன்னைக் களைப்படையச் செய்கிறது.

வாழ்க்கையைக் கவனி. குழந்தைகள் தங்கள் பொம்மைகளுடன் விளையாடிச் சலிப்படைந்தால் அவர்களுக்குப் புதுப் பொம்மை தேவைப்படுகிறது. புதுப் பொம்மை சலிப்பைத் தரும்போது அவர்களுக்குப் புது மனிதர்கள் அல்லது புது விளையாட்டுகள் தேவைப்படுகின்றன. அவர்கள் சற்றுப் பெரியவர்களாகும்போது அவர்களது தேவைகளும் விளையாட்டுகளும் மாறுகின்றன. இது ஒரு சலிப்பிலிருந்து மற்றொரு சலிப்புக்கு மாறுவது போன்றது. எங்கே அந்த ஓய்வு? அந்த ஆதரவு? அந்த அமைதி? எங்கே அந்த ஆறுதலைத் தரும் - குளிர்ச்சியைத் தரும் நிலையான பேரானந்தமான அன்பு?

நீ வீடு போய்ச்சேரும் வரை, நீ ஓய்வு எடுக்கமுடியாது. பாதையில் சிறிது அமரலாம் - சிறிது ஓய்வு எடுக்கலாம் - ஆனால் அங்கேயே எப்போதும் இருக்க முடியாது. ஒரு இடைவேளை மட்டுமே உனக்குக் கிடைக்கும். வாகனம் செல்லும் வீதியில் நீ இளைப்பாற, காலைச் சற்று நீட்டி மடக்க ஒரு ஓய்விடம் இருக்கலாம். ஆனால் நீ அங்கே அமைதியாய் இருக்க முடியாது – ஏனெனில் உன் மனம் சொல்கிறது "நகர்ந்து செல்" என்று. இளமைப் பருவத்தில் உன்னுடைய தேடல் வேறு எங்கெங்கோ இருக்கிறது. எந்தப் புதுப்படம் காட்டப் படுகிறது, எங்கே போவது? எந்த விருந்திறகு போவது? என்பவற்றில். பிறகு நீ மேலும் சிறிது நகர்ந்து செல்கிறாய். பிறகென்ன? உனக்குச் சொந்தமாக வீடு கிடைக்கிறது, குழந்தைகள் வருகின்றனர்.

தனித்திருப்போர், தங்களை விடத் திருமணமானவர்கள் சந்தோஷமாக இருப்பதாக நினைக்கிறார்கள். திருமணமானவர்கள், திருமணமாகாதவர்களே மிகவும் சந்தோஷமாக – சுதந்திரமாக - இருப்பதாக நினைக்கிறார்கள். குழந்தைகளில்லாதவர்கள் குழந்தைகளுள்ளவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக நினைக்கிறார்கள். குழந்தைகள் இருப்பவர்கள் தங்கள் குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களானதும் அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்கும் என நினைக்கிறார்கள். வாழ்க்கை இப்படி

## களைப்பு யோசனையால் மட்டுமே வருகிறது செய்யும் வேலையால் வருவதில்லை

யாக நகர்ந்து கொண்டே இருக்கிறது. ஆனால் எல்லாமே சலிப்பைத் தருகிறது.

ஒரு ஆன்மீகப் பாதையிலிருந்து மற்றொரு ஆன்மீகப் பாதைக்கு மாறுகிறாய. இந்தப் பயிற்சி செய்கிறாய், அந்தப் பயிற்சி செய்கிறாய், அதுவும் சலிப்பைத் தருகிறது. "நான் இருபது வருடங்கள் தியானம் செய்திருக்கிறேன். தியானம் செய்வதில் சலித்துப்போய் விட்டேன். தயவு செய்து என்னை வேறு ஒரு தியானம் செய்யச் சொல்லாதே. போதும் போதும், எலலாமே போதும். பிராணாயாமம், அதை மறந்துவிடு அது மிகவும் சலிப்பானது".

ஒருவர் என்ன செய்கிறார்? எங்கே போகிறார்? ஆசைதான் உன்னைச் சோர் வடையச் செய்கிறது. உன் மனதில் உள்ள வேட்கைதான் உன் உடலை விட மனத்தை மிகச் சோர்வடைய வைக்கிறது. உனக்கு விருப்பமிருந்தால் பதினைந்து மணி நேரம் கூட அற்புதமாய் வேலை செய்யலாம். விருப்பமில்லையெனில் நான்கு மணி நேர வேலை கூடச் சோர்வைத் தரும். விருந்துக்கு தயார் செய்தல், அலங்கார வேலைகள் ஏற்பாடுகள் செய்தல் - இவை உனக்குப் பிடித்தால் பல மணி நேரங்கள், பின்னிரவு வரை கூட வேலை செய்வது களைப்பைத் தராது. ஆனால் உனக்கு விருப்பமில்லாத இடத்தில் வேலை செய்தால் பல காபி, தேநீர் இடைவேளைகள் எடுத்துக்கொள்கிறாய். அதற்குப் பின்னும் களைப்பை உணர்கிறாய்.

நீ எந்த வேலையையும் செய்யாமல் வெறுமனே உட்கார்ந்து சிந்திக்க மட்டுமே செய்கிறாய். களைப்பு என்பது யோசனையால் மட்டுமே வருகிறது, வேலையினால் வருவது இல்லை.

நீ தெய்வத்துடன் சேர்ந்து ஓய்வெடுக்க ஓரிடம் இருக்கிறது. அதுதான் அன்பு – அதுதான் சரணடைதல். ஆனால் நீ உண்மையிலேயே களைப்படைந்து கீழே விழுந்தால் அதுதான் சரணாகதி. இதைத்தான் காலங்காலமாய், ஞானம் பெற்ற குருமார்கள் சொல்லி வந்திருக்கிறார்கள். நீ உன் பயிற்சிகளை நீயாகவே செய்து வா. உன்னால் மேலே போக முடியாத போது அவை எல்லாம் சலிப்பை தருகையில் வந்து ஓய்வெடு. அதனால் தான் ஞானம் பெற்ற குருமார்களின் இடங்கள் "ஆசிரமங்கள்" என அழைக்கப் பட்டன. "ஆசிரமம்" என்றால் - எங்கு நீ வந்து உன் களைப்பைப் போக்கிக் கொள்கிறாயோ அந்த இடம் என்று பொருள். "ஆ" என்றால் இல்லாமல், சிரமம் என்றால் முயற்சி. எங்கே மன, உடல் ரீதியான சிரமங்கள் மறைகின்றதோ அந்த இடமே ஆசிரமம். சற்று அந்த ஒளியில் உட்கார். அங்கே ஒரு ஜோதி – ஒரு விளக்கு – உனக்காக எரிந்துகொண்டிருக்கிறது. அதன் வெளிச்சத்தில் நீ சற்று அமர்ந்தால் நீ ஒளிர்கிறாய். நீ செய்ய வேண்டியது எதுவுமில்லை. அது உனக்காகவே எரிந்து கொண்டிருக்கிறது. நீ செய்ய வேண்டியது இணைத்துக் கொள்ளுதல் மட்டுமே. சற்று அமர்ந்து "தெய்வீக உணர்வை" உணர் – தெய்வீகத்தின் பகுதியாய் இரு. அப்பொழுது இவ்வுலகில் எதனாலும் உன்னைக் களைப்படையச் செய்ய முடியாது என உணர்வாய். நீயே அன்பின் ஆதாரம் ஆகிறாய். நீ அதுவாக இருக்கும்பொழுது வேறு எதுவும் உன் னைப் பாதிக்காது.

தான் விரும்பியதை எல்லாம் அடைந்த ஒரு சக்கரவர்த்தி இருந்தார். ஆசியாக் கண்டம் முழுவதும் அவருடைய ஆட்சியின் கீழ் இருந்தது. இலட்சக் கணக்கான மக்கள் அவர் கட்டளைக்கு கீழ்ப்படிந்தனர். ஒரு கை சொடுக்கில் அவரால் இந்த உலகில் உள்ள எதையும் அடைய முடியும். ஆனால் இவை ஏதும் அவர் வீட்டைச் சென்றடைய உதவவில்லை. இது அவருக்கு மிகுந்த சோர்வைத் தந்தது. ஆன்மீக ஞானம் பெற ஒவ்வோர் இடமாக அலைந்தார். சில விஷயங்களைச் சேகரித்தார் – அது அவருக்குச் சிறிதுகாலமே பயன்பட்டது. இறுதியில் மிகவும் சோர்வடைந்து எல்லாவற்றையும் உதறித் தள்ளினார். ஆனால் அதுவும் அவருக்குப் பயன்தரவில்லை.

சக்கரவர்த்தியாக இருப்பதிலும் பயனில்லை, அதைத் துறந்ததிலும் பயனில்லை. ஒரு நாள் ஒரு மரத்தருகில் களைப்புற்று விழுந்தார். அவரால் ஒரு குருவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்படி குருவைக் கண்டாலும் அவரை அடையாளம் கண்டு கொள்வது அவ்வளவு சுலபமில்லை. அது இலையுதிர்க் காலம். அந்த விநாடி ஒரு காய்ந்த இலை மரத்திலிருந்து விழுந்தது. அவர் அந்த இலையையே பார்த்துக்கொண்டிருந்தார். அது காற்றுடன் கிழக்கே பறந்து சென்றது. பிறகு காற்று வடக்கு நோக்கி வீசியபோது வடக்கே சென்றது. அது காற்று போகும் திசையெல்லாம் மிதந்து சென்றது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அவர் தலையில் பொறி தட்டியது. தானே கர்த்தா என்ற எண்ணமும் ஆசைகளும் அவரை விட்டு நீங்கின. அத்தருணத்தில் அவர் அந்த நிகழ்வினாடியே முடிவற்றது, நிலையானது என்பதை உணர்ந்தார். அவர் வீட்டிற்கு (சுயத்திற்கு) திரும்பி வந்தார்.

தெய்வத்தால் கொடுக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு நிகழ் வினாடியுடன் சேர்ந்து மிதத்தல், கடந்ததை எண்ணி – வருந்தா மல் எதிர்காலத்தைப் பற்றிய எதிர்பார்ப்புகள் இல்லாமலிருத்தல், ஒரு காய்ந்த சருகைப் போல் வாழ்க்கையை அந்த விதமாய் வாழ்பவர் – ஞானசித்தி பெற்றவர் என்று சொல்லப்படுகிறது.

# யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பணம் கொடுத்து பராமரிப்பு பெறுவதற்கான வசதி 1919 இல் ஏற்பட்டது

**1919 மார்ச் 01**

யாழ்ப்பாண பொது வைத்தியசாலை ஆரம்பத்தில் ஆபத்துக்கு உதவும் வைத்தியசாலை என்றே அழைக்கப்பட்டது. Friend in need Society Hospital என்ற ஆங்கிலப் பதத்தைத் தமிழில் இவ்வாறு தான் மொழிபெயர்த்துள்ளனர்.

யாழ்.வைத்தியசாலையில் 01.03.1919 அன்று, பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதி (Paying Ward) திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப் பாணத்தில் அரசாங்க அதிபர்களாகப் பதவி வகித்த டைக், துவைனம் ஆகியோரின் பெயர்களிலேயே இந்த விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றவர்கள் அவரவர்களது மத, சாதி முறைகளுக்கேற்ப உபசரிக்கப்பட்டனர். யாழ்.பொது வைத்திய சாலை யில் பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதி காலப்போக்கில் நீக்கப் பட்டுவிட்டது. கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

### குறைந்த கட்டணத்தில் சிறந்த சேவை வழங்கப்பட்டது

தற்போது பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதி (Paying ward) சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது.

இந்தப் பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதியைப் பற்றி ஒரு சிறு விளக்கமளித்தால் நல்லது என நினைக்கிறேன். பணம் கொடுத்து பராமரிக்கும் விடுதியில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு பணம் படைத்தவராக இருந்தால் மட்டும் போதாது. சத்திரசிகிச்சை நிபுணர் ஒருவரின் சிபார்சுடனேயே அனுமதி வழங்கப்படும்.

தனியார் வைத்தியசாலைகளுக்கு நிகரான வசதிகள் இங்கு காணப் படுகின்றன. ஒவ்வொரு நோயாளிக்கும் இணைந்த குளியலறையுடன் கூடிய (Attach Bathroom)அறைகள் வழங்கப்படும். நோயாளியுடன் பராமரிப்பாளர் ஒருவர் கட்டாயம் இருபத்திநான்கு மணி நேரமும் நிற்க வேண்டும்.

மூன்று வேளை உணவு (நிறையுணவு), மூன்று வேளை தேநீர் அல்லது கோப்பி வழங்கப்படும். வெந்நீர் தேவையென்றாலும் அறைக்கே வரும். நோயாளியின் தலைமாட்டில் அழைப்பு மணி (Calling bell) இருக்கும். அழைத்தால் உடனே தாதி ஓடிவருவார். வாரம் இரு முறை கட்டில் விரிப்பு, குளியலறைத் துவாய், தலையணை உறை என்பன மாற்றப்படும். அன்பான, கனிவான உபசரிப்பு வழங்கப்படும்.

அறைக்குள் ஒருமேசையும் இரண்டு கதிரைகளும் காணப்படும்.

இவ்வளவு சேவைகளுக்குமாகக் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் நாளொன்றுக்கு 705/= ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. 2007ஆம் ஆண்டு கட்டண விவரமே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. இதைவிட வழங்கப்படும் மருந்துகள், செய்யப்படும் பரிசோதனைகள் என்பவற்றுக்கும் தனித்தனியே கட்டணம் அறவிடப்படும். எனினும் தனியார் வைத்தியசாலைகளுடன் ஒப்பிடுகையில் மிக மிகக் குறைந்த செலவில் பூரணசேவையைப் பெற்றுக் கொள்ளமுடியும். அப்பலோ, நவலோகா போன்ற பிரபல வைத்தியசாலைகளில் இல்லாத நவீன இயந்திரங்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் உள்ளன. ஒரேயொரு விடயம் என்னவென்றால் பணம் கொடுத்துப் பராமரிக்கும் விடுதி பெரும் பாலான சந்தர்ப் பங்களில் நிரம்பிக் காணப்படுவதால் அங்கு அனு மதி பெறுவது சிரமமான காரியமாகவே காணப்படுகின்றது. யாழ்.போதனா வைத்திய சாலையிலும் 'பேயிங்வார்ட்' மீண்டும் திறக்கப்படுமா என பல நடுத்தர வர்க்க மக்கள்கூட எதிர்பார்க்கின்றனர்.

இன்றும் நினைவில் கொள்ள...
அன்றைய ஞாபகம்... இங்கே!

**- தாண்டவன்**

# எமது சந்ததியினருக்கு பெயர் சூட்டும்போது மொழி மரபினை முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும்

## கவிஞர் சோ.பத்மநாதன் முன்வைக்கும் கருத்து



இலங்கையிலே ஓரளவு தூய தமிழினைப் பேசுகின்றோம். ஆனால் எமது சந்ததியினருக்கு பெயர் சூட்டும்போது மொழி மரபைக் கவனிக்காது பெயரினைச் சூட்டுகின்றோம். இந்த நிலை மாற வேண்டும். பெயர்சூட்டும்போது முதலில் மொழிமரபினை விளங்கிக் கொள்ள வேண்டும். மொழிக்கு முதலில் வரக்கூடிய எழுத்துக்கள் எவை, வரக் கூடாத எழுத்துக்கள் எவை என்பதற்கு விதி உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் கவிஞர் சோ.பத்மநாதன்.

அளவெட்டி மகாஜன மண்டபத்திலே நடைபெற்ற பண்டிதர் க.நாகலிங்கம் எழுதிய "மெய்ப்பாட்டியலும், மரபியலும்" என்ற இலக்கண நூல் வெளியீட்டு விழாவிலே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழில் சொற்களில் பல வழக்கொழிந்தும், பல புதிய சொற்கள் சேர்ந்தும் உள்ளன. நாம் வழக்கொழிந்த சொற்களை மீளவும் பயன்பாட்டிற் கொண்டுவந்து தமிழைச் செழுமைப்படுத்த முடியும்.

இன்று தமிழில் பழந்தமிழ்ச் சொற்கள் அருகிவிட்டதால், பல்வேறு வேற்று மொழிச் சொற்கள் புகுந்து விட்டன. இதனால் யாழ்ப்பாணத் தமிழ் பேசுவோரைக் காணும் தமிழ் நாட்டவர் "ஸார், நீங்க கேரளாவா?" எனக் கேட்கின்றனர்.

தமிழ் நாட்டில் தமிழிலும், தெலுங்கு மொழியிலும் 75 வீதமான சொற்கள் ஆங்கிலச் சொற்களாகக் காணப்படுகின்றன. இந்தநிலை தொடருமானால் இன்னும் ஒரு நூற்றாண்டு காலத்தில் தமிழ்மொழி அழிந்துவிடும்.

நாம் எமது பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுகின்றபோது ஸ.ஜ எனும் எழுத்துக்களை முதலாகக் கொண்டு பெயர்களைச் சூட்டுகின்றோம். இதனைத் தவிர்க்க வேண்டும். பெயரின் இறுதியில் ஸ், ஜ என்ற எழுத்துக்கள் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

எமது சமூகத்திலே பெருமளவானோர் புலம் பெயர்ந்துள்ளதால் அங்கு தமிழ் திரிபுபடுகின்றது. இதனைத் தடுத்து தூய தமிழ் பேசவும், தமிழ் மரபினை பேணவும் நாம் ஒவ்வொருவரும் முன்வர வேண்டும் - என்றார்.

துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

இன்று தமிழ்மொழி இலக்கியத்தைக் கற்கும் மாணவர்கள் மட்டுமே பழந்தமிழ் நூல்களைக் கற்கின்றனர். அவர்களும் தமது பாடத் திட்டத்துக்குள் வரையறுத்த சில அதிகாரங்களை மட்டுமே கற்றுக் கொள்கின்றனர்.

பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களைக் கற்க வேண்டும். தமிழ்மொழியினைக் கற்பவர்கள் மேலும் அதில் ஆழ்ந்து கற்றுப் புலமைபெற வேண்டும்.

விஞ்ஞான, சமூகவியல் ஆய்வுகள் இன்று கண்டுபிடிக்கும் பல மனவெழுச்சி, மெய்ப்பாட்டு உண்மைகளும் எமது பழந் தமிழ் நூல்களில் உள்ளன. இவற்றை எல்லாம் மாணவர்கள் கற்க வேண்டும்.

மெய்ப்பாடுகளின் மூலம் சமூகவிழுமியங்களையும், வாழ்வியல் நியதிகளையும் காண முடியும். பண்பாட்டிலும், கலையிலும் இன்று நாம் தொலைத்த பல விடயங்களை மீளுவதற்கு இந்த நூல் எமக்குப் பயன்படும். இதனால் சமூகத்தில் இன்றிருக்கும் பண்டிதர்கள், பண்டித மணிகள் என்போரைத் தேடிக் கௌரவிக்க வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்விலே நீதிபதி திருநாவுக் கரசு, ஆறு திருமுருகன் மற்றும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

(204-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்காக இருப்பவர் யார்?

வாஸந்தி

''எனக்காக நான் இல்லை என்றால் எனக்காக யார் இருப்பார்? எனக்காக மட்டுமே நான் இருந்தால், நான் யார்? இப்போது இல்லையென்றால், எப்போது?''

யூத மத போதகர் ராபி ஹில்லெலின் புகழ் பெற்ற வாசகங்கள் இவை.

நாஜிக்களின் கொடுமைக்கு யூதர்கள் எந்த எதிர்ப்பும் காண்பிக்காமல் அடிபணிந்து தங்களை மாய்த்துக்கொண்டார்கள் என்கிற குற்றச்சாட்டு வெகுகாலமாக விவாதப் பொருளாகி வருகிறது. ''அந்தக் குற்றச் சாட்டு தவறானது, வரலாற்றை கவனத்தில் கொள்ளாதது , ஒருதலைச்சார்பானது'' என்றார் நாஜி கைதிகள் முகாமில் ஓராண்டு சிக்கிக்கொண்ட இத்தாலிய யூத எழுத்தாளர் ப்ரீமோ லெவி .

''எதிர்ப்புத் தெரிவிக்கவும் அரசியல் மற்றும் மனோதத்துவ ரீதியிலான சூழ்நிலை சாதகங்கள் தேவைப்படுகின்றன. அவை இல்லாத நிலையில் எதிர்ப்புத்தெரிவிக்க முடியாமல் போகும். ஆனால் யூதர்கள் முற்றிலுமாக எதிர்ப்புத் தெரிவிக்காமல் அடிபணிந்தார்கள் என்று சொல்லமுடியாது. அந்த சமனற்ற போராட்டத்தில் சிலர் மிகத் தீவிரமாக தங்களால் இயன்ற வகையில் எதிர்ப்பு தெரிவித்தார்கள்.'' - இப்படிக் கூறும் லெவிக்கு அதில் சொந்த அனுபவம் இருந்தது. அதிர்ஷ்டவசமாக யுத்தம் முடிவுக்கு வந்ததும் லெவிக்கு விடுதலை யும் கிடைத்தது. தனது அனுபவங்களை வைத்து நாவல் ஒன்றை எழுதினார். 'இப்போது இல்லையென்றால் எப்போது?' என்று நாவலுக்கு தலைப் பிட்டார். தமது மொழியில் அந்த மானுட அழித்தலின் அத்துமீறலை விவரிக்க வார்த்தைகளே இல்லை என்று அந்த நூலை எழுதும்போர் அவர் அங்கலாய்த்தார். ''சிலவற்றைத்தான் சொல்லமுடியும். எல்லாவற்றையும் சொல்ல வார்த்தைகளும் இல்லை. அதைக்



கேட்கும் பொறுமையும் எவருக்கும் இல்லை. அது முடிந்துபோன கதை. மறக்கவேண்டிய கதை.'' என்றார்.

சமனற்ற போராட்டம் என்பது இதில் முக்கியமானது; ஹிட்லரின் சர்வாதிகார சக்தியின் முன்,

ஹிட்லரின் வக்கிரமான யூத இன ஒழிப்பு வெறிக்கு முன் யூத சமூகம் மிரண்டு ஆட்டு மந்தைபோல சாவுக்கிடங்குக்கு நடந்ததற்கு லெவி சொன்னது போல சரித்திர, அரசியல் காரணங்கள் இருந்தன.

''கிறிஸ்தவ வரலாற்றால் சபிக்கப்பட்ட, பாவப்பட்ட இனம் யூத இனம். மந்தை மந்தையாக நஞ்சு வாயு கூடத்துக்குள் அவர்கள் இழுத்துச் செல்லப்படுவதை மற்றவர்கள் வாய்மூடிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிலரை மீட்ட பெருமையும் சில வெளியாருக்கு உண்டு. பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் புரட்சி வெடிக்க முடிந்தது - பல நூற்றாண்டு காலமாக நடந்த மன்னராட்சி யைத் தூக்கி எறிய முடிந்தது - அனைத்து மக்களும் கோபமுற்று எழுந்ததால்.

யூதர் களுக்கு நடந்த அக்கிரமம், ஒரு தலைப் பட்சமான அநீதி. அதனால்தான் 'எனக்காக நான் இல்லையென்றால் எனக்காக யார் இருப்பார்?' என்கிற கேள்வி லெவியை ஆட்கொண்டது.

ஜனநாயகம் என்கிற கருத்தியலும் மனிதஉரிமை மீறலும் மிக உரத்துப் பேசப்படுகிற இந்த நாளிலும் இந்த வாசகம் அர்த்தம் கொண்டதாகத் தோன்றுகிறது. வினோதம் என்னவென்றால் எந்த நாட்டில் அராஜகம் நடந்தாலும், மனித உரிமை மீறல் நடந்தாலும் அதைக் கேள்வி கேட்கவும், பாதிக்கப்பட்டவர்களுக்காகக் குரல் எழுப்பவும் வெளியாரால் முடிகிறது. விஞ்ஞான வளர்ச்சியில் உடனுக்குடன் செய்தி பரப்பி அதைப் பற்றின பிரக்ஞையை எழுப்ப முடிகிறது. ஆனால், இதற்குமேல் வெளியாரால் எதுவும் செய்யமுடிந்ததாகச் சமகால சரித்திரம் இல்லை-- அந்தக் காரணத்தைச் சொல்லி அத்துமீறி ஒரு வல்லரசு அங்கு படையெடுத்து மாற்று அரசை வைத்த உதாரணங்கள் எல்லாம் மிக மோசமான விளைவுகளையே ஏற்படுத்தியிருக்கின்றன. ஏனென்றால் இத்தகைய படையெடுப்பும் ஆக்கிரமிப்பும் சுய லாபத்துக்காகவும் அரசியல் காரணங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டவையே தவிர மனிதாபிமான உணர்வுடன் மேற்கொள்ளப்பட்டவை அல்ல. அரசின் முடிவுக்கு அந்த நாட்டு மக்களின் விருப்போ வெறுப்போ காரணமில்லை.

ஈராக்கில் அமெரிக்கப் படையெடுப்பு அமெரிக்க மக்களுடைய விருப்பம் சார்ந்ததல்ல. படையெடுப்புக்குப் பிறகு ஈராக் மக்கள் கலாசார ரீதியிலும் உள ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பட்டிருக்கும் இழப்பும் சோகமும் அளவிடமுடியாதவை. 1971 கிழக்குப் பாகிஸ்தானுக்குள் இந்தியா படையெடுத்த பிறகு அங்கு பல காலமாக இருந்த அரசியல் கொந்தளிப்பின் விளைவு இன்னமும் அம்மக்களை பாதிக்கிறது. பயங்கரவாதிகளின் கூடாரமாகிவிட்டது. இந்தியாவுக்கு எதிராகச் செயல்படுகின்றன அவை. பாகிஸ்தானுடன் நிரந்தரபகை ஏற்பட்டுவிட்டது. பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சித் தலைவி இந்திரா காந்தி சர்வாதிகாரியாய் இருந்த காலகட்டம் அது. கிழக்கு பாகிஸ்தான் மக்கள் தங்களை மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கக் கோரினார்கள் என்ற காரணம் சொல்லி சுய லாபத்துக்காக , திட்டமிட்டு எடுத்த அராஜக முடிவு அந்த யுத்தம்.

இப்போது மத்தியில் இருக்கும் காங்கிரஸ் அரசுக்குப் பெரும்பான்மை பலம் இல்லை. அது ஒரு நொண்டிக்குதிரை.

இலங்கை இனப்பிரச்சினை விஷயத்தில் காங்கிரஸ் கட்சி சூடுபட்ட பூனை. உதவி கேட்டார்கள் என்று 1987 இல் உதவப் போய் நோக்கமே எதிராகப் போய் பெயர் கெட்டதுமில்லாமல் தனது பிரகாசமான தலைவரையும் பலி கொடுத்தது. அதில் ஏற்பட்ட புண் ஆற முடியாத வடுவை ஏற்படுத்திய ஒன்று. அந்த ஆறாக் காயத்தை ஏற்படுத்தியவர்களுடன் இலங்கை அரசு பயங்கரப் போரில் இருக்கிறது. வெளியே செல்ல வசதியில்லாமல் அங்கு தங்கிவிட்ட அப்பாவி ஈழத்தமிழர்கள் தாக்குதலில் மாட்டிக்கொண்டு படும் வேதனையை விவரிக்க எமது மொழியிலும் போதிய வார்த்தைகள் இல்லை. இதைவிடக் கொடுமை அவர்களின் பெயரில் தமிழ் நாடு இரண்டு படுவது, தார்மீக எல்லைகளைக் கடந்து காட்டுமிராண்டிகளாய் தமிழர்கள் ஆனது, சர்வதேசப் பரிணாமம் கொண்டுவிட்டதை மாநிலப் பிரச்சினையாக்கி எதிர்க்கட்சிகள் குளிர் காய்வது, தமிழ உணர்வு, தொப்புள் கொடி உறவு என்கிற மந்திர வார்த்தைகளைச் சொல்லி இதை அரசியல் ஆதாயத்துக்காகக் கிளப்பிவிட்ட பெருமை, ஊதிப் பெரிதாக்கிவிட்ட அறியாமை - இவை எல்லாம் மாண்புமிகு முதலமைச்சரையே சேரும்.



இந்த விஷயத்தில் மத்திய அரசு ஒன்றும் செய்யப்போவதில்லை, ஏனென்றால் அரசியல் ரீதியாக அதற்கு லாபம் எதுவும் இல்லை என்பது தெளிவானதும் அமைதி காக்கவேண்டும் என்று மருத்துவமனையிலிருந்து வேண்டுகோள் விடுக்கிறார் முதல்வர். ஆனால், பிரச்சினை பின்னுக்குத் தள்ளிப் போய்விடக்கூடாது. மனிதநேயத்தினால் இல்லை- அரசியலுக்காக. அனல் பூத்துவிடாமல் அடிக்கடி ஊதிவிடுவது போல , அது தொடர்ந்து உலவிக்கொண்டிருக்கவேண்டும் என்றே அவர் நினைப்பதாகத் தோன்றுகிறது.

அவர் கவலைப்படவேண்டியதில்லை. தமிழ் நாட்டில் அரசியல் நீக்கமற எல்லாத் துறைகளிலும், வளாகத்திலும் இலங்கைத் தமிழர் பிரச்சினை நுழைந்துவிட்டது. இலங்கைத் தமிழர்கள் சோர்ந்துவிடவேண்டாம். அவர்களுக்காகக் குரல் கொடுக்க, ஊர்வலம் போக, பேரணி நடத்த, தீக்குளிக்க இங்கு நிறையப் பேர் இருக்கிறார்கள். இவர்களும் எமது அரசியல்வாதிகளால் ஏமாற்றப்படுபவர்கள். அல்லது 15 நிமிட பிரபல்யத்துக்காக அத்துமீறுபவர்கள்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையை முன்னிறுத்தி வரலாறு காணாத வன்முறை சென்னை உயர் நீதி மன்ற வளாகத்தில் நடந்ததை நாடு முழுவதும் ஒரு மூன்றாம்தர சினிமாக் காட்சியைப் பார்ப்பது போலப் பார்த்தது. நீதி மன்றத்தில் நடந்த அந்த அநியாயம் ஒவ்வொரு தமிழனையும் தலைகுனிய வைப்பது. காரண காரியங்கள் எதுவாக இருந்தாலும் பொலீஸுக்கும் வழக்கறிஞர்களுக்கும் இடையே நடந்த அந்த பயங்கர மோதல் மகா கேவல நிலையைத் தொட்டது. வழக்கறிஞர்களின் வன்முறையை ஆதரிப்பவர்களுக்கும் பொலீஸின் அடக்குமுறையை ஆதரிப்பவர்களுக்கும் இடையேயும் வேறு சண்டை. இத்தனை அசிங்கத்தில் மற்றொரு அசிங்கம் இது ஜாதிச் சண்டையாக உருவம் எடுத்திருப்பது.

பயங்கரவாத அமைப்பு என்று சர்வதேசக் கண்டனத்துக்கு ஆளான புலிகளை எதிர்ப்பவர்கள், புலிகள் ஆயுதத்தைக் கீழே வைத்து அரசியல் தீர்வுக்கு ஒப்புக் கொண்டால் தமிழருக்கு விடிவு என்று நினைக்கிறார்கள், தமிழ் உணர்வு அற்றவர், ஆதிக்க ஜாதியினர் என்கிற ஒரு மிக அபாயமான, ஜனநாயகத்துக்கு விரோதமான எண்ணம் விதைக்கப்படுவதும் உரமிட்டு வளர்க்கப்படுவதும் திட்டமிட்ட அரசியல். மாறுபட்ட கருத்து கொண்டவர்களுக்கு தமிழ் நாட்டில் இடமில்லை என்று சொல்லப்படும் பாசிசப் போக்கு அது.

நடுநிலைப் பேச்சு என்பதற்கே வழியில்லாமல் தங்களது பேச்சை ஆதரிப்பவரே தமிழர் ,, மற்றவர் துரோகிகள் என்று நினைக்கும் இவர்களுக்கும் இலங்கையிலுள்ள பேரினவாதிகளுக்கும் வித்தியாசமில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தமிழ் மாநிலப் பிரச்சினையாக்கமுடியாது. அது இந்தியாவின் அரசியல் சுய லாபத்துக்காகமட்டுமே என்பது டில்லி அரசுக்குத் தெரியும்.நீங்கள் எட்டடி பாய்ந்தால் அவர்கள் பதினாறு அடி பாயும் எத்தர்கள். இந்த அரசியல் நாடகங்களால் தங்களுக்கு எதுவும் லாபமில்லை என்று இலங்கைத் தமிழர்கள் விரைவில் புரிந்து கொள்வார்கள். பாவம் அவர்கள்.

ஆனால், எனக்கு நம்பிக்கை இருக்கிறது. யூதர்கள் ஆச்சரியமாக சாம்பலிலிருந்து மீண்டு எழுந்ததுபோல இலங்கைத் தமிழர்களும் எழுவார்கள். நிமிர்ந்து நடப்பார்கள் வெளியாரின் உதவி இல்லாமல். சுயமாக.

''எனக்காக நான் இல்லை என்றால் எனக்காக யார் இருப்பார்? எனக்காக மட்டுமே நான் இருந்தால், நான் யார்? இப்போது இல்லையென்றால், எப்போது?'' ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# IDM e-KIDS

E-Mail: idmdigitalsolutionjaffna@yahoo.com

ICT SKILLS FOR THE INFORMATION AGE

**From: Pre School To Level 10**

ON COMPLETION OF LEVEL 10
YOU WILL GET AN INTERNATIONALLY
RECOGNIZED CERTIFICATE
of

**Diploma in ICT Skills
From
BTEC - Edexcel (UK)**

THROUGH OUR **Foundation Diplomas**
**You can Proceed towards** DEGREE STUDIES

To Be The Best Join The Very Best

You can directly come to the office and fixed the suitable time table (8.30a.m. - 4.30p.m.) including Saturday & Sunday



**Curriculum Standards:-**
- EDEXCEL - United Kingdom
- NEST - National Educational Technology Standards - United States of America
- EdTech - Enhancing Education Through Technology- United States of America

**IDM Digital Solutions (Pvt) Ltd.**
(Member of the IDM Group of Companies)
114, Navalar Road, Jaffna. Tel No: 021 2224142



## திருமண சேவை

சுலபமான வாழ்க்கைத்துணை தெரிவுக்குச் சுய தெரிவு முறையே! சுயதெரிவு முறை பற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள், புதன், வெள்ளி மாலை வேளைகளில் மூத்த புகழ்பூத்த - சுயதெரிவுமுறை முன்னோடி- தனிமனித நிறுவுநர் - சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர், மாயெழு வேலமுதனுடன் தொடர்புகொள்க.

கொழும்பு நேரடித் தொலைபேசி:
2360488, 2360694, 4873929.

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 6ஸ்ரீ XXXX தொடரிலக்கமுடைய டொயாட்டோ கொரெலா கார் உடன் விற்பனைக்குண்டு. ஓட்டோ, மோட்டார் சைக்கிளுக்கு மாற்றியும் கொடுக்கப்படும்.

தொடர்பு: 174/16, கோயில் வீதி ,யாழ்ப்பாணம்.
[கைலாசபிள்ளையார் கோயில் அருகில்]

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1964, பூராடம் 2ஆம் பாதம், செவ்வாய்க்குற்றமற்ற, O/Lபடித்த லண்டனில் தொழில்புரியும் மணமகனுக்கு லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ் ஆகிய நாடுகளின் நிரந்தர பிரஜாவுரிமையுள்ள படித்த அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். ஜாதகம், குடும்ப விவரத்துடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இலக்கம் 5176
மே/பா உதயன். (83064)

## Wanted

1. MO/RMO for full / Part time Duties
2. Nursing Officers
3. Trainee Nurses (GCE A/L)

Apply giving full Bio data Medical **Director,**
**Central Nursing Home (Pvt) Ltd**
***350, Palaly Road, Thirunelvely, Jaffna.***

## House for sale

4 roomed house with an annexed unit and with a garden, close to Secretariat on kandy road for immediate sale.
Inspection & offers by appointment
Tel.Phone No. 0777162581



## மரண அறிவித்தல்

### கனகராஜா அரசரட்ணம்

*('தமிழர் செந்தாமரை' பிரதம ஆசிரியர்)*



கொழும்பைப் பிறப்பிடமாகவும் Torontoவை வதிவிடமாகவும் கொண்ட கன்க.அரசரட்ணம் ('தமிழர் செந்தாமரை' பிரதம ஆசிரியர்) 24.02.2009 அன்று Torontoவில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசு கனகராஜா - ஜெயலட்சுமியின் அன்பு மகனும், தம்பிராஜா - அமரர் பார்வதி அவர்களின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வினோ, அஜந்தன் ஆகியோரின் அன்புத் தந் தையும் சிந்துவின் மாமனும் மதுமிதாவின் அன்பு அப்பப்பாவும் விஜயராஜா - மீனா அவர்களின் சம்பந்தியும் புஸ்ப, அமரர்களான இராஜரட்ணம், செல்வரட்ணம், நவரட்ணம் மற்றும் மனோரஞ்சிதம் (கனடா), இராஜேஷ்வரி, குணரட்ணம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் அமரர் சிவராம், மனோகரி, செந்தில், மனோ (கொழும்பு), அமரர் இராஜேஷ்வரன், ஆனந்தன், ஜெனி (கொழும்பு), பேபி, ரஞ்சன், பவா, ஜெயந்தி, சந்திரன், மோகன் (கனடா), ஆனந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2009) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 4 மணிமுதல் இரவு 9 மணிவரையும், இல. 3280, Sheppard Avenue East, Scarborough (Warden & Sheppard )இல் உள்ள Highland Funeral Homeஇல் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை (02.03.2009) திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை அதே இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு பின்னர் 12 மணியிலிருந்து ஒரு மணிவரை 375, Mount Pleasant Road, (Mount Pleasant & St. Clair) Torontoஇல் அமைந்துள்ள Mount Pleasant Cemetry இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி - ராஜி, மகன் - வினோத்.
416-707-6262, 905-477-0076, 416-824-8815.



## VACANCIES FOR DRAUGHTSMEN

Applications are hereby invited from suitable persons, who possessthe following qualifications, to fill the existing vacancies immediately

1. N C T in Draughtsmanship or equivalent with Auto cad, and
2. Minimum two years experience in any Government or Private establishment.

Applications with Bio data etc shall be forwarded to the following address, on or before 07.03.2009
Manager Human Resources
Euroville Engineers and constructors (PVT) Ltd.
866, Point Pedro Road
Nallur, Jaffna.



## 37ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

### திருமதி புஸ்பராணி சிவராஜரட்ணம்



"பாசத்தால் பண்பு படைத்து
நேசத்தால் எமையணைத்தீர்
ஆண்டு நூறு சென்றாலும்
நிலைத்திருப்பீர் எம் மனதில்"

கடந்த (24.01.2009) அன்று அணைந்த எமது குடும்ப விளக்கின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மண்ணில் 02.12.1940
விண்ணில் 24.01.2009

குடும்பத்தினர்.

"சிவவாசா",
இளவாலை வடக்கு,
இளவாலை. (83133)


## அபிநயப் பாடல் திறன் விழா இன்று

சுழிபுரம், மார்ச் 1

வலி.மேற்கு பிரதேச சபையும் வலி. மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இணைந்து நடத்தும் முன்பள்ளிச் சிறார்களின் அபிநயப் பாடல் திறன்விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சித்தன்கேணியிலுள்ள மேற்படி சங்கத்தின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி மறுசீரமைப்பினை முன்னிட்டு நடத்தப்படும் இவ்விழா ஆசிரியர் சங்கத் தலைவி வாமதேவன் பூரணி தலைமையில் இடம் பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட்டு இந்து கல்லூரி அதிபர் திருமதி ஜெகதீஸ்வரி அருள்மயம் கலந்துகொள்வார். (202-28)

## மதிப்பீட்டுப் பரீட்சை

மண்டுவில், மார்ச் 1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6, 9, 11 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீட்டுப் பரீட்சை செயற்பாட்டுத் தொடர் - 4 எதிர்வரும் வெள்ளிக்கிழமை சகல பாடசாலைகளிலும் நடைபெறும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-59)


## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
பொன்னுத்துரை பொன்னம்மா

தோற்றம் 17.08.1934
மறைவு 12.03.2008

திதி: பூர்வபக்க பஞ்சமி

ஓராண்டு சென்றாலும் அழியாது
உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில் கிழக்கு. (83118)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

பிறப்பு 04 ✱ 06 ✱ 1920



இறப்பு 30 ✱ 01 ✱ 2009

### திருமதி சின்னத்துரை சின்னம்மா


கடந்த (30.01.2009) இறைவனடி சேர்ந்த எமது தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் (27.02.2009) வெள்ளிக்கிழமை வில்லூன்றிப் புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிறவுண் வீதி,
கலட்டிச்சந்தி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள். (83126)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவத்துறையை விஞ்ஞானத்தின் திறவுகோல் கொண்டு மேம்படுத்துவோம்!




சென்றவாரக் கட்டுரையில் சுதேச வைத்தியமும் மேலைத்தேய வைத்தியமும் இணைந்து செய லாற்றும் காலம் கனிய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி யிருந்தேன்.

இனி, அண்மையில் வெளி யிடப்பட்ட 'மூலிகைகளுக்கான திறவுகோல்'' (KEY TO MEDICINAL PLANTS) என்ற நூலின் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ளக் கிடைத்த வாய்ப்பையடுத்து எனது மனதிலெழுந்த கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வது பொருத்தமாயிருக்கும் என எண்ணுகிறேன்.

**உறவுப் பாலத்தை எடுத்துக் காட்டிய மூலிகைகளுக்கான திறவுகோல் எனும் நூல்**

இம்மாதம் 14 ஆம் திகதி யன்று(14.02.2009) சித்தவைத்திய கலாநிதி சிவசண்முகராசா அவர்களால் எழுதப்பட்ட ''மூலிகைகளுக்கான திறவுகோல்'' (KEY TO MEDICINAL PLANTS) எனும் நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம் பிள்ளை அவர்களினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. சித்த வைத்தி யத்துறையில் சிறந்த மாணவனாகத் திகழ்ந்து, பின்னர் அதே துறை யிலேயே சிரேஷ்ட விரிவுரை

## மூலிகைகள் குறித்து தகவல்களை உள்ளடக்கியுள்ள அகராதி இன்றைய காலத்துக்குப் பெரும் பயன் தரத்தக்க பொக்கிஷம்

யாளராகப் பணியாற்றும் இவரது [illegible] ஆவது நூல் இதுவாகும். இந்நூல் சார்ந்த இதன் வெளியீட்டுக்காக கலைப்பீட, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீட, விஞ் ஞான பீட (தாவரவியல் துறை) மற்றும் விவசாய பீட (விவசாய உயிரியல்துறை) சார்ந்தவர்கள் உரையாற்ற அழைக்கப்பட்டிருந் தார்கள். இது தவிர சித்திவைத்தியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் அங்கே பிரசன்னமா யிருந்தார்கள். வழமையாக சுதேச வைத்தியர்கள் தங்களது வைத்திய இரகசியங்களை வெளியே சொல் வதில்லை என்னும் குறைபாடு நெடு நாளாகவே இருந்து வருகிறது. அதிலும் பரம்பரை வைத்தியர்கள் அந்த வைத்திய நுணுக்கத்தைக் குடும்ப இரகசியமாகவே வைத்திருப்பார்கள். தந்தை இறக்கும் முன்பு மட்டும் மகனின் காதில் சொல்லிச் சென்றுவிடுவாராம். அவ்வளவு இறுக்கமாக இருக்கும் இம் மருத்துவ முறைகளில் மருத்து வர்களில் நல்லதொரு புரிந்துணர்வு ஏற்பட்டிருக்கிறது. சித்த மருத்துவத் துறையை விஞ்ஞானத்தின் திறவு கோல் கொண்டு மேம்படுத்த முயற் சித்திருப்பது நல்லதொரு சகுனம்.

**வெவ்வேறு துறைகளின் இணைப்பின் அவசியம்**

இரண்டாவதாகப் பல்கலைக் கழகத்திலுள்ள ஏனைய துறைகளு டன் இணைவதன் மூலமாகச் சித்த வைத்தியத் துறையை மேம்படுத்தும் உத்தியைக் குறிப்பிட இயலும். இது அவசியமானதும் தேவையானதும் கூட. பலகலைகளைக் கொண்ட கழகமாக இருந்தாலும் ஒவ்வொரு கலைகளுக்குள்ளும் தொடர்புகள் உண்டு. இவ்வாறான தொடர்புகள் மேம்படுத்தப்படும்போது அதன் மூலமாக அந்தந்தத் துறையும் இணை கின்ற துறைகளும் விருத்தியடைய வாய்ப்புக் கிடைக்கும். சக்தி இல்லை யேல் சிவம் இல்லை. சிவம் இல்லை யேல் சக்தி இல்லை. அது உணர்த்து வது இதைத்தானே? அந்த வகை யிலே அனைத்துப் பீடங்களைச் சார்ந்தவர்கள் இந்நூல் வெளியீட்டிற்கு வரவழைக்கப்பட் டிருப்பதிலிருந்து சித்த வைத்தி யத்றை ஏனைய துறைகளுக்குள் இணைப்பைப் பெறுவதற்கான திறவுகோலாகவும், ஏனைய துறைகள் சித்த வைத்தியத் துறையுடன் இணைக்கப்படுவதற் கான திறவுகோலாகவும் அமைந்திருந் ததை அதில் ஆற்றிய சிறப்புரையில் சுட்டிக்காட்ட வேண்டியதாயிற்று.

மூலிகைகளை இனங்காண்பதற் கான திறவுகோல் எனப் பெயரிடப்பட் டிருந்தாலும், எனது பார்வையில் சித்த வைத்திய துறையின் திடமான அபி விருத்திக்கான ''திறவுகோல்'' என்றே இதனைக் கருதக் கூடியதாயுள்ளது.

**மூலிகைக்கான திறவுகோல் - நூல் அகராதி**

கிடைக்கக் கூடிய மூலிகைகள் அனைத்தையும் வரிசைப்படுத்தி அவற்றினது பொதுப்பெயர், தாவரவியல் பெயர், குடும்பப் பெயர், சிங்களப் பெயர் எனப் பட்டியலிட் டிருக்கின்றார் நூலாசிரியர். இங்கே சமஸ்கிருதப் பெயரும் முன்னிலைப் படுத்தப்பட்டிருக்கிறது. இதன்மூலம் இவ் அகராதியைச் சித்த மருத்துவத் துறையினரும், விஞ்ஞான பீடத்தின ரும் குறிப்பாகத் தவாரவியல் மற்றும் இரசாயனவியல் துறையினரும், விவசாய பீடத்தினரும், மொழிகளுக் கிடையிலான தொடர்புகளாதலினால் கலைப்பீடத்தினரும் பயன்படுத்தக் கூடிய நூலாக இது அமைகின்றது. உருவாக்கம் சித்தவைத்தியத் துறையானாலும் ஏனைய துறை களுக்குத் தேவைப்படும் பயன்படும் நூலாக இருக்கின்றதல்லவா! இது தானே அந்தத் துறைகளுக்கிடை யிலான உறவுப்பாலம்.

குறிப்பாக மூலிகை பற்றிய ஆய்வில் ஈடுபடும் எவருக்கும் அம் மூலிகை சார்ந்த பெயரைச் சரியாக இனங்கண்டு கொள்வதற்கு இந்த அகராதி உதவும். ஒவ்வொரு பாடசாலையிலும் நூலகங்களிலும் இருக்க வேண்டிய அகராதி இது.

மேலைத்தேய மருத்துவத்துறை யினருக்கும் இந்த அகராதியினால் பயன் உண்டு. உதாரணமொன்றுடன் இதற்கு விளக்கமளிக்க முற்படு கின்றேன்.

**அல்லைக்கிழங்கும் அவலச் சாவும் - உண்மைச்சம்பவம்**

கல்வயல் பகுதியிலிருந்து மாமனும் மருமகனும் என இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிசிகிச்சைப் பிரிவில் அனுமதிக் கப்பட்டார்கள். அங்கிருந்த வைத்தி யர்கள் விரைந்து செயற்பட்டும் மாமனைக் காப்பாற்ற முடியவில்லை. மருமகன் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார். காரணமாகக் கூறப்பட்டது, அல்லைக்கிழங்கு சாப் பிட்டதால் ஏற்பட்ட மூச்சுத்திணறல். இருக்கும் உயிரையாவது காப்பாற் றியாக வேண்டுமே! அனுமதிக் கப்பட்ட வார்ட்டிலிருந்து எனக்குத் திடீரென ஒரு தொலைபேசிச் செய்தி. அல்லைக்கிழங்கின் தாவரவியல் பெயர் என்ன? வழமையாக அல் லைக்கிழங்கு பற்றி விவசாய பீடத்தில் கற்பித்தலில் அதிகம் பேசப்படாவிட்டாலும், டயஸ் கோரியா என்பது இதனது தாவரவியல் பெயர் என ஞாபகத்திலிருந்தது. இருப் பினும் சரியாகச் சொல்லவேண்டும் என தோன்றி யதால் மறைந்த தாவர வியல் ஆசான் திரு.குக தாசன் அவர் கள் எழுதி வெளிக் கள நிலையத் தால் பிரசுரிக்கப் பட்ட தாவரங் கள் பற்றிய நூல கராதியிலிருந்து தாவரவியல் பெயரை அறிவித்தேன்.

அறிவித்த கையுடன் அந்த வார்ட் டிலிருந்து வைத்தியர் ஒருவர் விவசாய பீடத்தில் நின் றார். நோயா ளிகள் உண்ட மீதிகளான கிழங்கைக் காட்டி னார்கள். இது அல்லைக் கிழங்குதானா? அல்லைக் கிழங்குதான் என்பதை எனது அறிவிலிருந்தும் அண்மையில் இருந்த பரம்பரை வைத்தியரிடமும் காட்டி உறுதியாகக் கூறினேன். ஆனால் அவித்துச் சாப்பிட்ட அல்லைக்கிழங்குடன் கலப்பைக் கிழங்கும் கடிபட்ட நிலையில் இருந்தது. கிழங்கிலிருந்த நஞ்சு எது எனத் தெரிந்தால் அந்த நச்சுத் தன்மையை இல்லாதொழிக்கும் ANTIDOTE எது எனத் தெரிந்தால் தானே இருக்கிறவரையாவது காப்பாற்றலாம்.

இன்ரர்நெட் மூலமாகத் தேடியதில் பல விடயங்கள் தெரியவந்தன. அல்லைக்கிழங்கின் தாவரவியல் பெயருக்குக் கிழே DIASCOREA PENTAPHYLLA எனவும், அதிலுள்ள டயஸ்கோறின் (Diascorin) என்ற நச்சுத் தன்மை கிழங்கினது தோலில் காணப்படுவதாகவும், கிழங்கிலிருந்து தோலை அகற்றி, தொடர்ச்சியான நீரோட்டத்தில் கழுவி, அந்த நச்சுத் தன்மையைப் போக்கிய பின்ன ரேயே அவித்து உணவாக உட்கொள்ள லாம் என்றிருந்தது. கிட்டத்தட்ட மர வள்ளிக்கிழங்கின் தோலில் காணப் படும் சயனைட்டு நஞ்சுபோன்ற தன்மை இது. ஆனால் இவ்வளவு நஞ்சு இருந்தும் அல்லைக் கிழங்கு பசி பட் டினி ஏற்படும் பஞ்சப்பிரதேசத்து உணவாக மக்களால் பயன்படுத் தப்படுவதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இவ்வளவு விடயங்களைக் கருத்தில் கொண்டாலும் டயஸ் கோறின் என்றும் நச்சுத்தன்மையை இல்லாதொழிக்கும் அல்லது சமநிலைப்படுத்தும் நஞ்சுவிரட்டிப் பொருள் (ANTIDOTE) எது எனச் சரியாக அறிய முடியவில்லை. இதனை அறிவதற் காகக் கொழும்பிலுள்ள ஆயுர்வேத வைத்திய கற்கை நிலையத்தை விசாரித்தபோது தாவரத்தை அனுப்பிவையுங்கள் ஆய்வு செய்து விவரம் தருகிறோம் என்றார்கள். அவர்கள் ஆய்வு செய்யும்வரை தீவிர சிகிச்சைப் பிரிவிலிருக்கும் உயிர் காத்திருக்குமா என்ன?

வைத்தியர்கள் எவ்வளவு முயன்றும் மருமகனின் உயிரையும் காப்பாற்ற முடியவில்லை. அந்த உயிரும் பிரிந்து விட்டது. உண்மையிலேயே இவ்விரு உயிர்களையும் காப்பாற்ற வைத்தியர் கள் அல்லும் பகலுமாக உழைத்தும் பயனின்றிப் போய்விட்டது. அவர்களுக்கு அல்லைக்கிழங்கு சம்பந்தமான முழுமையான தகவலை வழங்க முடியாது போய்விட்டது.

யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை, விவசாயபீடம், விஞ்ஞான பீடத்தின் தாவரவியல் துறை மற்றும் இரசாயனத்துறை ஆகியவற்றினால் விரைந்து தகவல்களைப் பரிமாறியும், தேவையான நஞ்சுவிரட்டிப் பொருள் (ANTIDOTE) எது எனக் கண்டறிய முடியாததால் மேலைத்தேய வைத்தி யத்திற்கு உதவமுடியவில்லை. அந்த இரு உயிர்களையும் காப்பாற்ற முடிய வில்லை.

**அல்லைக் கிழங்குடன் கலப்பைக் கிழங்கும்**

இறந்தவர்கள் உட்கொண்டதாகக் காட்டப்பட்ட அவித்த அல்லைக் கிழங்கு மாதிரிக்குள் கலப்பைக் கிழங்கும் இருக்கக் காணப்பட்டது. கலப்பைக் கிழங்கு என்பது L வடிவில் உழவுசெய்யும் கலப்பையின் உருவம் போல இருப்பதனால் அதற்கு அப் படிப் பெயர். இதனைக் கார்த்திகைப் பூச்செடி எனவும் குறிப்பிடுவார்கள். இதனது விதையிலிருந்து ''கொல்சிசின்'' என்னும் இரசாயனப் பொருள் பிரித்தெடுக்கப்பட்டு அதனைப் பரம்பரை அலகுகளில் விகாரத்தை ஏற்படுத்தும் தூண்டி யாகப் பயன்படுத்துகின்றார்கள். இதனது கிழங்கு - மேலே குறிப்பிடப்பட்ட ''கலப்பைக் கிழங்கு'' கொடிய நஞ்சைக் கொண்டி ருக்கிறது. அல்லைக்கிழங்கு மண்ணி லிருந்து பெறப்பட்டபோது கலப்பை யினால் வெட்டுண்டிருந்தபோது கலப்பைக் கிழங்கினது நஞ்சு அதில் ஊறியிருக்க வாய்ப்பிருக்கின்றது. மேலும் கலப்பைக் கிழங்கு எனத் தெரியாது அல்லைக் கிழங்குடன் சேர்த்து அவித்துச் சாப்பிட்டதனாலும் அந்த நஞ்சு உடலுக்குள் சென்றிருக்க வாய்ப்புமிருக்கின்றது. சரியான காரணத்தை அறிந்தால் இனிமேலும் உயிரிழப்பு ஏற்படுவதைத் தடுக்க லாமல்லவா!

சித்த வைத்தியத்துறையில் இது பற்றிய தகவலைப் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். சித்தவைத்தி யர்கள் மூலிகைகள் பற்றிய ஆய்வில் அதிக அக்கறை செலுத்தினால் மட்டுமே இது சாத்திய மாகும்.



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர், விவசாய உயிரியல்துறை,
விவசாயபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையின் மடியில் 15.09.1957

இறைவன் அடியில் 31.01.2009

அமரர்

## மாணிக்கவாசகர் நித்தியானந்தன் (நித்தி)

அன்பின் திருவுருவே!
அம்பிகையின் மைந்தனே!
வசந்த நாகபூஷணி அம்மனின் பக்தனே!
ஆலயப் பணியை உயிர்மூச்சாய்க் கொண்டவனே!
அயல்தேசமெல்லாம் அம்பிகையை அழைத்துச் சென்றவனே!
உலகெலாம் அம்பிகையின் அருள் ஓங்கச் செய்தவனே!
அம்மனின் உயர்வறிய பணிபுரிந்து
அம்பிகையைச் சரணடைந்தீர்!

ஏழாலை வசந்த நாகபூஷணிஅம்மனின் பக்தர்கள், தொண்டர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு நாளை (02.03.2009) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

வசந்த நாகபூஷணி அம்மன்,
களபாவோடை, ஏழாலை.

(82980)

மனைவி.

### கூட்டம்

நவாலி வை.எம்.சி.ஏ.யின் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறுமென செயலாளர் இ.அருள்றொகான் தெரிவித்தார். (202-20)

### இலவச ஆங்கில வகுப்பு

நவாலி, மார்ச்.01

இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் அனுசரணையுடன் சங்குவேலியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி கிராமத்தில் வங்கியின் சமூக அபிவிருத்தியின் அங்கமாக இலவச ஆங்கில வகுப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

வட மாகாண உதவிப் பொது முகாமையாளர் என். சிவரட்ணத்தின் அங்கீகாரத்துடன் முதல் தடவையாக மானிப்பாய்க் கிளை முகாமையாளர் கே. இலட்சுமண சர்மாவினால் வகுப்பு ஆரம்பித்து வைக்கப்படும்.

இந்த வகுப்பில் ஜி.சீ.ஈ.சாதாரண தரம் சித்தியடைந்த 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் பங்குபற்றலாம். (202-100)


## மணமக்கள் தேவை

1982 ரோகினி, 8 இல் செவ்வாய் (32), B.A. படித்த கிராமிய வங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு ஐரோப்பிய நாட்டில் பணிபுரியும் மணமகனும், 1978, மூலம், 7இல் செவ்வாய் (32) ஆசிரியை மணமகளுக்கு, உள்நாட்டில் அரசபணி புரியும் மணமகனும், 1971, பரணி 4ஆம் பாதம் 2 இல் செவ்வாய் (8) மணமகனுக்கு வெளிநாடு/உள்நாடு மணமகனும், 1964 பூரம் 4ஆம் பாதம் 4இல் செவ்வாய் (8) ஆசிரிய மணமகளுக்கு அரச பணிபுரியும் மணமகனும், 1975, மூலம் பாவக்கிரக மற்ற வெளிநாட்டில் பணிபுரியும் மணமகனுக்கு படித்த அழகிய மணமகளும் தேவை.

தொடர்பு:

060 221 4682, 060 221 7016,
0777243129

(க/557307)

## குவைத் வேலைவாய்ப்புகள் (உடனடியாக)

குவைத் நாட்டுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறார்கள் குவைத் அரசின் பாதுகாப்பு மற்றும் கல்வி அமைச்சுகளில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**சுத்திகரிப்பாளர்கள்**

ஆண்கள் - 200 வயதெல்லை: 22 - 40 வயது வரை
பெண்கள் - 30 வயதெல்லை: 25 - 40 வயது வரை

சம்பளம்: மாதம் 50 KD

வேலைநேரம்: ஒருநாளைக்கு 8 மணித்தியாலம், வாரம் 42 மணித்தியாலம், மேலதிக வேலைப்படி. பிரத்தியேகமாக வாரத்தில் ஒருநாள் விடுமுறை உண்டு.

இலவச தங்குமிடவசதி, சமையல் அறையில் வாயு (gas) மற்றும் வாயு அடுப்புகள் இலவசமாக வழங்கப்படும். மருத்துவமும் போக்குவரத்தும் இலவசம்.

ஒப்பந்தக்காலம்: இரண்டு ஆண்டுகள். புதுப்பிக்கப்படலாம். தகுதிகாண் காலம்: 100 நாள்கள். ஒப்பந்தம் முடிந்தபின் திரும்பிச்செல்வதற்கு இலவச விமான டிக்கெற். உணவு, கொடுப்பனவு மாதம் 10 KD. நல்ல எதிர்காலமுண்டு. வேலைநேரத்தின் பின் தனிப்பட்ட தொழில்புரியலாம். குவைத் அரசினால் அக்கமா (AQAMA) விரைவாகவே வழங்கப்படும்.

செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, கடவுச்சீட்டின் அளவில் மூன்று புகைப்படங்கள், அண்மையில் எடுக்கப்பட்ட அஞ்சல் அட்டை அளவிலான இரண்டு முழு அளவு புகைப்படங்கள் ஆகியவற்றுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் தயவுசெய்து உடனடியாக வருகை தரவும்.

**RAIHANA ENTERPRISES** *(HEAD OFFICE)*
166-1/1, MAHA VIDYALAYA MAWATHA
(FORMERLY BARBER STREET), COLOMBO - 13.

**RAIHANA ENTERPRISES** *(BRANCH OFFICE)*
135-1/1, FIRST FLOOR SARASAVI BUILDING
(NEAR MALIYADEVA BALIKA MAHA VIDYALAYA)
COLOMBO ROAD, KURUNEGALA.

Tel :- 011-2441632, 011-4813870, 011-5366201, 011- 5366203-6
Fax :- 011- 4613367, 011-2394821.
Email :- raihana@visualnet.lk, raihanaenterprises@yahoo.com


# ஆறாம் மாத நினைவஞ்சலி

அமரர்

## தம்பையா நடராஜா



தோற்றம்: 02.04.1927

மறைவு: 04.09.2008

எங்கள் குடும்பக் குலவிளக்கே அன்பின் இருப்பிடமே
அறிவின் பொக்கிசமே பார் போற்றும் நல் உத்தமரே
எங்களைக் கண்ணை இமை காப்பதுபோல் காத்தவரே
உங்களைக் கொடிய நோய் காவு கொண்டதுமே
எங்களை ஆதரிப்பதற்கு ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் ஈடாகுமா
மாதங்கள் ஆறு சென்றாலும்
உங்கள் நினைவு எங்களை விட்டகலாது

இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

171/6, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(மனோன்மணி அம்மன் கோயில் அருகில்)

என்றும் உங்கள் நினைவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
[சிறி நதியா நகை மாளிகை]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறுத்தல்

சிறுகதை

கந்தையரின் நாளாந்த செயற்பாடுகள் ஓர் ஒழுங்குக்குட்பட்டவை.

காலையில்நாலரை மணிக்கு வைரவர் கோயில் மணி கேட்கும்போது விழித்தாரென்றால்,காலைக்கடன், வீட்டு வேலை, மாடு கன்று பார்த்து விட்டுத் தோய்ந்து கோவிலுக்குப் போய் வந்து, பிறகு தோட்டம்சந்தை என்று மத்தியானமாகும்.கடைக்குப்போய்விட்டு வரும்போதே அன்றைய பத்திரிகையையும் வாங்கி வந்து விடுவார். ஆனால், வாங்கியவுடனேயே மேலாகப் பார்த்து, வரவர நுனிப்புல் மேய்ந்து...என்றெல்லாம் கிடையாது.

கடைக்காரர் கொடுத்தவுடனேயே பத்திரமாக மடித்துப் பைக்குள் போட்டு விடுவார்: இடையில் இரவல்காரர் கண்ணிலும் படாமல்.

வீட்டுக்கு வந்ததும் கூட, அதைப் பிரிக்க மாட்டார். கடையில் வாங்கியவற்றை மனைவியிடங் கொடுத்துவிட்டு, பேப்பரைப் பத்திரமாக மேசையில் வைத்துவிடுவார்.

பிறகு, அந்த இந்தத் தொட்டாட்டு வேலை, குளிப்பு, சாப்பாடு என்று ஒன்றரை மணியாகும். சாப்பிட்டு முடித்த கையோடு, வெளித்திண்ணையிலிருக்கும் சாய்மனைக் கதிரையில் துண்டைப் போட்டுக்கொண்டு பேப்பரும் மூக்குக் கண்ணாடியுமாய்ச் சரிந்து விடுவார்.

பேப்பர் விரிக்கும் போது, மொறுமொறென்றிருக்க வேண்டும் அவருக்கு. கடதாசி மணமும் மை வாசனையும் மூக்கிலடிக்க வேண்டும். பத்திரமாக, ஒன்றும் விடாமல்- தலைப்புச் செய்தியிலிருந்து மரண அறிவித்தல் வரை- படித்து விட்டு, பேப்பரை மடித்து மனைவியிடங் கொடுத்து விட்டு, அப்படியே ஒரு அரை மணி நேரம் அயர்வார்......

இந்தப் பேப்பர்ப் படனம் அவரது அன்றாட வாழ்வில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்தது. ஒவ்வொரு செய்தியாகப் படித்து, ரசித்து யோசித்து..... அது, அவருக்குப் புது அனுபவங்கள் எல்லாம் தரும். அது ஒரு சுகானுபவம்.

இப்போ, இரண்டு கிழமையாக, அநேக மானோரின் நாளாந்தச் செயற்பாடுகள் எவ்வளவோ பாதிக்கப்பட்டுங்கூட, கந்தையரின் இந்த அன்றாட வழக்கங்கள் ஒன்றும் பாதிக்கப்படவில்லை. பேப்பர் கூட, ஒடர்ப் பேப்பர். கதிரவேலு தன் கடையில் பேப்பர் விற்கத் தொடங்கிய நாளிலிருந்து நடைமுறையிலிருக்கிற ஓடர். ஒரு நாளைக்கு எடுக்க முடியாது போனாலுங்கூட அடுத்த நாள் வரை காத்திருக்கும் பேப்பர்.

இன்றைக்கும் சாய்வு நாற்காலியைத் தட்டித் துண்டை விரித்து விட்டு, மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு பேப்பரும் கையுமாய்ச் சரிந்தார்....

இந்தப் பத்து நாளாக வருகிற சங்கடம் இப்போதும் வந்தது. எங்கும் குண்டு வீச்சும் கொலையுமாக....., திருகோணமலையில் சனங்கள் பட்ட கஷ்டம், முல்லைத்தீவுக்கு வரப்பட்டபாடு, அங்கிருந்து யாழ்ப்பாணம் வருகை...... கந்தையருக்கு என்னவோ செய்தது.

இதெல்லாம் ரசனைக்குரிய செய்திகளல்ல. இந்தச் சனம் இவ்வளவு படுகையில், இருக்க இடமும், உண்ண உணவும், உயிருக்கு உத்தரவாதமும் இல்லாமல் ஓடி வருகையில், அவர்கள் பற்றிய சேதிகளை, அவர்கள் படும் அவலங்களைத் தான் இப்படி ஆறுதலாக ஒய்வாகக்கிடந்து படிப்பதே பிழை! அது ஒரு பாவமாகக் கூடப்பட்டது...... கடவுளே!

கந்தையர் திடுக்கிட்டு எழுந்தார். ''என்ன?..... என்னவும்?.....''- என்றா, பக்கத்துக் கதிரையில் பாக்குவெட்டிக் கொண்டிருந்த மனைவி.

''ஏதோ குத்துது.....'' என்றார். சுதாகரித்துக்கொண்டு. ✱✱✱

(1990)



மாணவனாக இருந்த வேளையிலேயே ஈழத்து இலக்கியத் துறையில் தடம் பதித்தவர் சாந்தன். சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது இயற் பெயர் ஐயாத்துரை சாந்தன்.

இவரது முதலாவது சிறுகதை 1966 இல் 'கலைச்செல்வி'யில் பிரசுரமாகியது. முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'பார்வை' கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரியில் இவர் கல்விபயின்றவேளை 1970 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

ஈழத்திலும், தமிழ் நாட்டிலுமாக வெளியிடப்பட்ட 22 நூல்களை இதுவரையில் சாந்தன் எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் வெளியான நான்கு நூல்களும் அவற்றுள் அடங்கும். உருவம், உள்ளடக்கம் இரண்டிலும் தனித்துவம் பெற்ற இவரது ஆக்கங்கள் வேதனை தொடரும் எம்மண்ணின் வாழ்வை விளக்குவன.

தமிழ் எழுத்துக்காக 1975 ஆம் ஆண்டிலும், ஆங்கில இலக்கிய ஆக்கத்துக்காக 2000 ஆம் ஆண்டிலும் இருமுறை சாகித்ய மண்டலப் பரிசு பெற்றவர். ஆங்கில இலக்கிய ஆக்கத்துக்காக சாகித்ய விருதுபெற்ற முதல் தமிழர் என்பது சிறப்பம்சம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் பல்வேறு தேர்வு நூல்களில் இவரது ஆக்கங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. சிங்கள, இந்தி, ருஷ்ய மொழிகளிலும் மொழியாக்கம் கண்டுள்ளமை மற்றொரு சிறப்பம்சம்.

பார்வை, காலங்கள், ஒரே ஒரு ஊரிலே, மூளைகள், கிருஷ்ணன் தூது, இன்னொரு வெண்ணிரவு, ஆரைகள் ஆகிய தலைப்புக்களில் சிறுகதைத் தொகுதிகளும், 'ஒட்டுமா' என்ற பெயரில் நாவலும் வெளியாகியுள்ளன.

இவரது 'காலங்கள்' சிறுகதைத்தொகுதியிருந்து 'உறுத்தல்' மற்றும் 'வீடு' ஆகிய இரு சிறுகதைகள் இவ்வார இலக்கியப் பொழிலை அலங்கரிக்கின்றன.

# வீடு

''தேத்தண்ணி ஒண்டும் வேண்டாம்....''- சித்தப்பா திடமாகச் சொல்லி விட்டார்-

''.....பனங்கட்டியோட எண்டாலும்.''

''ஒப்பாசாரம் என்ன, இந்தக் கஷ்ட காலத்திலை?''- கணேசனும் மறுத்துவிட்டான்.

''வேணுமெண்டா, பச்சைத்தண்ணி கொஞ்சம் கொண்டு வா, நல்ல பானைத்தண்ணி..... ''- என்றார் சித்தப்பா, உரிமையுடன் மீண்டும்.

ஆனந்தம் உள்ளே போனார். அவர், அவனுக்கும் சித்தப்பாவுக்கும் பொதுவான நண்பர் - வெவ்வேறு விதங்களில்; கணேசனும் ஆனந்தமும் மூன்று வருஷங்களாகக் கொழும்பில் ஒரே 'போடிங்'கில் இருந்த பழக்கம்; சித்தப்பா ஆனந்தத்துக்கு அயலவர்.

குண்டுக்கும் ஷெல்லுக்கும் பயந்து இடம் பெயர்ந்து சித்தப்பா வீட்டில் தங்கியிருக்கிற இந்த ஒரு மாதத்தில், ''இண்டைக்காவது உன்ரை கூட்டாளியைப் பாத்திட்டு வருவம், வா.....''- என்று சித்தப்பாதான் அவனை வற்புறுத்தி அழைத்து வந்திருக்கிறார். ஆனந்தத்தை வந்து பார்ப்பதில் அவனுக்கொன்றும் ஆட்சேபனை இல்லைத்தான், என்றாலும் இந்த அகதிக் கோலத்தில் இதெல்லாம் ஏன் என்றிருந்தது.....

ஆனந்தம் வீடு, அழகாய் அடக்கமாய் இருக்கிறது...... வீடு!..... அவனையறியாமல் பெருமூச்சு வந்தது.

......ஆனந்தம், நிறையப் பூமரங்கள் வைத்திருக்கிறார். முன் வாசலடியில், முற்றத்தை மறைத்து நிழல் பரப்பும் மாமரம். அதன் கீழ் வேலியருகே பதுங்குகுழி. நேற்றோ முந்தநாளோதான் வேலை முடிந்திருக்க வேண்டும்- மேலே குவித்த செம்மண்ணிலும், இடையில் தலைநீட்டும் தென்னங்குற்றியின் வெட்டு விளிம்பிலும் இன்னும் ஈரப்பசை.....

மாமரத்தின் இந்தப் பக்கம் வீட்டு முன் சுவரை ஒட்டி, உயர்ந்த ஒரு பீடத்தில் துளசிமாடம். அகன்ற அந்தச் சாடியில், அது என்ன கூட, துளசியோடு சேர்ந்து பச்சைப் பசெலென?- திருநீற்றுப்பச்சை!

எழுந்து போய், இலையைத் தொட்டு முகர வேண்டும் போலக் குறுகுறுப்பு..... எத்தனை நாள், எங்கெல்லாம் தேடிய மூலிகை! அலுவலகத்தில் அவனோடு கூட வேலை செய்த அரியராஜ், ஒவ்வொரு மாதமும் செல்வச்சந்நிதியில் அர்ச்சனை செய்வித்துக்கொண்டு வரும் பிரசாதப் பொட்டலத்தை அவிழ்க்க முன்பே புல்லரிக்க வைக்கும் புனிதம்..... திருநீற்றோடு, சம்புடத்தில் வைத்தால் வீடெல்லாம் வீசும் வாசம்...... கணேசனுக்கு இப்போதும் மேலெல்லாம் சிலிர்த்தது.

ஒரு செடியேனும் உண்டாக்கிவிட வேண்டுமென்று எத்தனை நாள் தேடித் திரிந்திருக்கிறான்! 'வலு பவித்திரமாக வளர்க்க வேண்டிய செடி'- என்றுதான் எல்லோரும் சொன்னார்கள். ஆனந்தம் வழி கண்டிருக்கிறார்- துளசியோடு, கவனமாக.

செம்பும் இரண்டு பேணியுமாக வந்தவரிடம் கேட்டான்.

''அது, திருநீற்றுப் பச்சைதானே?'

''ஓமோம்.....'' என்றார், பெருமையாக.

''...அதைத்தேடி நான் உண்டாக்கப்பட்ட பாடு!''

தண்ணீரை வார்த்து, சித்தப்பாவிடம் கொடுத்துவிட்டு, அவன் முன்னால் வந்த ஆனந்தம் கேட்டார்.

''உனக்கு வேணுமா?.... மூண்டு, நாலு கண்டு முளைச்சு நிக்கு..... தாறன்......'' வலித்தது.

✱✱✱ (1990)

## ஊனத்தை வென்றிடக் கல்வியே வழி

**மனிதா:**

உன் கண்கள் இரண்டும் பார்வையிழந்து
உலகைப் பார்க்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைப் பார்க்குமடா

**மனிதா:**

உன் செவிகள் இரண்டும் கேள்மையிழந்து
ஒலியைக் கேட்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம், உன்னைப் கேட்குமடா

**மனிதா:**

உன் கால்கள் இரண்டும் வலிமையிழந்து
உன்னைச் சுமக்க மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்னைச் சுமக்குமடா

**மனிதா:**

உன் உதடுகள் இரண்டும் வரண்டு
வார்த்தை பேச மறுத்தாலும்
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
உலகம் உன்புகழ் பேசுமடா

**மனிதா:**

உன் அங்கங்களில் இருக்கும் ஊனங்களைக் கண்டு
நீ ஏன் கலங்குகின்றாய்
உன் மனத்தில் ஏதையா ஊனம்
ஊனமில்லாத மனதோடு
நீ கல்வி பயின்று உயர்ச்சி அடைந்தால்
அதுவே உனக்கு வ்ழிகாட்டும்

**செல்வி சே.லோகேஸ்வரி,** (வயது -9), வாழ்வக இல்ல மாணவி.

## பசிப்பிணி நீக்க சட்டம் இயற்றினால் போதாது

மணிமேகலை ஒரு காப்பிய நூல். இக் காப்பியத்துள் பல அறங்கள் விளக்கப்படுகின்றன. தலைமை அறமாக விளக்கப்படுவது ஒன்றே. சிலப்பதிகாரம் என்றவுடன் மகளிரின் கற்பொழுக்கம் பெறப்படுவது போல, இராமாயணம் என்றவுடன் அறம் வெல்லுதல் பெறப்படுவதுபோல, மணிமேகலை என்ற வழி 'பசித்தோர் முகம் பார்' என்ற அறமே தலைமை பெற்று நிற்கிறது. மணிமேகலைக் காப்பியத்தின் தலைவி பல தோற்றங்களில் சொல்லோவியமாகக் காட்சி அளிக்கிறாள். மாதவர் உறைவிடத்து மாலை தொடுக்கும் மேகலையை முதலில் காண்கிறோம்.

புகார் நகரத்து வீதியில் இளமை கொலு வீற்றிருக்க அழகு நங்கையாய் அடியெடுத்து வைக்கும் மேகலையைச் சந்திக்கிறோம். மணி பல்லவத்துப் புதிய நிலையில் தன் னந்தனியாளாய்த் தவித்தழும் மணிமேகலையைப் பார்க்கிறோம். தவக்கோலம் கொண்டு தருமம் கேட்ட காட்சி நம் கண்முன் தோன்றவில்லை. ஆனால் மணிமேகலை என்றவுடன் நம் கண்முன் இத் தோற்றங்கள் எல்லாம் தோன்றவில்லை. அமுதசுரபி கையேந்தி ஆருயிர் மருந்தை அள்ளி வழங்கிய மணிமேகலையே நம் கண்முன் தோன்றுகிறாள். ஓடேந்தி உண்பித்த காட்சியே கண்கொள்ளாக் காட்சியாகத் தோன்றுகிறது. மணிமேகலையின் தோற்றமே 'பசித்தோர் முகம் பார்' என்ற அறத்தின் இலச்சினையாக அமைகிறது.

[illegible] மணிமேகலையை நோக்கின் அமுதசுரபி என்ற பிச்சை ஓடே எண்ணத்தில் முதலில் பெறுகிறது. இவ் வோட்டின் இயல்பாகச் சாத்தனார் கூறுவன நம்மை மயங்க வைத்தன. ''நாடு வறங்கூரினும் ஓடுவறங் கூராது; எடுக்க எடுக்கக் குறையாத அவ்வோட்டில் சோறும் வரும்; வாங்குநர் கையகத்தை வருத்தும்; தான் சோற்றில் குறையாது;'' என்பனவற்றை ஓட்டின் இயல்பாகச் சாத்தனார் கூறுகிறார். நாமோ நம்ப மறுக்கிறோம். அமுதசுரபியொன்று இப்பொழுதிருப்பின் அமெரிக்கா நோக்கி ஓடவேண்டாம். சாத்தனார் பசியொழிப்பிற்கான நல்ல திட்டம் தரவில்லைத்தான். 'விளைவுமிகுதி', 'மக் கட் குறைப்பு', 'பசுமைப் புரட்சி' என்றெல்லாம் பேசவில்லைதான். சாத்தனார் கோலோச்சும் அரசரில்லை. தேர்ந்தெடுக்கப்பெற்ற அரசியல் தலைவரும் அல்லர்; அரசியல் அறிஞரும் அல்லர்; பொருள் நூல் வல்லுநரும் அல்லர். ஆதலின் திட்டம் தருவதும், சட்டம் வகுப்பதும் அவைகளை நிறைவேற்றுவதும் அவர் வேலை இல்லை. சாத்தனார் எழுத்தாளர். எழுத்தாளன் வேலை மக்கள் மனப்பாங்கு மாற்றுவதே. வால்டேர், ரூசோ முதலிய பிரெஞ்சு எழுத்தாளர்கள் பிரெஞ்சுப் புரட்சி நடக்கும்போது வாழவில்லை. ஆனால் அவர்களின் எழுத்துக்கள் மக்களின்




(12 பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடை பெறுகிறார் ஸ்ரீவ் பக்னர்




மேற்கிந்தியத் தீவுகளின் ஸ்ரீவ் பக்னர் சர்வதேச நடுவர் பணியிலிருந்து ஓய்வுபெறத் தீர்மானித்துள்ளார். இதன்படி தென்னாபிரிக்க - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையில் கேப்டவுனில் மார்ச் 19 ஆம் 23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியுடன் பக்னர் டெஸ்ட் நடுவர் பதவியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார்.

தொடர்ந்து பார்படோஸில் மார்ச் 27, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான போட்டிகள் பக்னர் பணியாற்றும் கடைசி ஒருநாள் சர்வதேச ஆட்டங்களாக அமையும். "என்னால் இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு நடுவராகப் பணியாற்ற முடியும். எனினும் இப்போது ஓய்வுபெறும்படி எனது உள்மனது சொல்கிறது.

ஓய்வின் பின்னர் மேற்கிந்தியத் தீவுகளின் இளம் நடுவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் திட்டமிட்டுள்ளேன் என்று ஸ்ரீவ் பக்னர் தனது ஓய்வு குறித்துத் தெரிவித்தார். 62 வயதான பக்னர் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேசப் போட்டிகளில் நடுவராகச் செயற்பட்டு வருகின்றார். அவர் இதுவரை 126 டெஸ்ட் போட்டிகளில் நடுவராகச் செயற்பட்டுள்ளார். இதன்படி அவர் அதிக டெஸ்ட் போட்டிகளில் நடுவராகச் செயற்பட்டவராகவும் சாதனை படைத்துள்ளார். அத்துடன் அவர் இதுவரை 179 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் நடுவராகப் பணியாற்றியுள்ளார். இதில் பக்னர் 1992 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக 5 உலகக் கிண்ணப் போட்டிகளில் நடுவராகச் செயற்பட்டுள்ளார். பக்னர் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் ஐ.சி.சியின் முதன்மை நடுவர் குழாமில் இருந்து வருகிறார்.

எனினும் அவர் அண்மைக்காலமாகச் சர்ச்சைகளில் சிக்கி வருகிறார். கடந்த ஆண்டின் ஆரம்பத்தில் அவுஸ்ரேலியாவில் நடந்த டெஸ்ட் போட்டியின்போது தவறான தீர்ப்புகள் வழங்கப்பட்டதால் அந்தத் தொடரில் நடுவராகச் செயற்படுவதில் இருந்து அவர் நீக்கப்பட்டார். அதேபோன்று கடைசியாக நடந்த உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் அவரது தீர்ப்பு சர்ச்சையைக் கிளப்பியது. இதன் காரணமாக பக்னர் ஐ.சி.சியின் தண்டனைக்கும் ஆளானார்.

## விளையாட்டு அரங்கில்

# 2010 உலகக் கிண்ண உதைபந்தாட்டம்: ரிக்கெட் விற்பனை சூடு பிடிக்கிறது




எதிர்வரும் 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள 'பிபா' உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளுக்கான நுழைவுச் சீட்டு விற்பனை ஆரம்பமாகியுள்ளதெனத் தெரிவிக்கப் படுகிறது. மொத்தமாக 64 போட்டிகள் நடைபெறவுள்ளதாகவும், போட்டிகளைக் கண்டுகளிப்பதற்காகச் சுமார் 3 மில்லியன் நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது. ஏப்ரல் மாதமளவில் சீட்டிழுப்பின் மூலம் ஒரு தொகுதி நுழைவுச் சீட்டுக்கள் விற்பனை நடைபெறவுள்ளது. 45,000 சலுகைக் கட்டண அடிப்படையிலான நுழைவுச்சீட்டுக்கள் தென்னாபிரிக்க பிரஜைகளுக்கு விற்பனை செய்யப்படவுள்ளன. இதில் 120,000 நுழைவுச்சீட்டுக்கள் மைதானங்களை அமைத்த பணியாளர்களுக்கு வழங்கப் படவுள்ளது. 20 டொலர் முதல் நுழைவுச்சீட்டு விலைகள் காணப்படும் எனவும் இறுதிப் போட்டிக்கான நுழைவுச் சீட்டுக் கட்டணம் 900 டொலர்களாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, உலகக் கிண்ணப் போட்டிகளை வெற்றிகரமாக நடத்தி முடிக்கும் முனைப்பில் தென்னாபிரிக்கக் கால்பந்தாட்டச் சம்மேளனம் தீவிரமாகப் பணிகளை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. ✱

# அண்டி ரொடிக் அபாரம்



மெம்பிஸ் ரெனிஸ் சம்பயின்ஷிப் போட்டிகளில் அண்டி ரொடிக் அபார திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெற்றுள்ளார். மெம்பிஸ் இறுதிப் போட்டியில் அமெரிக்கா வின் அண்டி ரொடிக், செக் குடியரசைச் சேர்ந்த ரடெக் ஸ்டெப் நெக்கை வீழ்த்தினார்.

இறுதிப்போட்டியில் அண்டி ரொடிக் 7:5, 7:5 என்ற செற் கணக்கில் ஸ்டெப்நெக்கைத் தோற்கடித்துள்ளார்.

அண்டி ரொடிக் மெம்பிஸ் ரெனிஸ் போட்டிகளில் இதுவரையில் நான்கு தடவைகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளார் எனவும் இவற்றில் இரண்டு தடவைகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இரண்டு தடவைகள் சம்பியன் பட்டம் வெல்லக் கிடைத்தமை பெரு மகிழ்ச்சியளிப்பதாக அண்டி ரொடிக் குறிப்பிட்டுள்ளார். ✱

# அன்ட்ரு நெல்லுக்கு இடமில்லை



தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் சம்பள ஒப்பந்தத்தில் இருந்து வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரு நெல் நீக்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் வீரர்களுடனான ஓர் ஆண்டு சம்பள ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டது. 16 வீரர்களைக் கொண்ட இந்த சம்பள ஒப்பந்தத்தில் வேகப்பந்து வீச்சாளர் அன்ட்ரு நெல்லுக்கு இடமளிக்கவில்லை. இதுதவிர சகலதுறை ஆட்டக்காரர் ரொபின் பீற்றர்சன் மற்றும் மொன்டே சொண்டக்கியும் ஒப்பந்தத்தில் இடம்பெறவில்லை.

பதிலாக 24 வயது வேகப்பந்து வீச்சாளர் லொன்வபோ சொட்கோப் புதிய சம்பள ஒப்பந்தத்தில் இடம் பிடித்துள்ளார். சொட்கோப் அண்மையில் நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான 5 போட்டிகளைக்கொண்ட ஒருநாள் தொடரின் கடைசிப் போட்டியில் புதுமுக வீரராக விளையாடினார். அந்தப் போட்டியில் அவர் 50 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையின் சம்பள ஒப்பந்தம் வரும் மே மாதம் ஆரம்பித்து 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் வரை நடைமுறையில் இருக்கும்.

ஒப்பந்த வீரர்கள் விவரம்:

கிராம் ஸ்மித், ஹாஷீம் அம்லா, ஜொஹான் போதா, மார்க் பௌச்சர், ஏ.பி.டிவில்லியர்ஸ், ஜே.பி.டுமினி, ஹெர்ஷல் கிப்ஸ், போல் ஹரிஸ், ஜக் கலிஸ், நீல் மெக்கன்ஸி, அல்பி மோர்கல், மோர்னி மோர்கல், மொகயா நிற்னி, ஆஷ்வல் பிரின்ஸ், டெல் ஸ்டைன், லொவன்போ சொட்கோப். ✱

# பெக்காமை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை




இங்கிலாந்தின் முன்னணிக் கால் பந்தாட்ட நட்சத் திரம் டேவிட் பெக்காமை குறைந்த விலைக் காக ஏ.சீ மிலான் கழகத்திற்கு விட்டுக் கொடுக்கத் தயா ரில்லை என லா-கலக்ஸி கழகம் தெரிவித்துள்ளது.

குறுகிய காலக் கடன் ஒன்றைப் பூர்த்தி செய்யும் நோக்கில் பெக்காம் தற்போது ஏ.சி.மிலான் கழகத்திற்காகவிளை யாடி வருகின் றார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதியுடன் குறித்த கடன் ஒப்பந்தம் முடிவடைவதாகத் தெரிவிக்கப்படு கிறது. டேவிட் பெக்காம் தொடர்ந்தும் ஏ.சீ.மிலான் கழகத்திற்காக விளை யாட வேண்டுமாயின் சிறந்த முறையில் எம்முடன் பேரம் பேச வேண்டுமென லா-கலக்ஸி கழகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி டிம் லிவிக் தெரிவித்துள்ளார்.

ஏ.சீ.மிலான் கழகத்தினால் பெக்காமைக் கொள்வனவு செய்வதற்குக் கோரப்பட்ட பணம் மிகவும் சொற்பமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தப் பணத்திற்கு டேவிட் பெக்காமைப் போன்றதொரு சிறந்த வீரரை விற்பனை செய்தால் அது பாரிய நட்டத்திற்கு வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஏ.சீ.மிலான் கழகம் டேவிட் பெக்காமை 3 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யுமாறு தம்மிடம் கோரியதாக அவர் தெரிவித்துள்ளார். குறைந்த பட்சம் 10 முதல் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் கிடைக்கப் பெற்றால் பெக்காமை விற்பனை செய்வது குறித்துச் சிந்திக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குற்றமில்லை

தமிழரசன் என்ற சட்டத்தரணி திரைப்படத் துறையில் நுழைந்திருக்கிறார். இதுவரை அவர் மூன்று படங்களில் நடித்திருந்தாலும் அவை எதுவுமே வெற்றிபெறவில்லை. எனினும் தன்னுடைய நான்காவது படமான 'சொல்லாதது' மிகப் பெரிய வெற்றி பெறும் என அவர் நம்புகிறார். இதனால் படத்தின் பாடல் வெளியீட்டைப் பிரமாண்டமாக நடத்தினார். இதில் கலந்துகொண்ட இயக்குநர் பாக்கியராஜ் 'ஒரு சட்டத்தரணி இப்போது நடிகராகியிருக்கிறார். படங்களில் பொலீஸாரையும் சட்டத்தரணிகளையும் தவறாகக் காட்டினால் அதில் குற்றம் எதுவும் இல்லை. ஏனெனில் அது தனிப்பட்ட ஒரு பாத்திரத்தைப் பற்றியே சித்திரிக்கிறது. ஒட்டுமொத்த பொலீஸையோ சட்டத்தரணிகளையோ குறிப்பதில்லை என்பதை அனைவரும் உணரவேண்டும்' என்று சினிமாக்காரர்களுக்குச் சார்பாகப் பேசியுள்ளனர்.

கலைச் சுடர்

# சோகத்தில் மாயாண்டி குடும்பம்



பாண்டி என்ற படத்தை இயக்கிய ராசுமதுரவன் என்பவர் புதிதாக ஆரம்பித்துள்ள படம் 'மாயாண்டி குடும்பத்தார்'. இப் படத்தில் மணிவண்ணன், சீமான், தருண்கோபி, ராஜ்கபூர், பொன்வண்ணன் உள்ளிட்ட பத்து இயக்குநர்கள் நடிக்க இருக்கிறார்கள். இதன் ஆரம்ப கட்டப் படப்பிடிப்புகள் நடந்து வரும் சூழ்நிலையில் நாளொரு போராட்டமும், பொழுதொரு சிறைச்சாலையுமாகச் சீமான் இருப்பதால் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. ஏனெனில் படத்தில் சீமானின் பாத்திரம் முக்கியத்துவமானது. இதனால் அவர் இல்லாமல் படப்பிடிப்பை நடத்துவதும் இயலாத காரியமாகவுள்ளது.


எனவே படத்தை எப்போது எடுத்து, எப்போது முடிப்பது என்ற கவலையில் 'மாயாண்டி குடும்பத்தார்' படக் குழு மூழ்கியுள்ளது.★

# மீண்டும் கன்னடத்துப் பைங்கிளி



ஒரு காலத்தில் கன்னடத்துப் பைங்கிளி என்ற அடை மொழியோடு தமிழ்த் திரையுலகில் முடிசூடா ராணியாக விளங்கியவர் நடிகை சரோஜாதேவி. எம்.ஜி.ஆர்., சிவாஜி போன்ற அக்கால நாயகர்களின் ஜோடியாக பல படங்களில் நடித்தவர். நீண்டகாலமாகத் தமிழ்த் திரையுலகை எட்டிப் பார்க்காத அவர் இப்போது மீண்டும் திரையில் தோன்ற இருக்கின்றார். கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சூர்யா நடிக்கும் 'ஆதவன்' என்ற படத்தில் முக்கிய பாத்திரமொன்றில் நடிப்பதற்கு சரோஜாதேவி சம்மதித்திருக்கிறார். பழைய படங்களின் ரசிகர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சியான செய்திதான்.★

# புதிய படத்தில் கனல்



சண்டைப் பயிற்சியாளர் கனல் கண்ணனின் நடிப்பில் அண்மையில் வெளிவந்த 'சற்று முன் கிடைத்த தகவல்' என்ற படம் முதலுக்கு மோசமில்லாமல் ஓடுவதால் அடுத்த படத்திலும் கதாநாயகனாக அரிதாரம் பூசுவதற்கு கனல் கண்ணன் தயாராகி விட்டார்.

'சங்கரன் கோயில்' என்று பெயரிடப்பட்டுள்ள புதிய படத்தில் நாயகனாக கனல் கண்ணன் நடிக்கவுள்ளார். இப்படத்தை புவனை கண்ணன் என்பவர் இயக்குகிறார்.

கனல் கண்ணனின் முதலாவது படத்தையும் இவரே இயக்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.★

# திரைவிமர்சனம்



யதார்த்தத்தைமறந்துவிட்டுஇரண்டரை மணித்தியாலங்கள் கலகலப்பாகப் பொழுதைக் கழிக்க விரும்புபவர்கள் பார்க்க வேண்டிய படம் 'பெருமாள்'.

சுந்தர்.சி, நமீதா, மீனாட்சி, விவேக் போன்றோரின் நடிப்பில் வின்சென்ட் செல்வாவின் இயக்கத்தில் 'பெருமாள்' படம் வெளிவந்துள்ளது. வட்டிக்குப் பணம் கொடுக்கும் தாதா ஒருவரின் அடியாளாக சுந்தர்.சி வருகிறார். பணத்தை வாங்கிவிட்டு ஏமாற்றுபவர்களின் காரை தனது முதலாளியிடம் கொண்டுவந்து சேர்ப்பிப்பதே இவரின் வேலை. அந்தக் கார்களைத் திருடுபவராக நமீதா வருகிறார்.




ஒருமுறை தன்னிடம் தஞ்சமடையும் மீனாட்சிக்காக இன்னொரு தாதாக் கும்பலுடன் சுந்தர்.சி மோதுகிறார். அந்தக் கும்பல் சுந்தர்.சியை தேடி அலைகிறது. இறுதியில் எப்படி அந்த வில்லன் கும்பலை சுந்தர்.சி அழிக்கிறார் என்பதை ஜனரஞ்சகமாகச் சொல்லியிருக்கிறது 'பெருமாள்' திரைப்படம்.

விவேக் - சுந்தர்.சி கூட்டணியின் நகைச்சுவைகள் வயிற்றைப் பதம் பார்க்கின்றன. நமீதா, மீனாட்சி இருவரும் ஒப்புக்காக வந்துபோகின்றனர். ஸ்ரீகாந் தேவாவின் இசை ரசிகர்களை ஆட்டம்போட வைத்திருக்கின்றது. ஒரு ஜனரஞ்சக இயக்குநராகத் தன்னை நிலைநாட்டுவதில் வின்சென்ட் செல்வா 'பெருமாள்' படத்தின் மூலம் வெற்றிபெற்றிருக்கிறார் என்றே கூறவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுமை தாங்கியோது தடுமாறும் அகதிநான்

என் ஊரில் வீசுகின்ற
இளந்தென்றல் காற்று- என்
தோள் தொட்டு;
முகம் வருடி
என்னோடு பேசிய
நாள்களை மறந்தும்,
நடுமதிய வேளையிலே
கானலைச் சுமக்கின்ற
கிறவல் வீதியில்
முக்கி முனகி(ச்)
சைக்கிள் வலித்த
நாள்களையும் இழந்தும்,
வியர்வைக் காலோடு
நாசி ரோமம் நிறைத்த
செம்மண் புழுதி பரவி
பண்படுத்திச் செய்து வைத்த
பயிர்வகைகள் அனைத்தையுமே
கருவோடும் காயோடும் கை விட்டும்
குறை நிரப்புப் பொருளாதாரம்
சரிசெய்ய வென வளர்த்த
பால் பொழிந்த பசுக்களும்
கன்றோடு குண்டுபட்டு
உடல் துண்டாகி(ப்)
போன கோரத்தைக்
கண்ணாலே கண்டும்,
என்னிருப்பை உறுதிசெய்து - எனக்கு
முகம் கொடுத்து
முகவரி தந்த
என் கேவல் மாளிகை
தீப்பிடித்து எரியும் போது
என் நெஞ்சம் எரிந்தும்,
கையிலே பிள்ளை
பையிலே கிடைத்த பொருள்
இவற்றோடு மனைவியும்
என் பின்னால் நடந்துவர
எல்லோரைப் போலவும்
எதற்காக வென்று
தெரியாமலே உயிர்காக்க
என் ஊரை விட்டு(த்)
தொலை தூரம் வந்தும்,
வானமே கூரையாக
வாழ்விடம் மாறி
அழுகுரல்கள், முனகல்கள்
"அம்மா பசி" என்ற ஒலம்
காதுகளை நிறைக்க(ச்)
சன வெள்ளத்துள் ஒருவனாய்
சுள்ளிடும் சூரியனை
நேராகப் பார்த்தபடியும்,
நேற்றைக்கு வெளியான
தினசரிப் பத்திரிகை
என் உள்ளம் போல் நைந்து போய்
கை சேரும் வேளை...
என் ஊருக்குப் போகும்
செய்திகள் ஏதும்
தலைப்பாகவன்றி
உதிரியாக வேனும்
உண்டா என நோக்கியும்,
அருகிலே யாரோ
கொண்டு வந்த வானொலி
சக்தி இழந்த பற்றறியில்
காதில் ஈனசுரம் ஒத....
அமெரிக்க ஜனாதிபதியும்
இந்தியப் பிரதமரும்
ஐ.நா. செயலரும்
எம்மைப் பற்றி
ஏதும் சொல்வார்களா என
காது கொடுத்துக் கேட்டும்,
பசி என்னும் கொடுநோய்
குடலைக் கொஞ்சமாய்
உண்ணத் தொடங்கவே
அரசோ - அன்றி
அன்னிய நிறுவனமோ
சமைத்த உணவேதும்
கொண்டுவர மாட்டார்களா?
என்று ஏங்கும் வேளையதில்,
குண்டு போட்டு - உடல்
துண்டு போடும்
உலங்கு வானூர்தி
அன்றொருநாள்
நல்லூரம்பதியிலே
பூப்போட்ட நினைவு வர....
வானத்தை.........!?
ஏக்கமோடு நோக்கி
வாழ்கின்ற நான்;
இல்லை இல்லை
தப்பாகச் சொல்லி விட்டேன்;
நாளை நகர்த்தும்
நான் ஒரு "அகதி";
எனினும் எனக்கு
நாகரிகமாக வழங்கும் பெயரோ
"இடம் பெயர்ந்தவன்"

-சின்மயி

# பசிப் பிணி நீக்க.....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)
உள்ளத்தைப் புரட்சி நோக்கில் செலுத்தின. சாத்தனார் எழுத்தும் அவ்வாறே. மக்கள் உள்ளத்தில் இரக்க உணர்வைத் தூண்டிப் பசித்தோர் முகம்பார்க்கச் செய்தார். பரந்துபட்ட ஒன்றை ஒரு நிலையில் நின்றே சாதித்து விடமுடியாது. பல முனைகள் வேண்டும். சாத்தனார் இதை உணர்ந்தவர். பசியொழிப்பு அரசின் திட்டம். அது கனவு என்பது சாத்தனார் அறிந்ததே. நாம் கூறும் 'மக்கள் நலவரசு' என்ற சொற்றொடர் அவருக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் அதன் உட்பொருள் அவர் உணர்ந்ததே. முதல் காதையிலேயே இதனைக் காட்டுகிறார். 'விழாக்கொண்டாடுக' என முரசறையும் வள்ளுவன் அறிவிப்பில் இறுதியில் நாட்டை வாழ்த்துகிறான்.

**"பசியும் பிணியும் பகையும் நீங்கி**
**வசியும் வளனும் சுரக்க....."**

என்பது அவன் வாழ்த்து. பசிபோக்கும் வேலை 'மக்கள் நலவரசு' மேற்கொள்வது என்பதை இவ் வாழ்த்துக் காட்டுகிறதல்லவா?

**தனிமையும் பொதுமையும்**

பசி போக்குவது தனி மனிதற்கும், பொது அமைப்புக்கும் உரிய ஒன்றாக அமைந்தது. ஆதலின் அஃது அறம் என்ற சொல்லால் சுட்டப்பெற்றது. அரசு என்ற பொது அமைப்பு நிலையிலும் அஃது அறமாகக் கருதப்பெற்றது. மறுபிறப்பில் ஆபுத்திரன் அரசனாக ஆண்டான். அப்பொழுது மணிமேகலை காண்கிறாள். அவனிடம்,

**"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**
**மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்**
**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**
**கண்டது இல்..................."**

பொது அமைப்பாம் அரசுக்கும் சிலவற்றைச் சாத்தனார் கூறுகிறார். நினைத்துத் திட்டமிட்டு அதிகார முனைப்பில் சட்டம் இயற்றிவிட்டால் சிக்கல் தீர்ந்துவிடும் என்பதில்லை. திட்டமும், சட்டமும் மக்களுக்காவன. தனி மனி தனின் உளப்பாங்கு நன்கு அமைந்தாலன்றி அவை களால் ஒருபயனும் விளையாது. இன்றைய உணவு நெருக்கடியில் என்ன செய்தோம்?

மாந்தர்களின் உளப்பாங்கு நன்கு அமைந்தாலன்றி இஃது இயலாது, இவ்வேலை எழுத்தானது. மக்கள் மனத்தில் பலவகையான இரக்க உணர்வைத் தூண்ட எழுத்தாளன் வேலை செய்கிறான். அரசு, பொது அமைப்பு, சட்டமியற்றிக் காக்கும் நிலையில் செயற்படும். எழுத்தாளன் தனியாள், தனிமனம் நோக்கிச் செயற்படுவான். இரண்டும் இணைந்தே நாட்டுக்கு நல்வாழ்வு தரும்.

தனி மனிதனுக்குக் கூறுவதுபோலவே சாத்தனார் செய்திகளை அமைக்கிறார். காப்பியத்தலைவி பசிப்பினி போக்கும் மேற்கொண்டு நடக்கிறாள். மணிமேகலை வாழ்க்கையின் முற்பகுதி மற்றவர் பசிபோக்குவது, பிற்பகுதி பலசமய அறிவுரைகளைக் கேட்டுத் தவம் இயற்றுவது, பசி பற்றிய பல செய்திகளாக மணிமேகலையில் அமைந்தவை காப்பியத் தலைவிக்குப் பலர் கூறியனவாகவே அமைந்துள்ளன. அவள் ஒடு ஏந்தி இவ்வறம் மேற்கொள்ளும் முன்னர் அவளிடம் தீவதிலகையும் அறவண அடிகளும் இவ்வறம் பற்றி எடுத்துரைக்கின்றனர். பசிபோக்க மணிமேகலை மேற்கொண்டது அமுதசுரபி. அவ்வோடு பெற்ற இடம் மணிபல்லவம். அத் தீவில் தீவதிலகை பசியின் இயல்பு பற்றியெல்லாம் மணிமேகலையிடம் கூறுகிறாள். மணிமேகலை ஒடு கொண்டு உண்பித்த இடம் புகார், இப்பெரு நகரத்து அறவண அடிகள் இவ்வறம் பற்றி வற் புறுத்துகிறார். பின்னரே மணிமேகலை ஒடேந்தி உண்பித்த காட்சி அமைகிறது. இதனால் மாந்த ரின் மனப்பாங்கை நெறிப்படுத்துவதே சாத்தனா ரின் நோக்கமாக இருந்தது புலனாகும்.

*நன்றி:அறவிளக்கு*

## சொற்சிலம்பம் - போட்டி இல: 50

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | 13 | | | |
| 14 | | | 15 | | ■ | | ■ |
| | ■ | 16 | | ■ | 17 | | 18 |
| 19 | 20 | | ■ | 21 | | ■ | |
| 22 | | ■ | 23 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

கையொப்பம்:........................................

### மேலிருந்து கீழ்

1. சமாதானப் பேச்சுக்கள் இதை வேண்டித்தான்.
2. உடலில் உள் உறுப்பொன்று.
3. யானை அடங்குவது இவனிடம்.
4. திறை.
5. இந் நாட்டின் தலைநகர்.
8. கட்சிகள் மத்தியில் அடிக்கடி ஏற்படுவது.
10. கற்புநெறி பேணுபவள்; கண்ணகிக்கு நிகர்த்தவள்.
11. மயிர்.
13. 'எமது' எனப் பொருள்படும்.
14. இறைவன் கழல் அடைதல்/ மோட்சம் கிட்டுதல்.
15. அந்தரி.
17. கடுமையான / தீவிரமான.
18. சூறாவளி வகை.
20. அழுத்தம் தரக்கூடியது இது; ஒரு சக்திவகை
21. பன்மையைக் குறிக்கும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும்முதல் மூன்று பேர்களுக்கு முறையே ரூபா 250/=, ரூபா 150/=, ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

*சொற்சிலம்பம் போட்டி இல. 50*

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்,*
*இலக்கம் 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்துவரும் புதன் கிழமைக்கு முன்னர் (11.03.2009) திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல. 50 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 15.03.2009 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

### இடமிருந்து வலம்

1. இறுமாப்பு/ செருக்கு.
6. முன்னர் வழக்கில் இருந்த தூர அளவை.
7. எரிந்தால் மிஞ்சுவது/ யானை.
8. அணி/ கன்னை.
9. காந்தி தேசத்துக்கு காந்தீயம் புகட்டிய தியாகி.
11. நீள அலகு. கையினாலும் அளக்கலாம்.
12. மன்மதனின் மனம் கவர்ந்தவள்.
13. சிவாஜி கணேசன் இதில் திறமை மிக்கவர்.
14. அநேக ரகம்.
16. சூரியன்.
17. முந்தி வந்த காதை, பிந்தி வந்த இது மறைக்கும் என்பது ஒரு பழமொழி.
19. பாடல்.
21. தூங்கு/நித்திரை கொள்.
22. திக்கு.
23. அழுது அரற்றுதல்.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவைவளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 48 இற்கான சரியான விடைகள் வருமாறு:

இடமிருந்து வலம்
(1)நோர்வே (3)தரங்கு (6)கபடம் (8)குதித்தல் (10)முது (11)ரிதம் (12)மெத்த (13)சகடை (14)காத்தல் (15)பாடு (16)தாமிதம் (17)கசம் (20)தம்பி (21)அம்புலி

மேலிருந்து கீழ்
(1) நோக்கு (2) வேகத்தடை (3)குடல் (4)ரம் (5)குத்துதல் (7)பதம் (9)திரிகடுகம் (10)முத்தம் (12)மெத்தனம் (13) சபா (14) காபி (16)தாம் (18)சபி (19)வேலி

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்:48 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம்தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
செல்வி திவ்யா நடராஜன்,
பிராமண வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.

**2 ஆம் பரிசு**
தா.செல்வநாதன்,
மேதர்ஸ் ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

**3 ஆம் பரிசு**
வி.செல்வநாயகம்,
சிவன்கோயில் வீதி, புத்தூர்.

பரிசில் பெறுவோருக்கான பணம் காலக்கிரமத்தில் அவர்களது முகவரிக்கு காசோலையாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

(1)திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன்,
7 ஆம் கட்டை ஒழுங்கை,
மல்லாகம்.

(2)தம்பு பாலசுப்பிரமணியம்,
இல.113, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(3)திருமதி உ.சண்முகநாதன்,
இல.23, [illegible] வீதி,
சாவகச்சேரி.

(4)சிவசீலன் ராஜீவ்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(5) ச.இராசம்மா,
இல.237, காங்கேசன்துறை வீதி,
கொக்குவில் மேற்கு,கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார்க்காமல் கேட்டவன்

துப்பாக்கியால் ஒருவனைச் சுட்ட வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

சாட்சியை விசாரித்தார் வழக்கறிஞர். "எதிரி துப்பாக்கியால் சுடுவதை நீங்கள் பார்த்தீர்களா?"

"இல்லை. ஆனால் துப்பாக்கியால் சுட்ட சத்தம் கேட்டது"



குறுக்கிட்ட நீதிபதி " பார்க்காமல் வெறுமனே கேட்பதால் பயனில்லை. அந்தச் சாட்சி எடுபடாது. நீங்கள் போகலாம்" என்றார்.

குற்றவாளிக் கூண்டை விட்டு வெளியே வந்த சாட்சி தன் முதுகை நீதிமன்றத்திற்குக் காட்டியபடி நின்றார். எல்லோரும் கேட்கும்படி உரத்த குரலில் சிரித்தார்.

கோபம் கொண்ட நீதிபதி மீண்டும் சாட்சியைக் குற்றவாளிக் கூட்டில் ஏற்றுமாறு கட்டளை இட்டார்.

"என்ன துணிச்சல் உனக்கு? நீதிமன்றத்தில் இப்படிச் சிரித்திருக்கிறாயே. நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக உனக்குத் தண்டனை தரப்போகிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்டார் நீதிபதி.

நான் சிரித்ததை நீங்கள் பார்த்தீர்களா?" என்று கேட்டார் சாட்சி.

"பார்க்கவில்லை, ஆனால் நீ சிரித்த சத்தம் நன்றாகக் கேட்டது" என்றார் நீதிபதி.

"நீங்கள் தானே சற்று நேரத்திற்கு முன்னால் 'பார்க்காமல் வெறுமனே கேட்பதால் எந்தப்பயனும் இல்லை. அந்தச் சாட்சி எடுபடாது' என்று சொன்னீர்களே" என்று நீதிபதியை மடக்கினான் சாட்சி.*

**கு.திவ்யா, தரம் - 7, யா/ந/ஸ்ரீ/க/க/ம/வி.**

## யார் அநாதை?

நான் ஒரு அநாதையென்றேன்
இதைக்கண்ட
சந்திரன் சிரித்தான் நானும்
ஒரு அநாதை என்றான் இதைக்
கண்ட சூரியன் பிரகாசமாய் ஒளிர்ந்தான்
தானும் ஒரு அநாதை யென்றேன்
மூவரும் அநாதையென்று தெரிந்தது
இப்போது யார் அநாதையென்றேன்
யாருமில்லை மூவரும் சகோதரர்கள்தான்
என்றனர் மிகவும் மகிழ்ச்சி
அடைந்தேன்
அநாதைகள் இந்த உலகில்
எவருமில்லை
நான் அவர்களின் சகோதரன்



ச.ருயந்தன்
தரம் - 8 A,
சுதுமலை வடக்கு
மானிப்பாய்.

## டாக்டர் இராதா கிருஷ்ணன்



செப்டம்பர் 5, 1888. டாக்டர் இராதா கிருஷ்ணன் பிறந்தார். இவர் தமிழ் நாட்டிலுள்ள திருத்தணியில் பிறந்து, பிறந்த நாட்டிக்குப் பெருமையும், மனித குலத்திற்கு உயர்ந்த அறநெறியும் தன் வாழ்வால் எடுத்துக்காட்டியவர். சீரிய சிந்தனையும், நேரிய பண்பும், எல்லா எல்லைகளையும் கடந்து நிற்கும் மனித நேயமும் கொண்டவர். இவர் கல்லூரி ஆசிரியராகவும், பல்கலைக் கழகங்களில் துணைவேந்தராகவும், இறுதியில் நம் நாட்டின் குடியரசுத் தலைவராகவும் வாழ்ந்து கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஓர் இணையில்லா எடுத்துக் காட்டாய்த் திகழ்ந்தார்.

"எழுத்தறிவிப்பவன்இறைவன்" என்பது நம் முன்னோர் சொன்ன பொன்மொழி. வடமொழியில் "குரு" என்ற சொல்லுக்கு ஆசிரியர்என்றபொருள். 'கு' என்றால் இருள்; 'ரு' என்றால் அகற்றுதல். எனவே குரு என்றால் இருளை அகற்றும் ஒளி என்று பொருள். தமிழில் ஆசு + இரியர் அதாவது குற்றத்தைக் களைபவர் என்று கூறுகிறோம். நம் ஆசிரியர்கள் நமக்கு ஒளியாகத் திகழ்கிறார்கள்.

நி.ஜீவப்பிரகாஸ், தரம் - 6சி, மத்திய கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? - 05

1. ஒஸ்கார் விருதுபெற்ற முதல் இந்தியத் தமிழர் யார்?
2. யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள ஔவையார் சிலை எப்போது திறக்கப்பட்டது?
3. ஆசி மடம் எந்தப் பிரதேசத்தில் அமைந்துள்ளது?
4. மாயத்தீவில் மந்திரக்கிழவி சிறுவர் தொடரில் வருகின்ற இரு இளவரசர்களினதும் தந்தையின் பெயர் என்ன?
5. பாகிஸ்தான் ஜனாதிபதியின் பெயர் என்ன?

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 10.03.2009 இற்கு சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

### விடை தெரியுமா? - 03
சரியான விடைகள்

(1) ஆனைக்கோட்டை.
(2) முக்குப்பேனி.
(3) சனத்ஜெயசூரியா. (4) பான் - கி - மூன்.
(5) தக்காளிப்பழம்.

### பரிசுபெறுவோர்

01. நிருத்திகா இராஜகோபால்,
கள்ளி வீதி, வட்டுக்கோட்டை.
02. சி.நிரோஜன்,
தரம் - 4 B, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.
03. சி.சியானுகா,
தரம் - 4 B, உடுவில் மகளிர் கல்லூரி.
04. யோ.சிவரஞ்சினி,
தரம் - 6, மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.
05. ச.விமலா
தரம் - 9, கொழும்புத்துறை இந்து மகா வித்தி.
06. கி.மதுஷன்
தரம் - 8A, பருத்தித்துறை ஹாட்லிச் கல்லூரி.

குறிப்பு:
இம்முறை முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் மாத்திரமே 5 வினாக்களுக்கும் சரியான விடையை அனுப்பியிருந்தார்கள்.

## மாணவர் தூரிகை




உ.அஜித்தா, தரம் - 9, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தி.




சு.நிலக்ஷன், தரம் - 7 B, யாழ். பரியோவான் கல்லூரி.



எம்.வசீகரன், தரம் - 6, யா/விக்னேஸ்வரா வித்தியாலயம்.



பா.கோபிகரன், தரம் - 7, யா/நுணாவில் இருக்கு அமிர்தாம்பிகை வித்தி.



நா.மனோஜா,
புலோலி.



கோ.பாபுகன், தரம் - 7 C,
யா/மத்திய கல்லூரி.

## நீங்களும் எழுதலாம்

(தரம் 9 - இற்கு உட்பட்ட மாணவர்கள் மாத்திரம்)

மாணவர்களே!

'சிறுவர் கதிரில்' உங்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், விடுகதைகள், பொன்மொழிகள், பொது அறிவு விடயங்கள், ஓவியங்கள் போன்ற ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா? அப்படியானால் கீழுள்ள படிவத்தை பூர்த்தி செய்து, உங்கள் ஆக்கங்களோடு இணைத்து அனுப்பி வையுங்கள். தரமானவை பிரசுரமாகும். அனுப்ப வேண்டிய முகவரி:-

'சிறுவர் கதிர்', உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மாணவர் பெயர் :-..................................
தரம் :-..................................
பாடசாலை :-..................................

இத்தோடு இணைக்கப்பட்டுள்ள ஆக்கம், குறித்த மாணவரின் சுய ஆக்கமென சிபார்சு செய்கின்றேன்.

.......................... ..........................
திகதி வகுப்பாசிரியர் கையொப்பம்

## மாயத்தீவில் மந்திரக் கிழவி 26




'கிறீச்' என்ற சத்ததோடு கதவு மெதுவாகத் திறந்து கொண்டது. அறையினுள் இளவரசர்கள் கண்ட காட்சியை அவர்களாலேயே நம்பமுடியவில்லை. அறையினுள் ஒரு அழகிய இளவரசி சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தாள். அவளது அலறல்தான் இதுவரை அந்தப் பிரதேசமெங்கும் பரவியிருக்கிறது.

இளவரசியைச் சங்கிலியில் இருந்து விடுவிக்க இந்திரவர்மன் முயன்றபோது, அவளது கையைப் பிடித்துத் தடுத்தான் சந்திரவர்மன்.

"இந்திரா! சிலவேளைகளில் இதுவும் மந்திரக்கிழவியின் மாயவேலைகளில் ஒன்றாக இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது" என்று இந்திரவர்மனுக்கு அறிவுரையும் கூறினான்.

"சந்திரவர்மா! வெளியே இரு ராட்சதர்களும் உரையாடியதை நீயும் தானே கேட்டுக்கொண்டிருந்தாய். இந்த மாயத்தீவிலேயே மந்திரக்கிழவி இல்லாதபோது, நம்மை வீழ்த்துவதற்கு அவள் மாய வேலை எதுவும் செய்யமுடியாது" என்றான் இந்திரவர்மன். இவ்வாறு இளவரசர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது, கட்டப்பட்டிருந்த இளவரசியின் குரல் குறுக்கிட்டது.



"தயவுசெய்து விரைவாக என்னை விடுவியுங்கள். மந்திரக்கிழவி எந்நேரமும் இங்கு வரக்கூடும்" என்றாள் இளவரசி. அதன்பின் இந்திரவர்மன் சற்றுந் தாமதிக்காது தனது வாளால் சங்கிலியை அறுத்து, இளவரசியை விடுவித்தான். நன்றிப் பெருக்குடன் இந்திரவர்மனின் கரங்களை இளவரசி பற்றிக் கொண்டாள். (தொடரும்)

## நட்பு



நட்பு எனும் மூன்றெழுத்து
பாசத்தில் நடமாடுகிறோம்
பிரிவு எனும் மூன்றெழுத்து
துயரத்தில் வாடுகிறோம்

உடலுக்கு உயிர்சொந்தம்
கடலுக்கு அலை சொந்தம்
பூமிக்கு வானம் சொந்தம்
எனக்கு நட்பு சொந்தம்

பாசமுள்ள நெஞ்சங்கள் - பழி
வாங்கநினைப்பதில்லை
பிரியமுள்ள நெஞ்சங்கள்
பிரிவைத் தாங்குவதில்லை.

இ.திவாரகா, தரம் - 9,
யாழ்.கொக்குவில் இ.ம.வி.

இன்பத்திலும் துன்பத்திலும்
இணைபிரியாமல் இருப்பவள் - நண்பி
ஆபத்து வேளைகளில்
அஞ்சாமல் உதவுபவள் - நண்பி
பசிக்கு உணவு தந்து
பாசத்துடன் காப்பவள் - நண்பி
உயிருக்கு உயிராக
உண்மையுடன் இருப்பவள் - நண்பி
நட்புக்காக உயிரையும் கொடுக்கும்
நல்ல குணம் படைத்தவள் - நண்பி

உ.அஜித்தா, தரம் - 9,
யாழ்.கொக்குவில் இ.ம.வி.

## வானம் கறுத்தால்

வானம் கறுத்தால் மழை பெய்யும்
மழை பெய்தால் மண் குளிரும்

மண்குளிர்ந்தால் புல் தழைக்கும்
புல் தழைத்தால் பசு மேயும்

பசு மேய்ந்தால் பால் சுரக்கும்
பால் சுரந்தால் கன்று குடிக்கும்

கன்று குடித்து மிஞ்சியதைக்
கறந்து கொண்டு வந்திடலாம்
காய்ச்சி நாமும் குடித்திடலாம்

சி.நிதுஷா, தரம் - 5,
யா/வீரசிங்கம் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அச்சுறுத்துகிறது வடகொரியா!





பராக் ஒபாமாவின் வெளிவிவகாரக் கொள்கைகளுக்கு கடும் சவாலாக வடகொரியா விளங்கப் போகின்றது என்பதை கடந்தவாரம் வடகொரியா விடுத்துள்ள ஏவுகணை அறிவிப்பு புலப்படுத்தியுள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான தூரம் சில இடங்களில் சில கிலோமீற்றர்கள்தான். இப்பகுதி இராணுவ சூனியப் பிரதேசமாகக் காணப்படுகின்றது. வடகொரிய எல்லையில் 10 இலட்சம் படைவீரர்கள் எப்போதும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். உலகின் மிகவும் தனிமைப்படுத்தப்பட்ட நாடு வடகொரியா.

வடகொரியா கடந்தவாரம்தான் தனது தொலைத்தொடர்பு செய்மதியை கொண்டுசெல்லும் ரொக்கட் ஒன்றைச் செலுத்தப்போவதாகத் தெரிவித்தது. எனினும், அதற்கான திகதியைக் குறிப்பிடவில்லை. தனது நாட்டைப் பொறுத்தவரை இது பாரிய முன்னேற்றம் என வடகொரியா குறிப்பிட்டுள்ளது.

எனினும், வடகொரியா நீண்டதூர ஏவுகணை ஒன்றையே செலுத்தவுள்ளதாக அதன் அயல்நாடுகள் அச்சம் வெளியிட்டுள்ளன.

1998 இல் வடகொரியா தனது குறுந்தூர 'தைபொடோங்' ஏவுகணையை பரிசீலித்தபோது செய்மதி ஒன்றையே விண்வெளிக்கு அனுப்பியதாக தெரிவித்திருந்தது. தற்போது தனது 'அண்கா -2' எனும் தொலைத்தொடர்புச் செய்மதியைக் கொண்டுசெல்லும் ரொக்கட்டை விண்வெளிக்கு ஏவுவதற்கான நடவடிக்கைகளை அது மேற்கொண்டுள்ளது. இது வெற்றியளித்தால் வடகொரியாவின் விண்வெளித் தொழில்நுட்பம் மேலும் முன்னேற்றம் காணும். நாட்டின் பொருளாதாரம் பலப்படுத்தப்படும் என கொரிய செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள குவாடேயியில் இருந்தே இந்த ரொக்கட் விண்வெளிக்கு அனுப்பப்படும். இங்கிருந்தே முன்னர் வடகொரியா தனது குறுந்தூர ஏவுகணைகளை பரிசோதனை செய்தது.

இந்த ஏவுகணைகள் அமெரிக்காவின் அலாஸ்காவை தாக்கக்கூடியவை என்ற அச்சம் பரவலாக உள்ளது. 2006 இல்



'தைபொடோங்' ஏவுகணைப் பரிசோதனை செய்யப்பட்டபோதிலும், அது ஒருசில நிமிடங்களில் வீழ்ந்து வெடித்துவிட்டது.

உலகின் மிகப் பிரபலமான இராணுவப் புலனாய்வு சஞ்சிகையான ஜேன்ஸ், பெப்ரவரி மாத இறுதிக்குள் வடகொரியா ஏவுகணை ஒன்றை பரிசோதனை செய்யும் எனத் தெரிவித்துள்ளது. செய்மதிப் படங்கள் மூலம் தமக்குக் கிடைத்த தகவலின்படி வடகொரியா 'தைபொடோங் - 2' கண்டங்களுக்கு இடையிலான ஏவுகணையை அல்லது விண்வெளிக் கலம் ஒன்றை ஏவலாம் என்று குறிப்பிட்டுள்ளது.

'வடகொரியாவின் முசுடன் என்ற இடத்திலுள்ள ஏவுகணைத் தளத்தில் தற்போது மும்முரமாக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன. பல வாகனங்களைக் காணமுடிகின்றது. பலவிதமான பரிசோதனைகள் இடம்பெறுகின்றன' என்று ஜேன்ஸ் புலனாய்வு சஞ்சிகை தெரிவிக்கிறது.

**- ரஜீவன் -**

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகள் தமது புலனாய்வு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தியுள்ளன. வேவு விமானங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஏவுகணை திட்டங்கள் மீது ஐ.நா விதித்த தடையால் வடகொரியா பாதிக்கப்பட்டுள்ளது. ஏவுகணைகள் குறித்த சோதனைகளை மேற்கொள்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும், தான் தனது சமாதான விண்வெளித் திட்டத்துக்காகவே ஏவுகணைகளைப் பரிசோதிப்பதற்காக தெரிவிக்கும் வடகொரியா விண்வெளிக்கு செய்மதிகளை அனுப்புவதற்கு தனக்கு உரிமையுள்ளது என வாதாடி வருகின்றது.

1998 இல் முதன்முதலில் தனது 'தைபொடோங்' ஏவுகணையை ஜப்பானுக்கு மேலாகச் செலுத்தி உலகத்தை வடகொரியா அதிர்ச்சியடைய வைத்தது.

வடகொரியா நீண்டதூர ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசீலிக்குமானால், 6700 கிலோமீற்றர் செல்லக்கூடிய ஏவுகணைப் பலத்தை அதுபெறும். மேலும் எதிர்காலத்தில் அது அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தை தாக்கக்கூடிய அணுமுகப்புகளை பயன்படுத்தும் திறனையும் பெறும். இதன்மூலம் வடகொரியா அமெரிக்காவுக்கு நேரடி அச்சுறுத்தலை விடுக்கலாம்.

ஏற்கனவே, சிறிய சிறிய ஏவுகணைகள் பல உள்ள வடகொரியா நீண்டதூர ஏவுகணையை உற்பத்தி செய்யும் திறனையும் பெறும்.

அணுமுகப்புகளை பயன்படுத்தும் தொழிநுட்பத்தை வடகொரியா பெறவில்லை என தெரிவிக்கும் நிபுணர்கள், உயிரியல் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவது குறித்த ஆராய்ச்சியை வடகொரியா மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

வடகொரியாவிடம் 150கிலோமீற்றர் செல்லக்கூடிய குறுந்தூர ஏவுகணைகள் பல உள்ளன. இவை தென்கொரியத் தலைநகரையும் அங்குள்ள அமெரிக்கத் தளங்களையும் ஒரே நேரத்தில் தாக்கக்கூடியவை. வடகொரியா இவற்றை வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளது. வடகொரியா அவ்வப்போது சில அரசியல் காரணங்களுக்காக குறுந்தூர ஏவுகணைகளைப் பரிசோதிப்பதும் உண்டு. இதனைத் தவிர தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளைத் தாக்கக்கூடிய நடுத்தர வர்க்க றொடங் ஏவுகணைகளும் அதனிடம் உண்டு.

வடகொரியா ஏவுகணைப் பரிசோதனைகளை மேற்கொண்டால் பிராந்தியத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அது கருதப்படும். மேலும் சர்வதேச சமூகத்தில் இருந்து சில சலுகைகளைத் தவிர வேறு எதனையும் அதனால் பெறமுடியாமல் போகும். இதன் காரணமாக மிக மோசமான வறுமையில் சிக்கியுள்ள வடகொரியாவுக்கு இது மேலும் நெருக்கடிகளைக் கொண்டு வரலாம்.

சர்வதேச சமூகத்துக்கு வடகொரியாவை தண்டிப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை என்ற கருத்து உருவாகலாம். 2006 இல் நடத்திய ஏவுகணைப் பரிசோதனைக்காக வடகொரியா இன்னமும் சர்வதேசத் தடைகளை எதிர்கொண்டுள்ளது.

6 நாடுகள் ஒப்பம் இட்டுள்ள அணு ஏவுகணை உடன்படிக்கையின் அடிப்படையில் வடகொரியாவுக்கு வழங்கப்பட்ட உதவிகளை இடைநிறுத்தவேண்டும் என அமெரிக்கா ஏற்கனவே வேண்டுகோள் விடுத்து வருகிறது.

கடந்தவாரம் ஆசியநாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்ரன், வடகொரியாவில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் குறித்து கோடிட்டுக் காட்டியிருந்த ஒரு



சூழலிலேயே வடகொரியாவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் தலைமைத்துவம் குறித்து எதுவும் தெளிவில்லாமல் உள்ளது என ஹிலாரி தெரிவித்திருந்தார். வடகொரியத் தலைவர் ஹிம் ஜொங் - 2 கடும் நோய்வாய்ப்பட்டுள்ளார் என்ற தகவல்களை அடிப்படையாக வைத்தே இதனைத் தெரிவித்துள்ள ஹிலாரி அவருக்கு அடுத்தது யார் என்ற கேள்வி நிச்சயமற்ற ஒரு நிலையை உருவாக்குகிறது எனக் குறிப்பிட்டார். வடகொரியாவில் அடுத்த பதவிக்கு வரப்போவது யார் என்பதை தனது நிர்வாகமும் ஆசியாவில் உள்ள தனது சகாக்களும் தீவிரமாக அவதானித்து வருவதாகவும் ஹிலாரி குறிப்பிட்டார்.

வடகொரியாவில் ஆட்சி மாற்றம் அமைதியான முறையில் இடம்பெற்றால் கூட நிச்சயமற்ற நிலையே உருவாகும். சிலர் தமது அதிகாரத்தை பலப்படுத்தவும் சீற்றம்கொள்ள வைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவும் தூண்டுதலாக அமையும் என ஹிலாரி தெரிவித்தார்.


வடகொரியாவில் என்ன நடைபெறலாம் என்பது குறித்த தகவல்களை சீனா மற்றும் தென்கொரியாவிடம் இருந்து பெறப் போவதாகவும் ஹிலாரி தெரிவித்தார்.

வடகொரியா ஏவுகணை குறித்து வெளியிட்டுள்ள அறிவிப்புகள் ஆழ்ந்த கவலைக்குரியவை என்றும் அவர் கூறினார்.

அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் வடகொரியாவில் ஆட்சிமாற்றம் குறித்து பகிரங்கமாக கருத்துத் தெரிவித்துள்ளமை ஒருவித அதிர்ச்சியையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமெரிக்காவின் அடுத்த தாக்குதல்!

தொட்டில் பழக்கம். மீண்டும் போரைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டு இருக்கிறது அமெரிக்கா. ஈராக்குக்குப் பிறகும், பொருளாதாரச் சீரழிவுக்குப் பிறகும்!

இரு எதிரிகள்... அல்-கெய்டா மற்றும் தலிபான். இரு தேசங்கள்... பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான். ஒரே கல்லில் அடித்து வீழ்த்திவிடலாம் என்கிறார்கள் இராணுவ ஆலோசகர்கள். தீவிரவாதத்துக்கு எதிரான மாபெரும் போர். புஷ் சென்ற அதே திசை.... புஷ் கையாண்ட அதே கொள்கை... புஷ் காட்டிய அதே தீவிரம்!

இப்போது தொடங்கினால் சரியாக இருக்கும். இதைவிட்டால் இன்னொரு சந்தர்ப்பம் அமையாது. அபாயம், ஆபத்து, எச்சரிக்கை என்று பக்கம் பக்கமாக அறிக்கைகளை அள்ளிக் கொண்டுவந்து அவரது மேசையில் குவித்துக்கொண்டு இருக்கிறார்கள். ''மிஸ்டர் பிரசிடென்ட், இன்னொரு போரா என்று மிரள வேண்டாம். அநாவசியத் தயக்கம் வேண்டாம். மக்கள் ஒருபோதும் போரை வெறுப்பதில்லை. தோல்வியைத் தான் வெறுக்கிறார்கள். நீங்கள் ஜெயிக்கப் பிறந்தவர்!''

அல்கெய்டா வறண்டுவிட்டது. அவர்களால் பெரும் திட்டங்களை இனித் தீட்ட முடியாது என்று சற்று முன்னால்தான் அறிவித்திருந்தார் ஒபாமா. தற்போது தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டார். காரணம், ஒபாமா எதிர்பார்த்ததைப் போல் அல்லாமல், அல்கெய்டா விழித்துக்கொண்டுவிட்டது. பாகிஸ்தான் எல்லைப் பிரதேசங்களில் இருந்து அதற்கான சமிக்ஞைகள் கிடைத்துவிட்டன. ஏற்கெனவே, தலிபான்கள் பரவியிருக்கும் பிரதேசம். இரு அபாயங்கள் ஒரே இடத்தில் கைகோத்துக்கொள்வது அமெரிக்காவுக்கு நல்லது அல்ல... உலகத்துக்கும்!

அல்கெய்டா அலுவலகத்தில் இருந்து இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட வீடியோ மிரட் டல் அமெரிக்காவை நிமிர்ந்து உட்காரவைத்திருக்கிறது. 20 நிமிடங்கள் ஓடக்கூடிய அந்த ரேப்பில் பேசி இருப்பவர் அல் ஜவஹிரிக்கு அடுத்த நிலையில் இருக்கும் முஸ்தபா அபு யாசித். ''பாகிஸ்தான் மீது போர் தொடுக்கும் எண்ணத்தை இந்தியா விட்டொழிக்க வேண்டும். பாகிஸ்தான் மீது குண்டு அல்ல, குண்டின் நிழல் விழுந்தாலும் நாங்கள் சும்மா இருக்க மாட்டோம். பாகிஸ்தான் அரசியல் தலைவர்கள் பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. சர்தாரி ஒழிக்கப்பட வேண்டியவர் என்பதில் சந்தேகம் இல்லை. பாகிஸ்தான் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, சர்தாரியை ஆட்சியில் இருந்து தூக்கியெறிய வேண்டியது அவசியம். அது தனிக் கதை. இந்தியா இதில் தலையிடக் கூடாது. அதற்கு அனுமதிக்கவும் மாட்டோம்.''

இந்தியாவை அல்கெய்டா எச்சரித்ததற்கு அமெரிக்கா ஏன் எரிச்சல் அடைய வேண்டும்? காரணம், இந்த முஸ்தபா அபு யாசித், அல்கெய்டாவின் ஆப்கன் பிரிவுத் தலைவர். இவர் பாகிஸ்தான் எல்லையில் இருக்கிறார் என்றால், இவரது படைப் பிரிவும் அங்கேதான் இருக்கிறது என்று பொருள். ஆப்கானிஸ்தானை தலிபான்களிடமும், பாகிஸ்தானை அல்கெய்டாவிடமும் பிய்த்துக்கொடுத்து விட்டால், அமெரிக்காவின் கதி என்னவாகும்? இரு குழுக்களையுமே அமெரிக்கா எதிரி என்னும்போது, எப்படி இதை அனுமதிப்பது? இன்னொரு தீவிரவாதத் தாக்குதலை எதிர்கொள்ளும் நிலையில் அமெரிக்கா இல்லை. ஒபாமாவின் ஆலோசகர்கள் பதற்றம்கொள் வதற்கு இதுவே காரணம்.

முறைப்படி போரைத் தொடங்குவதற்கு முன்னால் ஒரு மதிப்பீடு செய்து பார்த்துவிட முடிவெடுத்திருக்கிறது அமெரிக்கா. இப்போதைய திட்டம் இதுதான். அமெரிக்காவின் சிறப்புத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் ரிச்சர்ட் ஹால்புரூக், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஆகிய இரு தேசங்களுக்கும் நேரில் சென்று நிலைமையை ஆராய வேண்டும். வரும் வழியில், இந்தியாவுக்கு ஒரு பயணம். அவர்கள் திட்டம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இது நடந்துவிட்டால், தெளிவான ஒரு சித்திரம் கிடைத்து விடும். நல்ல நாளாகப் பார்த்து வேலையை ஆரம்பித்துவிட வேண்டியதுதான்.

பிரிட்டனும் தன் பங்குக்கு ஒரு தூதரைத் தயார் செய்துவிட்டது. ஷெரார்ட் கூப்பர் கோல்ஸ்... ஆப்கானிஸ்தானுக்கான தூதர். அமெரிக்கத் தூதருடன் இவர் இணைந்து செயல்படுவார். பொருளாதார வீழ்ச்சியில் கூடிய விரைவில் அமெரிக்காவைத் தொட்டுவிடும் நிலையில் இருக்கிறது பிரிட்டன். வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை சென்ற வாரம் வரை 19லட்சத்து 70ஆயிரம். இன்னும் மூன்று மாதங்களில் 20லட்சம் ஆகிவிடும். ஆனாலும், போர் என்று வந்துவிட்டால் அமெரிக்காவுக்குத் தோள் கொடுத்தாக வேண்டும். அமெரிக்காவின் எதிரி பிரிட்டனின் எதிரியும்தானே?

கிட்டத்தட்ட கூட்டணி தயார். அமெரிக்கா, பிரிட்டன். ஆதரவுக்கு இந்தியா. போருக்கான அவசியத்தையும் பாகிஸ்தானிடம் எடுத்துச் சொல்லியாகிவிட்டது. 'அல்கெய்டாவையும் தலிபான்களையும் உங்களால் சமாளிக்க முடியாது. சர்வதேச ஒத்துழைப்பும், உதவியும், அனுதாபமும் உங்களுக்குத் தேவைப்படுகின்றன. தயாராக இருங்கள். எந்நேரமும் ஆரம்பிப்போம்.'

பாகிஸ்தானில் இருந்து பலத்த எதிர்ப்பு கிளம்ப ஆரம்பித்துவிட்டது. எல்லைப் பிரதேசத்தைத் தாக்குகிறோம் என்று சொல்லிக் கொண்டு, அமெரிக்காவும் நேட்டோவும் வாரம் இருமுறை பாகிஸ்தானுக்குள் குண்டு தூவிக்கொண்டே இருக்கின்றன. தீவிரவாதிகள் அல்ல, ஆப்கன் பழங்குடிகள்தான் இத்தாக்குதல்களில் பெருமளவில் இறக்கிறார்கள். ஆப்கனில் தொடரும் யுத்தமே பாகிஸ்தானை அலைக்கழிக்கும் போது, பாகிஸ்தானை நேரடியாகத் தாக்க ஆரம்பித்துவிட்டால் என்ன ஆகும்? ஆப்கானிஸ்தான் மக்களுக் கும் இதே கவலை. தற்சமயம் 32 ஆயிரம் அமெரிக்க வீரர்கள் ஆப்கன் எல்லையில் நிறுத்தப்பட்டு இருக் கிறார்கள். கூடுதலாக 30 ஆயிரம் பேரை அனுப்பப் போவதாகச் சொல்லி இருக்கிறார் ஒபாமா. இராணுவத்தின் பலம் இரட்டிப்பாகும்போது இழப்பின் பலமும் இரட்டிப்பாகப் போகிறது. என்ன செய்வது?

போர் நிச்சயம் என்று அமெரிக்கா முடிவெடுத்துவிட்டால், ஐந்து விளைவுகளை உலகம் எதிர்பார்க்கலாம்.

1.முதல் அடி, அமெரிக்காவுக்கு. தேசத்தைத் தூக்கி நிறுத்தும் பணி தொய்வடையும். அமெரிக்கர்களின் பணமும், பொருளும், கவனமும், உழைப்பும் மற்றுமொரு பேரழிவுக்குச் செலவிடப்படும். ஏற்கெனவே பள்ளத்தில் இருக்கும் அமெரிக்கா, பாதாளத்துக்குப் பாயும்.

2. ஆப்கானிஸ்தான் நாசமாகும். தலிபான்கள் ஒரு பக்கமும், அமெரிக் கர்கள் இன்னொரு பக்கமுமாக மாறி மாறி ஆப்கனை அடிக்க, முழு நீளப் போர் ஆரம்பமானால், சருகுகள்கூட மிஞ்சியிருக்காது.

3.மூன்றாவது விளைவு, பாகிஸ்தானின் அழிவு. போராட்டங்களும் கிளர்ச்சிகளும் இப்போதே தொடங்கிவிட்டன.

4. ஈராக்கில் இருந்து வெளியேறப்போகிறோம் என்னும் ஒபாமாவின் அறிவிப்பால் கிடைத்த கொஞ்சநஞ்ச நல்ல பெயரும் அழிந்து போகும். ஒபாமா மட்டுமல்ல, யார் வந்தாலும் அமெரிக்காவுக்கு மாற்றம் சாத்தியமல்ல என்பது நிரூபணமாகும்!

5.தீவிரவாதம் இன்னும் அதிகமாகும். சுண்டைக்காய் தேசமான ஈராக்கில் மாட்டிக்கொண்டு இன்று வரை அமெரிக்கா விழிபிதுங்கிக்கொண்டு இருப்பது ஏன்? அமெரிக்காவைவிட இராக்கின் படைபலம் பெரிதா? ஆப்கானிஸ்தான்? கஞ்சாச் செடிகளும் குகைகளும்கொண்ட ஒரு பாழடைந்த தேசத்தை இன்று வரை அமெரிக்காவால் வெல்ல முடியாமல் இருப்பது ஏன்? காரணம், அமெரிக்கா வுடன் மோதிக்கொண்டு இருப்பது ஈராக் இராணுவமும் ஆப்கன் இராணுவமும் அல்ல. ஈராக்கியர்களும் ஆப்கானிஸ்தான் மக்களும்தான். இராணுவத்தை எதிர்த்துப் போரிட்டு வெல்வது சுலபம். மக்களை வெல்வது கடினம்!

அமெரிக்கா அலறுவது போல் உண்மையில் ஆப்கன் - பாக். எல்லை அத்தனை பயங்கரமானதா? இங்கிருந்துதான் அல் கெய்டா பயிற்சி எடுத்துக்கொள்கிறதா? திட்டமிடுகிறதா? தீவிரவாதத்தின் ஊற்றுக் கண் இந்தப் பிரதேசம் மட்டும்தானா? நினைவிருக்கட்டும். செப்டம்பர் 11 - தாக்குதல் திட்டம் பெருமளவில் உருவானது பாகிஸ்தானிலோ, ஆப்கானிஸ்தானிலோ அல்ல... ஜேர்மனி மற்றும் புளோரிடாவில். போரைப் பற்றிச் சிந்திப்பதற்கு முன்னால், இல்லாத இடத்தில் எதையோ தேடி, எதை யெதையோ பெற்றுக்கொண்ட புஷ்ஷின் கதையை ஒபாமா ஒரு முறை நினைவு படுத்திக்கொள்ளட்டும்! *

## தவக்காலச் சிந்தனை



### நற்செயல்களே வாழ்வின் அறுவடை

இந்த அழகிய பூமி என்னும் தோட்டத்தைப் படைத்து எமக்கு குத்தகைக்குத் தந் துள்ளார் இறைவன். இறுதி நாளில் தமக்குரிய பங்கைப் பெற நிலக்கிழாரான இறைவன் தன் பணியாளரை அனுப்புவார். அப்போது நாம் மேற்கொண்ட அறுவடையில் நல்ல விளைச்சலை ஒப்புவிக்க போகிறோமா?அல்லது இது எமக்குரிய தோட்டம் என்று உலகப் பற்றில் தீய கனிகளைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அயலவரை புறக்கணித்து அழிவுறப் போகின்றோமா?

இதைத் தீர்மானிப்பது பண்படுத்தப்பட்ட உள்ளத்தில் நற்கனிகளின் விளைவைச் சேமித்து வைத்திருக்கின்றோமா? நச்சு வேர்களில் இருந்து முளையிட்டு மெலிந்த தானிய மூடைகளை வஞ்சக நெஞ்சத்தில் அடுக்கி வைத்திருக்கின்றோமா? என்பது தான்.

நல்வயல்களைப் பாழாக்காதபடி-தீமை விளைந்த நிலங்களையும் அதைச் சார்ந்தோரையும் சுட்டெரித்து நல்ல நிலங்களின் மேல் குளிர் நீர்பொழியப்படும். எனவே சமூதாய வயலியே நல்ல விதைகளைத் தூவி எமது சொல்,செயல், சிந்தனையால் நன்னீர் ஊற்றி பசளையிட்டு பெரும் அறுவடையைப் பெறுவோம். உவர் நிலமான மனங்களை விளை நிலமாக மாற்றுவோம். அப்போது விளை நில உரிமையாளரான இறைவன் எமது நம்பகத்தன்மையைப் பாராட்டி மேலும் சிறப்பான வாழ்வு தரும் சொர்க்க பூமியை எமக்களிப்பார்.

தரிசு நிலங்களாக இருக்கும் எம் உள்ளத்தை நீர்பாய்ச்சி ஆன்மீகத்தால் பண்படுத்தி விளை நிலமாக மாற்றுவோம். அங்கு இடையிடையே சாத்தான் எழுப்பும் களைகளை பிடுங்கி எறிந்து விட்டு ஒன்றுக்கு பத்தும், அறுபதும், நூறுமான விளைச்சலைப் [illegible] தோட்ட உரிமையாளரான இறைவனிடம் நல்விளைவைத் தாங்கிய [illegible]க் கையளிப்போம்.

எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



நாயன்மார் வீதி, நல்லூரைச் சேர்ந்த
செல்லப்பா செல்வராணி தம்பதிகளின் புதல்வி
**செல்வி கௌசல்ஜா B.A.(Hons)**
அவர்கள் கடந்த 26.02.2009 கண்டி
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணி
பட்டமும் "நாவலர்" சிறப்பு விருதும்
பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**K. கிருபன் அண்ணா குடும்பம்.**
**ரூபி நகைமாடம்,**
பலாலி றோட், திருநெல்வேலி.

---

**Danish Demining Group**

## முதலுதவியாளர் தேவை (Paramedic)

மேற்படி பதவிக்காகத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்:**

* க.பொ.த. உயர்தரம் (விஞ்ஞானப் பிரிவு விரும்பத்தக்கது)
* வயதெல்லை: 20-30 வரை
* பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்ப முடிவு திகதி - **08.03.2009**

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:
**டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழு,**
456, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (83140)

---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்




## திருமதி குமாரசாமி பூபதி

திதி: 01.03.2009 (வளர்பிறை பஞ்சமி)

அம்மா! ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அத்தனையும் எம் அன்னை போல் வருமா?
இணைபிரிந்த மான்களாய் உம்
துணையிழந்து வாடுகின்றோம் - அம்மா!
காலங்கள் ஓடினும் எம் மனக்
காயங்கள் ஆறவில்லையே - அம்மா!!!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

'பூபதி', ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி. **குடும்பத்தினர்.** (82505)

---

## மரண அறிவித்தல்

### இமானுவேல் திருச்செல்வம் செல்லையா



26.02.2009ஆம் திகதியின் மரண அறிவித்தலுக்கமைய E.T.செல்லையா அவர்களின் நல்லடக்க ஆராதனையையொட்டிய வழிபாடு இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் சுண்டுக்குளி பரி.யோவான் ஆலயத்தில் நடைபெறும்.

இத்தகவலை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

இல.22, சந்தனமாதா வீதி,
சுண்டுக்குளி. (83129)

தகவல்:
**பிள்ளைகள்.**

---

## பனை அபிவிருத்திச் சபையின் 'கற்பகம்' விற்பனை நிலையத்திற்கான கட்டடம் தேவை

பனை அபிவிருத்திச் சபை நெல்லியடியில் விற்பனை நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளது.

கீழ்க்குறிப்பிடப்படும் பொருத்தமான இடத்தில் இதனை வழங்கக் கூடியதாக இருப்பின் தங்களின் கோரிக்கையுடனான கூறுவிலையை 10.03.2009ஆம் திகதிக்கு முன் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் முகவரியிலுள்ள சபையின் தலைமைக் காரியாலயத்திற்குத் தபால் மூலமாகவோ, நேரிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கற்பகம் விற்பனை நிலைய கூறுவிலை எனக் குறிப்பிடவும்.

**குறிப்பு:**

01. குறித்த இடம் நெல்லியடி நகரை அண்மித்த சுற்றுவட்டத்தில் பருத்தித்துறை வீதி, கொடிகாமம் வீதி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வீதி ஆகியவற்றினை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
02. கூறுவிலையில் தங்கள் நிலையம் அமைந்துள்ள இடத்தினை விவரமாகக் குறிப்பிடவும்.
03. கூறுவிலைத் திகதி 10.02.2009ஆம் திகதியிலிருந்து 10.03.2009ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

**தலைவர்,**
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
*தொ:பே.இல.:* 021 222 2034, 021 222 4154 (சி/557316)

---

## விற்பனைக்கு

டீ பிறீசர், பிறிட்ஜ் (Haier) என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: **Hotel 'N' Joy**
Brown Road, Kaladdy Junction,
Jaffna. 0777 158595 (83142)

## விற்பனைக்கு

30 k.w. இங்கிலாந்து லிஸ்டர் ஜெனரேட்டர் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **நல்லைக்குமரன்,**
இல.62/33, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (83125)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் நாளாந்தம் சுத்தம் செய்து குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (83047)

## For Sale

Brand new Microwave/Convection oven
Model National NNC 781 JF
Capacity 1000w - 28L
Make Matsushita Electric industrial
Co.Ltd S1MMC.
(83124) T.P.: 060 221 9951

## வேலையாள் தேவை

பார்மஸியில் அனுபவம் உள்ள ஆண்/பெண் வேலையாள்கள் தேவை. 15.03.2009க்கு முன் விண்ணப்பிக்கவும்.

**தொடர்பு இல: 3177,**
**மே/பா, உதயன்** (83141)

## திருமண சேவை

யாழ்.கௌரவ குடும்பம், 28 வயது. பூ* நட்சத்திரம், Bank officer ஆக தொழில் புரியும். Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. செவ்வாய்க்குற்றம் இல்லை. மூன்று சுற்று கிரகபாவம் 34. இது ஒரு திருமண சேவை (www thaalee.com) Profile Number 4179 மணமகனின் படமும் ஜாதகமும் Profile இல் உள்ளது.

(சி/557308) T.P.: 2523127, 2520619

## வீடு விற்பனைக்கு

கொழும்பு - 15, புளூமென்டால் வீதியில் புதிதாகக் கட்டப்பட்ட மூன்று மாடிகள் கொண்ட வீடு, தளபாடங்கள், மின்சாரப் பாவனைப் பொருள்கள் அடங்கலாக 2½ பேர்ச் காணி உடனடியாக விற்பனைக்குண்டு.

*தொடர்புகொள்ளவும்:* 077 4725885 (சி/557299)

## திருமண சேவை

47 வருட சேவையில் பெற்றோர்களின் திருமணங்களை நிறைவேற்றி, தற்போது பிள்ளைகளின் திருமணங்களையும் நிறைவேற்றிவரும் உலகப்புகழ் பூத்த "சர்வதேச புலவர் திருமண சேவையுடன்" தொடர்பு கொண்டு உங்கள் திருமணங்களை நிறைவேற்றுங்கள்.

**மதுரகானம்,** 238, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
*தொலைபேசி:* 071 3352215, 021 222 7147

15A, 32ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை,
கொழும்பு - 6
*தொலைபேசி:* 011 2500380 (83050)

*இயக்குநர்:* புலவர் செ.து.தெட்சணாமூர்த்தி

---

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள்

வலி.வடக்கு,மார்ச்1

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கரவெட்டி யங்லயன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* கரவெட்டி செஞ்சுடர் விளையாட்டுக் கழகம் எதிர் வதிரி டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகம்.
* கரணவாய் வடக்கு நியூட்டன் விளையாட்டுக் கழகம் எதிர் கரவெட்டி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம். (202-86)

★ ★ ★

வலி.வடக்கு,மார்ச்1

யாழ்.மக்கள் வசந்த எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் வுலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் போட்டிகளில் மோதவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

* நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஏழாலை கண்ணகி விளையாட்டுக் கழகம்.
* ஈவினை கலைமகள் விளையாட்டுக் கழகம் எதிர் இள்வாலை இளஞ்சுடர் விளையாட்டுக் கழகம். (202-86)

---

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை

### புதிய பயிற்சி நெறிகள் ஆரம்பம் - March 2009

அரச "Tertiary and Vocational Education Commission" ஆல் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநெறிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1. குளிர்சாதனப் பெட்டி (Fridge), வளி சீராக்கி (Air-conditioner) திருத்துதலும் பொருத்துதலும் (1வருடம்)
2. மோட்டார் வாகன தொழில்நுட்பம் (Motor Mechanic) (1வருடம்)
3. மின் இணைப்பு அமைத்தல் (Electrical Wiring) (1வருடம்)
4. அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும் (06 மாதங்கள்)
5. ரேடியோ, T.V. பழுதுபார்த்தல் (6 மாதங்கள்)
6. மின்னியலும் இலத்திரனியலும் (Electrical & Electronics) (6மாதங்கள்)

* குறுகிய காலப் பயிற்சி நெறிகள்
* குறைந்த கட்டணம்! அதுவும் தவணை முறையில் செலுத்தும் வசதி!!
* நிறைவான செய்முறைப் பயிற்சிகளுடன் கூடிய நன்கு வடிவமைக்கப்பட்ட கற்கைநெறிகள்.
* மேலதிகமாகக் கணனி, ஆங்கிலம் ஆகிய துறைகளிலும் அனைவருக்கும் பயிற்சி
* சிறந்த நூலகம், விளையாட்டுத்துறை, விடுதி போன்ற மேலதிக வசதிகள்.
* 784, 785, 789 இலக்கப் பேரூந்து, சிற்றூர்தி மார்க்கங்களில் வந்துசெல்லக்கூடிய அமைவு.

சுயதொழில் ஆரம்பிக்க ஆர்வமுள்ளோருக்கும் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில்பெறச் செல்ல எண்ணியுள்ளோருக்கும் மேற்படிப்பைத் தொடரமுடியாமற் போனோருக்கும் இது அரிய சந்தர்ப்பம்!

விண்ணப்பப் படிவங்களைக் கீழ்க்கண்ட முகவரியில், நேரடியாகவோ, தபால்மூலமாகவோ பெற்று விண்ணப்பிக்கலாம்.

**இயக்குநர்,**
யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்,
வட்டுக்கோட்டை.
T.P.: 0212228275 / 0602213139 (சி/557296)

---

## பாதிக்கப்பட்ட யாழ் மழலைச் செல்வங்களுக்காக மத, அரச, அரசியல் சார்பற்ற, GOC அறக்கொடை நிதியம், முற்றிலும் இலவசமாக நடாத்தும் விசேட கவனிப்பிற்குரிய பாடசாலைகள்.

யாழ் குடாநாட்டில் பல்வேறு காரணங்களால் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறார்கள், வறுமை காரணமாக வழமையான பாடசாலைகளுக்கு சமூகம் தராத சிறுவர்கள், பாடசாலை சென்றும் வறுமை காரணமாக போஷாக்கின்மையால் கல்வியில் பின்தங்கி, கல்வியைத் தொடரமுடியாத சிறார்கள், யுத்தத்தினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகள், உள்ளூரிலே அகதிகளாக இருக்கும் சிறார்களுக்கு, நாம் அவரவர் தனிப்பட்ட தேவைக்கேற்ப, கல்வியை புகட்டுகிறோம். மேலும் அவர்களுக்கு தேவையான பால், சத்துணவு, புத்தகங்கள், காலணிகள் போன்றவற்றை நன்கொடையாளர்களின் உதவியுடன் நாம் இலவசமாக வழங்குகின்றோம்.

### விசேட பாடசாலைகள் நடாத்தப்படும் இடங்கள்

| | |
|---|---|
| பருத்தித்துறை | : இல. 2, கந்தவுடையார் ஒழுங்கை, புலோலி, பருத்தித்துறை. |
| சித்தன்கேணி | : Dutch Road, வட்டு கிழக்கு, சித்தன் கேணி. |
| அரியாலை | : 107, A.V. Road, அரியாலை. |

## பாதிக்கப்பட்ட யாழ் இளைஞர், யுவதிகளுக்காக மத, அரச, அரசியல் சார்பற்ற, GOC அறக்கொடை நிதியம், முற்றிலும் இலவசமாக நடாத்தும் தொழில்சார் பயிற்சி நிலையங்கள்.

யாழ் குடாநாட்டில், GCE A/L,O/L கல்வியை அல்லது அதற்கு குறைந்த கல்வியைக் கற்று, வறுமை காரணமாகவும், தொழில் வாய்ப்பின்மையாலும் வீட்டில் முடங்கியிருக்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் இளைஞர், யுவதிகளுக்கு, நாம் தொழில்சார் கல்வியை/ தொழில் பயிற்சியை இலவசமாக வழங்குகின்றோம். இதன் முதற் கட்டமாக, நாம் யுவதிகளுக்காக இலவசமாக சர்வதேச தராதரத்திற்கேற்ப தையல் வகுப்புகளை நடாத்துகின்றோம். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் யுவதிகள் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### தொழிற் பயிற்சி நடாத்தப்படும் நிலையங்கள்

| | |
|---|---|
| மானிப்பாய் | : சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். |
| நல்லூர் | : 34, சட்டநாதர் வீதி, நல்லூர் |
| புலோலி | : Dr. ஸ்ரீபத்மநாதன் இல்லம், மந்திகை. |

**பொது மக்கள் உதவக்கூடிய வழிகள்:**

1.) தானங்களில் மிகவும் சிறந்த தானம் - அன்னதானம் - உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்த நாட்கள், நினைவு நாட்கள், சிரார்த்த தினங்கள் என உங்களால் நினைவுகூரப்படும் விசேட தினங்களில் எமது குழந்தைகளுக்கு பால், சத்துணவு வழங்க முடியும். இவை பற்றிய மேலதிக விபரங்களை தொலைபேசி அல்லது நேரில் பெற்றுக் கொள்ள முடியும்.

02.) உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் நீங்கள் விரும்பிய நன்கொடைகளை எமது சிறுவர்களின் நலன்களுக்காக வழங்கமுடியும்.

03.) உங்களுக்கு தேவையற்ற, ஆனால் நல்ல நிலையில் உள்ள, உடைகள், பாடசாலை சீருடைகள், காலணிகள், பாடப்புத்தகங்கள், விளையாட்டுப்பொருட்கள் போன்றவற்றை எமக்கு வழங்கலாம்.

## GOC அறக்கொடை நிதியம் (காரியாலயம்)

**C/O: BRITISH BUSINESS SCHOOL**

140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Tel: 021 222 5796, 077 3627055
Email:gods.ownchildren@gmail.com , Web : www.godsownchildren.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வடக்கின் மாபெரும் போர்' கிண்ணம்; வென்று அசத்தியது யாழ்.சென்றல்

வலி.வடக்கு, மார்ச் 1

'வடக்கின் மாபெரும் போர்' என வர்ணிக்கப்பட்ட துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வெற்றி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நேற்று மூன்றாவது நாளாக ஆரம்பமான போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி ஒரு மணித்தியாலத்திற்குள் தனது ஐந்து விக்கெட்டுக்களையும் இழந்ததையடுத்து, யாழ்.மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.

போட்டி ஆரம்பமாகி மூன்றாவது ஓவரில் மத்திய கல்லூரி வீரர் கோபிகன் வீசிய பந்துக்கு முகம் கொடுத்த சென். ஜோன்ஸ் வீரர் விதுசன் பிடிகொடுத்ததைத் தொடர்ந்து போட்டி திருப்பு முனைக்குச் சென்றது.

தொடர்ந்து கஜீபன், ஹரிவதனன் ஆகியோர் ஓட்டம் எதையும் பெறாமல் வெளியேறினர்.பிரணவன் 16 ஓட்டங்களுடனும், சுதாகரன் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். கஜரூபன் 12 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

நேற்றைய தினம் 134 ஓட்டங்களுடன் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 184 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

நேற்றைய ஆட்டத்தில் முதல் மூன்று விக்கெட்டுக்களையும் 17 ஓட்டங்களுக்குள் இழந்தமை சென்.ஜோன்ஸ் கல்லூரிக்குப் பெரும் பின்னடைவாக அமைந்தது.

தொடர்ந்து இரண்டு விக்கெட்டுக்களும் 33 ஓட்டங்களுக்குள் இழக்கப்பட்டன.

யாழ்ப்பாண மத்திய கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெரிக்துஷாந் 20 ஓவர்கள் பந்து வீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 28 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும், தனுஜன் 05 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், அலென் குமார் 12 ஓவர்கள் பந்து வீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 29 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும், கோபிகன் 18 ஓவர்கள் பந்துவீசி 04 ஓட்டமற்ற ஓவர்களுடன் 49 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

103ஆவது ஆண்டாக இடம்பெற்ற இப்போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி புதிய சாதனையைப் பதிவு செய்தது. தொடர்ந்து மூன்று வருடங்கள் வெற்றி பெற்றதன் மூலம் இந்தச் சாதனை பதிவாகியது.

இதுவரை இடம்பெற்ற போட்டிகளில் இரு கல்லூரிகளும் இரு தடவைகள் தொடர்ந்து வெற்றிகளைப் பெற்றிருந்தன.

இந்த ஆண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி முதல் இனிங்சில் 236 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 08 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்களையும் பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி முதல் இனிங்சில் 104 ஓட்டங்களையும், இரண்டாவது இனிங்சில் 184 ஓட்டங்களையும் பெற்றுள்ளது.

ஆட்ட நிறைவில் யாழ்.மத்திய கல்லூரி 222 ஓட்டங்களினால் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

(50-86)

வெற்றிக் களிப்பில் மத்திய கல்லூரி அணி.




## யாழ். சென்ரல்- சென்.ஜோன்ஸ் பழைய மாணவரின் 'ருவென்ரி-20'

வலி.வடக்கு, மார்ச் 1

வடக்கின் பெரும் போரைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர்களுக்கும், யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்கும் இடையேயான சிநேக பூர்வமான 'ருவென்ரி-20' கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இரு கல்லூரிகளினதும் பழைய மாணவர்களுக்கு இடையே நீண்ட காலமாக 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியே இடம்பெற்று வந்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக இப்போட்டிகள் இடம்பெறாத நிலையில் இந்த ஆண்டு முதல் தடவையாக 'ருவென்ரி-20' போட்டி நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (50- 86)



'வடக்கின் மாபெரும் போர்' துடுப்பாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய மத்திய கல்லூரியின் அணித் தலைவர் செல்ரன் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதை முதல் படத்திலும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஆட்டநாயகனாகவும் தெரிவான யாழ்.மத்திய கல்லூரி வீரன் செல்ரன் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், சிறந்த பந்து வீச்சாளருக்கான கிண்ணத்தை சென்.ஜோன்ஸ் வீரன் பிரியதர்சன் பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

சிறந்த களத்தடுப்பாளருக்கான கிண்ணத்தை சென்.ஜோன்ஸ் வீரன் பிரணவன் பெற்றுக்கொள்வதை நான்காவது படத்திலும், சகலதுறை வீரருக்கான கிண்ணத்தை யாழ்.மத்திய கல்லூரி வீரன் றதீசன் பெறுவதை ஐந்தாவது படத்திலும் வெற்றியீட்டிய மத்திய கல்லூரி அணி வீரர்கள் கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தியுடன் நிற்பதை இறுதிப்படத்திலும் காணலாம். வெற்றிக் கிண்ணங்களை சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா ஞானப்பொன்ராஜா, யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். (படம்: நேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை ஒத்திவைப்பு

வடமாகாண கரப்பந்தாட்ட விளையாட்டுச் சங்கம் புதிய மத்தியஸ்தர்களைத் தெரிவுசெய்வதற்காக இன்று காலை நடத்தவிருந்த பரீட்சை தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகச் சங்கச் செயலாளர் ந.சுரேஷ்குமார் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-86)


காலத்திற்கேற்ப புதிய விடயங்களைத் தரமான நெறிப்படுத்தலில் அறிமுகம் செய்யும் எமது நிறுவனம் பின்வரும் கற்கை நெறிகளை ஆரம்பிக்கின்றது...

**IELTS** வேலைவாய்ப்பை நாடுவோருக்கும் வெளிநாடு செல்ல விரும்புவோருக்குமானது. ஆங்கிலத்தில் புலமையினை வளர்த்துக்கொள்ள விரும்புவோருக்கும் உகந்தது.

(அனுபவம் வாய்ந்த விரிவுரையாளரினால் மேற்கொள்ளப்படும்)

* Fully Scheduled Syllabus
* Computerized Multimedia Training
* Personal care with every student
* Practice Exam
* Exam Arrangements through British council

Class Time: Sat & Sun

Admissions Limited. Register Before 6th March

**VB.net** கணனியில் HND, BIT கணனிக் கற்கைநெறிகளை மேற்கொள்வோருக்கும் புறோகிறாமிங் துறையில் தம்மை ஈடுபடுத்த விரும்புவோருக்கும் உகந்தது.

Class Time: Sat & Sun, Weekday Evening

(புறோகிராமிங்கில் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளரினால் மேற்கொள்ளப்படும்)

Admissions Limited. Register Before 6th March

**Speed IT net**

72/28, பணிக்கர் லேன், பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

திருநெல்வேலி சந்தி அருகில் (பாதை மூடப்படும் வேளைகளில் மாற்று வழி உண்டு)

தொலைபேசி: 0214591871, 021 222 8358

மின்னஞ்சல்: biz@speeditnet.com இணையத்தளம்: www.speeditnet.com



**EDWARD MAKES RED OINMENT**

**றெட் ஒயின்மென்ற்**

நீர்ச்சிரங்கு, புண், புரை, பித்தவெடிப்பு, பருக்கள், கட்டு, படுவன், அக்கி, கிரந்தி அவியல், தலை அவியல், சொறி, தீச்சுட்ட புண், வெட்டுக்காயம், உரோஞ்சல், வட்டக்கடி, அரைக்கடி, சகலதையும் குணமாக்கவல்லது.

**றெட் ஒயின்மென்ற் எனக் கேட்டு வாங்குங்கள் எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.**

**டாக்டர் கபிரியேல் எட்வேட் (L.A.M.P., R.I.M.P)**

வைத்தியாச்சாரி, வைத்தியபூபதி, கலாயோதி


63, குருசோ வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 021 222 8171

edwardmakes@hotmail.com

(83143)


## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 08 |
| 11 | 03 |
| 1938 | 2003 |



**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை**

(கிராமசேவை நிர்வாக உத்தியோகத்தர், சமாதான நீதவான் சத்தியப் பிரமாண மொழிபெயர்ப்பாளர்)

திதி: 01.03.2009

ஆற்றொணாத் துயரில் ஆறு ஆண்டுகளாய்
ஆற்றுவார் யாருமின்றிப் பரிதவிக்கின்றேன்
ஆறு ஆண்டுகளாய் உந்தன் பிரிவுத் துயரின் துன்பம் தீர
அண்ணனின் அரவணைப்பில் ஆறுதல் பெற்றேன்
ஆறுதல் கூறி தேற்றி வந்த அண்ணனையும்
ஆற்று வேகத்தில் அழைத்துச் சென்று விட்டாய் - தானோ
உந்தன் பிரிவாலும் அண்ணனின் அரவணைப்பு இன்மையாலும்
தன்னந் தனியாய் துன்பத்தில் துவழ்கின்றேன்
எந்தன் துன்பந் தீர்க்க மறுபிறப்பெடுத்து வாருமய்யா.

உந்தன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

அன்பு அக்கா இ.பொன்னம்மா.

வாதரவத்தை,
புத்தூர்.

(83150)

## மரண அறிவித்தல்

### தம்பிஐயா லோகதாசன்

(இலங்கை விமானப்படை முன்னாள் உத்தியோகத்தர்)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் - நல்லூர் Hounslow London வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா லோகதாசன் (இலங்கை விமானப் படை முன்னாள் உத்தியோகத்தர்- பழைய மாணவர், பரமேஸ்வராக் கல்லூரி, இந்துக் கல்லூரி- யாழ்ப்பாணம்) 22.02.2009 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா-பாக்கியலக்ஷ்மி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற ஜோர்ஜ் சிறிமான தம்பதியரின் மருமகனும், ஐரினின் (சிறிமான) அன்புக் கணவரும் அன்றூவின் அன்புத் தகப்பனாரும், பேரின்பநாயகம் (ஓய்வுபெற்றபிரதிப் பொலிஸ்மா அதிபர்), திருமதி லோகேந்திரராணி பாலசிங்கம், திருமதி தயாநிதி ஸ்ரீஸ்கந்தராசா, காலஞ்சென்ற புவனேஸ்வரன் (கனடா) ஆகியோரின்அன்புச் சகோதரரும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு கல்கிசை பொதுமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.பேரின்பநாயகம்
(சகோதரன்).

தொ.பே;- 2597043

## தவறிவிட்டது

பொ.மனோரஞ்சன் என்பவரது மோட்டார் வாகன தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம் (377776) யாழ். நகருக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: பொ.மனோரஞ்சன்
இல.127/13, ரெம்பிள்றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 9352830, 021 222 3810

(83145)

## HOLY FAMILY CONVENT, JAFFNA PAST PUPILS' ASSOCIATION

### The Annual General Meeting - 2008

The above meeting will be held on Sunday, 7th March 2009, at 3.00p.m., in the school hall.

All members are kindly requested to be present.

*Principal,*
*J/Holy Family Convent,*
*Jaffna.*

*Secretary*
*Holy Family Convent Past Pupils' Association,*
*Jaffna.*

(83131)


**www.thaalee.com**
**(இது ஒரு திருமணசேவை)**

மணமக்களே!

இன்றுடன் உங்கள் திருமணப் பேச்சு வார்த்தையில் உள்ள சிரமங்கள், தாமதங்கள், சிக்கல்கள் என்பவற்றைத் தீர்த்துக்கொள்ள விரும்பினால் உடனே எமது www. thaalee. com என்கின்ற websiteஐ நாடுங்கள். இதில் பல்லாயிரக்கணக்கான மணமக்களுடைய படங்கள், ஜாதகம் மற்றும் சகல விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இதில் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொண்டு எம்மை நாடினால் நாங்கள் ஆவன செய்வோம். மேலும் உங்களுடைய Profileஐ நீங்களே இதில் பதிவுசெய்து கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு எம்மை நேரடியாக நாடுங்கள். அல்லது படம், ஜாதகம், முழு விவரம் என்பவற்றை எமது விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் ஆவன செய்வோம்.

S.Sarma J.P
45/1, Madampitiya Road, Colombo - 15.
T.P: 2523127, 2520619


## சமய சந்திகளில்

கரவெட்டி கிழக்கு, கிழவி தோட்டம் விநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனப் பூர்த்தி இன்று ஞாயிற்றுக்கிழமை வள்ளியம்மை திருமணப் படலம் படிப்பதுடன் நிறைவு பெறுகின்றது.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு வீதிவலம் இடம்பெறும். (202)

* * *

சங்கானை,மார்ச்.1

சங்கானை நிகரையம்பதி ஞான வைரவர் ஆலயத்தின் அலங்காரத் திருவிழா கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

இறுதி நாளான எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை 108 சங்காபிஷேகம் இடம்பெறும். (202-29)

* * *

சுழிபுரம்,மார்ச்.1

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய மாசி மக இலட்சார்ச்சனை நிகழ்வு இந்த வாரம் ஆரம்பமாகவுள்ளது.

ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ ச.சோமஸ்கந்தக் குருக்கள் கிரிகைகளை நடத்தவுள்ளார். (202-28)

## கணனி வகுப்புகள்

மண்டுவில்,மார்ச்.1

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாலை நேரக் கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வாரநாள்களில் நடைபெறவுள்ள இவ் வகுப்பில் ஜி.சீ.ஈ. சாதாரண தரம் கற்ற இளைஞர், யுவதிகள் இணைந்து பயிற்சி பெறலாம்.

இதற்கான விவரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் பாடசாலை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என அதிபர் தெரிவித்தார். (202-29)

## 11ஆம் நாள் நினைவஞ்சலி

சாவகச்சேரி விளைவேலி ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தான ஆதீன தர்மகர்த்தா

**பிரம்மஸ்ரீ பரமசாமிக்குருக்கள் மகாகணபதி சர்மா**

அவர்கள் 19.01.2009 அன்று விண்ணுலகடைந்தமையை அறிந்து அம்பிகை அடியார்கள் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா ஸ்ரீ துர்க்காதேவியின் பாதகமலங்களைச் சென்றடைய அம்பிகையைப் பிராா்த்திக்கின்றோம்.

**ஸ்ரீ துர்க்கையம்மன் அடியார்கள்,**
தென்மராட்சி இந்து பரிபாலன அறிவியல் மன்றம், சாவகச்சேரி.

(சி/557324)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெயராஜா தங்கராணி

யாழ்ப்பாணம், ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் J1/3, அரச தொடர்மாடி, பம்பலப்பிட்டியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயராஜா தங்கராணி 27.02.2009 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விதானையார் - நவரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற கைதடியைச் சேர்ந்த சின்னத்தம்பி (மலாயன் பென்சனர்) தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி ஜெயராஜா (Retired Chief Clerk Police Office) அவர்களின் அன்பு மனைவியும் Dr.கைலாஷ் (அபுடாபி), அனுஷா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் R.இரட்ணகுமார், சசிகலா ஆகியோரின் பாசமிகு மாமியும் அபிஷேக், ஆகாஷ், அருஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், சிவயோகம், சிவசிதம்பரம், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காகக் கல்கிசை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: Dr. ஜே.கைலாஷ்
T.P.: 011-2594295, 0777 291719

(சி/557327)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் துரைரட்ணம் சோதிராஜா**

அன்பின் திருவுருவே!
எம் குடும்பத்தின் ஒளிவிளக்கே!
நீர் எம்மை விட்டுப் பிரிந்து ஒரு வருடமாகியும்
மறக்கக் கூட முடியவில்லை
நீங்காத உங்கள் நினைவலைகள்
நிழலாகத் தொடருதையா
நிலவில்லா வானம் போல நாமிங்கே
நினைவிழக்க முடியாமல் கண்ணீரில் நீந்துகின்றோம்
பல காலம் எம்முடன் இருப்பீர் என நினைத்தோம் - ஆனால்
காலத்தின் கொடுமையால் காலனவன் கணப்பொழுதில்
உம்மை எம்மிடம் இருந்து பிரித்துவிட்டான்
உமது ஆத்மா சாந்தியடைய உள்ளமதை
நிறைந்து நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (01.03.2009) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பங்குகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**

இல.80, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(83153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மாணவர் உளவளம் பேணிட நாடுவோம்

மாணவர்களுக்குப் பாடசாலைகளிலேயே உளவள ஆலோசனை வழங்கும் திட்டம் குறித்து வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பாடசாலைகளுக்கு அறிவித்திருக்கிறார். அந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும்போது உளவளம் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நிலைமையைச் சீராக்கும் பணியை ஆசிரியர்கள் செய்யவேண்டும் என்றும் அதற்கு அவர்களைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தி உள்ளார்.

தமிழர் பிரதேசங்களைப் பொறுத்தவரையில் மேற்கூறிய திட்டம் மிகவும் அத்தியாவசியமானதாகும்; காலத்தின் தவிர்க்க முடியாத தேவையாகும். கடந்த பல வருடங்களாகயாழ். குடாநாடு உட்பட தமிழர் பிரதேசங்கள் பலவும் போர் மலிந்த பூமியாக மாறியிருந்தன. அதனால் பெரும் எண்ணிக்கையானோர் பெரியோர், சிறியோர் என்ற வித்தியாசமின்றிப் பலவிதமான உளப்பாதிப்புகளுக்கு ஆளாக நேர்ந்தது.

குடாநாட்டில் இப்போது பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் மிகப் பலரும், அப்போது சிறுவர்களாக இருந்தவர்கள். அவர்களில் பெரும்பாலானோர் சிறிதாகவோ பெரிதாகவோ உளப்பாதிப்புக்கு ஆளாகினர் என்பது கேள்விக்கு அப்பாற்பட்ட நிஜம். அக்காலத்து அசாதாரண சம்பவங்களால் மூத்தவர்களைவிட, சிறுவர்களும் இளவயதினருமே அதிக எண்ணிக்கையில் பாதிக்கப்பட்டவர்கள் என்று கொள்வதில் தப்பில்லை.

இவர்களின் உளநலப் பாதிப்புக்குப் பல்வேறு காரணங்கள், மூலங்கள் உண்டு. அவற்றை வரிசைப்படுத்தியோ வகுத்தோ கூறின் அது விரியும். எனினும் போர்க்காலத்திலும் அதற்குப் பிந்திய காலத்திலும், தமது பெற்றோர்களையோ அல்லது நெருக்கமான உறவுகளையோ இழந்ததால் ஏற்பட்ட பாதிப்பு அன்றைய சிறுவர்களை - இன்றைய மாணவர்களை - பெரிதும் பாதித்தது என்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய அம்சம். அது போன்றே அன்றைய சம்பவங்களை நேரில் கண்ட சிறுவர்களும் பெரும் உளநலப்பாதிப்புக்கு ஆளானார்கள். இவை மட்டுமன்றி அன்றைய இடப்பெயர்வுகளால் பெரும் எண்ணிக்கையான சிறிசுகளின் உளநலம் காயப்பட்டது; பாதிக்கப்பட்டது.

முன் கூறிய மூன்று வகைகளையும் விட மற்றும் பல காரணங்களாலும், வகைகளினாலும் அன்றைய சிறுவர்கள்-இன்றைய - மாணவர்கள் - மனம் நொடிந்து பாதிக்கப்பட்டனர். அவை பாதிக்கப்பட்டோரின் பெற்றோர்களினதும், உறவுகளினதும் சொல்லில் அடங்காத - அவற்றில் சில வாய்திறந்து சொல்லவும் முடியாத - அனுபவங்கள்.

அன்றைய சிறுவர்களின் - இன்றைய மாணவர்களின் - உளநலப் பாதிப்புகள் அவர்களின் இதயங்களில் காயங்களாக மாறி ஆழ்மனதில் பதிந்துள்ளன. அவற்றின் வெளிப்பாடுகள் அவர்களின் கல்வியைப் பாதிக்கிறது. அதனைவிட எதிர்காலத்தையும் பாதிக்கப்போகிறது.

இத்தகு பின்புலத்தில் -

எதிர்காலத்தில் உளநலம் குன்றிய சந்ததி - மன நலம் பாதிக்கப்பட்ட சந்ததி - உருவாகாமல் தடுப்பது எல்லோருக்கும் உரிய கடமையும் பணியுமாகும். இதனை உணர்ந்து பாடசாலைகளில் அதனை ஆசிரியர்களின் கடமையாக்குவது வரவேற்கப்பட வேண்டியது. அது வெறும் திட்டமாக இல்லாமல், சமூல நலன் நாடியாதாகச் சிறப்பாகச் செயற்பட ஆசிரியர்கள் மனங்கொண்டு உழைக்க வேண்டும். எமது எதிர்காலச் சந்ததிக்குச் செய்யும் பெரும் தொண்டாக நினைத்து உதவ வேண்டும்.

ஆசிரியர்களே சமூகத்தின் சிற்பிகள். அவர்களின் உளமுணர்ந்த ஈடுபாடு கலந்த சேவையால் எதிர்காலச் சந்ததியினருக்கு ஏற்படவிருக்கும் பெரும் பாதிப்பைத் தவிர்க்க முடியும்.

இது தொடர்பாகப் பெற்றோர்கள் மத்தியிலும் விழிப்புணர்வு விதைக்கப்படவேண்டும். மனித நேயம் மிகுந்தவர்கள் இந்தப் பணியை முன்னெடுத்து எங்கள் எதிர்காலச் சந்ததி வளமாகவும் நிறை மனிதர்களாகவும் வாழ வழி செய்வதில் நாட்டம் கொள்வது பெரிதும் விரும்பத்தக்கது. மிக அவசியமானது.

# திருமலையிலிருந்து 32 சதவீதமான நோயாளர்கள் சிகிச்சை முடிந்து வவுனியாவுக்கு அனுப்பி வைப்பு

முல்லைத்தீவிலிருந்து யுத்தத்தில் காயமடைந்தவர்கள் உட்பட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் கடல் வழியாக அழைத்து வரப்பட்டு திருகோணமலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்களில் 32 சதவீதமானோர் சிகிச்சை முடிந்து வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை வைத்தியசாலை தகவல்களின்படி கடந்த 11ஆம் திகதி முதல் 5 தடவைகளில் காயமுற்றவர்கள், நோயாளர்கள், கர்ப்பிணிகள் மற்றும் உறவினர்கள் என 1996 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர். இவர்களில் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 632 பேர் தவிர மிகுதி 1348 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். திருகோணமலை வைத்தியசாலையில் மட்டும் 796 பேர் சிகிச்சை பெற்று வரும் அதேவேளை ஏனையோர் மன்னார், பொலனறுறை, கந்தளாய், தம்பலகாமம், கொழும்பு மற்றும் கண்டி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனைத்தவிர இதுவரை 16 பேர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 12 கர்ப்பிணித் தாய்மார் குழந்தைகளைப் பிரசவித்துள்ளனர். மேலும் அங்கிருந்து வந்தவர்களில் 85 சதவீதமானவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்புறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்கிடையில் நேற்று 6ஆவது தொகுதி நோயாளர்களுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் முல்லைத்தீவிலிருந்து புறப்படவிருந்ததாக திருகோணமலை வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (50)

## மூத்த பிரஜைகள் சேவையாளர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

மூத்த பிரஜைகள் சேவையாளர்களின் சேவைகளைப் பெறுதலுக்காக 25 பேர் சமூக நலத்துறை திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'நிக்கொட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

மூத்த பிரஜை சேவையாளர் களின் சேவைகளைப் பெற விரும்பு பவர்கள் சுண்டுக்குளியில் அமைந் துள்ள யாழ்.மாவட்ட சமூக நலத் துறை திணைக்களத்தின் அலுவலகத்துடனோ, அல்லது பிரதேச செயலகங்களில் கடமையாற்றுகின்ற சமூக சேவை உத்தியோகத்தர்களுடனோ தொடர்பு கொள்ளலாம் என்று சமூக நலத்துறை திணைக்கள யாழ்.மாவட்ட திட்ட இணைப்பாளர் ரி.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (202-9)

## நடமாடும் சேவை

இணுவில்,மார்ச் 1

யாழ்.மாவட்டத்தில் இதுவரை பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாத சிறுவர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுக்க யாழ் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் கழகம் நடமாடும் சேவைகள் இடம் பெறவுள்ளன.

இதன் முதற்கட்டமாக உடுவில், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில் பின்வரும் திகதிகளில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை சங்குவேலி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை ஈவினை ஆரம்ப சுகாதார நிலையத்திலும், எதிர்வரும் 6ஆம் திகதி அளவெட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலும் எதிர்வரும் 12ஆம் திகதி மயிலங்காடு ஆரம்ப சுகாதார நிலையத்திலும் எதிர்வரும் 20ஆம் திகதி சுன்னாகம் வளர்மதி ச.ச.நிலையத்திலும் எதிர்வரும் 23ஆம் திகதி குப்பிளான் பொது மண்டபத்திலும் சேவைகள் இடம்பெறும். (202-9-45)

## உதயன் ஆசிரியர் வித்தியாதரன் விடுதலை செய்யப்பட வேண்டும்

### இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

உதயன் ஆசிரியரும், சுடர் ஒளி பிரதம ஆசிரியருமான ந.வித்தியாதரன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை இந்துமாமன்றம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

எமது மக்கள் சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் மனித உரிமைகள் மறுக்கப்படுவது வருத்தத்திற்குரியது. இந்த வகையில் எங்கள் மக்களின் நலன் கருதி பணியாற்றிக் கொண்டிருந்த உதயன், சுடர்ஒளி ஆசிரியர் ந.வித்தியாதரன் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் என வேண்டுகிறோம்.

பத்திரிகைச் சுதந்திரம் எங்கள் சமுதாயத்தின் உயிர் மூச்சு. அதற்கு எந்த விதமான தடைகளும், கட்டுப் பாடுகளும் விதிப்பதை ஜனநாய கத்தை மதிக்கும் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றுள்ளது. (50-9)

## கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 1

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தினரால் அராலி, வட்டுக் கோட்டை மக்களின் நலன்கருதி இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நடத்தப்படவுள்ளது.

அராலி மத்தியில் உள்ள அ.செல்வரட்ணம் என்பவரின் வீட்டில் இந்த கண்சிகிச்சை முகாம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (202-9)

## நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாத பட்டதாரிகளின் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 1

தேசிய பாடசாலைகளில் பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கு 17 பேர் இதுவரை தோற்றவில்லை. இவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான இறுதிநாள் நாளை திங்கட்கிழமை என்று யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

குறிப்பிட்டவர்களை யாழ்.மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்துக்கு ஆவணங்கள் மற்றும் அவற்றின் பிரதிகளுடன் தோற்றுமாறு அவர் கேட்டுள்ளார். நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களின் பெயர் விவரம் வருமாறு:

எஸ்.ரதி (இளவாலை), பி.பிரதீபன் (யாழ்ப்பாணம்), எம்.பிரியந்தி (கோப்பாய்), எஸ்.லம்போதரன் (அல்வாய்), த.கஜேந்திரன் (கிளிநொச்சி), என்.சர்மிலா (முல்லைத்தீவு), ரி.துசிகரன் (சாவகச்சேரி), ஆர்.துஷ்யந்தி (யாழ்ப்பாணம்), ஏ.தாமரைச்செல்வி (பண்டத்தரிப்பு), வி.வாமன் (அல்வாய்),

கே.தங்கராஜா (புலோலி), எஸ்.சுபாகரன் (சுன்னாகம்), என்.நளாயினி (சித்தாண்டி), எஸ்.ஜெயகுமாரன் (வட்டுக்கோட்டை), ஜே.அரியதாஸ் (ஆனைக்கோட்டை), ரி.நகுலன் (அச்சுவேலி), எஸ்.சிவலோகநாயகி (சுன்னாகம்).

## கச்சதீவு அந்தோனியார் ஆலய உற்சவம்

நல்லூர்,மார்ச் 1

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் உற்சவம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருச்சொரூப பவனியுடன் உற்சவம் நிறைவுபெறும்.

இம்முறை கச்சதீவு உற்சவத்தை நடத்துவது குறித்துப் பொதுவான விருப்பு சம்பந்தப்பட்ட தரப்பில் இருப்பதாகத் தெரிகின்றது. எனினும் இது பற்றிய முடிவான தீர்மானம் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவரவில்லை.

கச்சதீவு உற்சவத்தைக் குறிப்பிட்ட தினத்தில் நடத்துவது குறித்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ்.செயலகத்தில் சம்பந்தப்பட்டவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது. (202-111)

## சமாதானக் கல்விச் செயற்பாடுகள்

வண்ணை, மார்ச் 1

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்குமான பணியக செயற்பாடுகளில் ஒன்றாக எதிர்வரும் 4 ஆம் திகதி புதன் கிழமை நீர்வேலி ஆர்.சி.எம். எஸ்.பாடசாலையில் சமாதானக் கல் விச் செயற்பாடுகள் நடைபெறுமென மேற்படி நிறுவன செயற்திட்ட இணைப்பாளர் யோ.சோபனா தெரிவித்துள்ளார்.

நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறும் நிகழ்வில் மாணவர்களுக்கு சமாதானச் செயற்பாடுகளும் ஆசிரியர்களுக்கு வன்முறையற்ற தொடர்பாடல் பற்றிய கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக் கிழமை நீர்வேலி சிறுப்பிட்டி எஸ்.ரி. எம்.எஸ்.பாடசாலையிலும் மேற்படி செயற்பாடுகளை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (அ-160)

## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்கள் யாழ்.மாணவருக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை

வலி.வடக்கு,மார்ச் 1

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்ப முடிவுத்திகதி நேற்று சனிக்கிழமை முடிவடைந்த போதிலும் யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் முழுமையாகக் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.குடாநாட்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகவர்களாகச் செயற்படுவோர் விண்ணப்பப்படிவங்களை எடுத்து வந்து விநியோகம் செய்தனர்.

தீவகம், தென்மராட்சி போன்ற இடங்களில் உள்ள மாண வர்கள் படிவங்களைப் பெற யாழ் நகரப் பகுதிக்கு வருவதற்கு முன்னரே படிவங்கள் விற்பனை செய்யப்பட்டு முடிவடைந்ததனால் திரும்பிச் செல்லும் நிலையும் ஏற்பட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இத்தகைய சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு யாழ் குடாநாட்டு மாணவர்களுக்கு வேண்டிய விண்ணப்பப் படிவங்கள் கிடைக்க உரியவர்கள் நடவடிக்கையெடுப்பதுடன் விண்ணப்பங்களை அனுப்புவதற்கான முடிவுத் திகதியையும் நீடிக்க ஆவன செய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட மாணவர்கள் கோருகின்றனர். (202-86)

## நாளை

| | |
|---|---|
| மாசி 18 | 02.03.2009 |
| | திங்கட்கிழமை |
| திதி: | சஷ்டி |
| | பி.இ. 03.12 வரை |
| நட்சத்திரம்: | பரணி |
| | மு.இ. 08.40 வரை |
| சுபநேரம்: | 12.27 - 01.57 |
| ராகுகாலம்: | 07.57 - 09.27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்,



## மன்னார் வைத்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கச் .செல்லும் வேளையிலேயே காணாமற்போன விடயம் தெரியவந்துள்ளது.

அதனை தொடர்ந்து இராணுவத்தினரும் பொலிஸாரும் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## ஐ.நா.பாதுகாப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றது.

இலங்கையில் நடைபெறும் போரினால் அண்மைய நாள்கள் வரை 2000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொலையுண்டுள்ளனர்.

லண்டனில், பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் இலங்கை விவகாரம் குறித்துப் பாதுகாப்புச் சபையில் பிரேரணை கொண்டுவர வேண்டும் என்று பகிரங்கமாக் கூறியிருந்தார். ஆனால் பிரிட்டனின் ஐ.நா. தூதுவர் ஜோன் சுவார்ஸ் இலங்கை விவகாரம் குறித்து சபைத் தலைவர் அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும் என்று கூடக் கேட்கவில்லை.

பிரிட்டிஷ் அமைச்சர் மில்லிபான்ட் தெரிவித்த கருத்தை நீங்கள் சபையில் பிரதிபலிக்கவில்லை என்ற எனது கேள்விக்கு பதில் அளிக்காமலே அவர் வெளியே சென்றார்.

பாதுகாப்புச் சபை நிராகரிக்கும் எனத் தெரிவித்திருந்தும் கூட கடந்த வருடத் தில் அமெக்காவும் பிரிட்டனும் சிம்பாப்வேக்கு எதிராகப் பொருளாதாரத் தடை கொண்டு வரவேண்டும் என்று பிரேரணை சமர்ப்பித்திருந்தன.

ஆனால், வெள்ளிக்கிழமைக் கூட்டத்துக்கு அமெரிக்கத் தூதுவர் சுசான் றைஸ் சமுகமளிக்கவில்லை. அவரது சார்பில் வேறெந்தப் பிரதிநிதியும் கலந்துகொள்ளவுமில்லை.

இத்தனைக்கும் ஒரு வாரத்துக்கு முன்னதாக - பெப்ரவரி 23 ஆம் திகதி ஐ.நா வின் செயலாளர் நாயகம், போரை இடை நிறுத்தி, அரசியல் பேச்சு வார்த்தையில் ஈடுபடுமாறு சம்பந்தப்பட்ட இரு தரப்புகளையும் கேட்டிருந்தார்.

எனினும் மனிதாபிமான விவகாரங்களுக்கான செயலாளர் நாயகம் ஜோன்ஹோம்ஸ் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் போர் முடிவுற்ற பின்னர் அரசியல் பிரச்சினைகளை கையாள்வது குறித்தே பிரஸ்தாபித்திருக்கிறார். என்னே விபரீதம்!

மொத்தத்தில் ஐ.நா.சபையின் செயலாளர் நாயகத்தின் கோரிக்கையை செல்லுபடியற்றதாக்கும் நோக்கத்துடன் - அதனை உதாசீனம் செய்யும் வகையில்- குழிபறிக்கும் விதத்தில்-இலங்கை அரசாங்கத்தின் இராணுவ நடவடிக்கைக்கு- போருக்கு-தனிப்பட்ட ரீதியில் பச்சைக் கொடிகாட்டும் - ஆதரவு அளிக்கும் போக்கே தென்படுகின்றது. (அ)

## புலிகளின் நவீன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதுக்குடியிருப்பை மேற்கு பகுதியை நோக்கி முன்நகர்வில் ஈடுபட்டுள்ள 58 ஆவது படையணி புலிகளின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுத்து முன்னேறிச் சென்ற வேளை புலிகள் இவற்றை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிய வந்தது. (அ)

## தற்காலிக மோதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப் பதாவது:

இலங்கையின் வடக்கே மனிதாபிமான நிலைமை கடந்த சில மாதங்களாக குறிப்பாக இந்த வருட ஆரம்பம் தொடக்கம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் ஸ்ரீலங்காப் படைகள் ஆழ முன்னெறி வந்ததால் அநேகமாக அனைத்துப் பொதுமக்களுமே புலிகளுடன் சேர்ந்து தொடர்ச்சியாக இடம் பெயர்ந்தனர். அவர்கள் தற்போதுஸ்ரீலங்கா அரசு, பாதுகாப்பு வலயம் என்று அறிவித்துள்ள கரையோரப் பிரதேசத்தில் மிகக்குறுகிய 14 சதுர கி.மீ பகுதிக்குள் நசுக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களில் அநேகர் கடந்த சில மாதங்களாக, வருடங்களாகக் கூட பல தடவைகள் இடம்பெயர்ந்துவிட்டவர்கள். ஆனால், அவர்கள் இப்போது மோதல்களில் சிக்கி மிகப்பெரிய ஆபத்தை எதிர்கொண்டி ருக்கிறார்கள். போர்ப் பகுதியிலிருந்து பொதுமக்கள் வெளியேறுவதை விடுதலைப்புலிகள் தடுக்கின்றார்கள் என்பதற்குப் பலமான ஆதாரங்கள் உள்ளன.

மோதலில் சிக்கியுள்ள பொதுமக்களின் எண்ணிக்கையானது அரசுத் தரப்புத் தகவல்களின்படி 70 ஆயிரம் ஆகவும் ஐ.நா. மதிப்பீட்டின்படி 2 லட்சம் எனவும் மற்றும் தமிழ்க் குழுக்களின் தகவலின்படி 3 லட்சம் எனவும் குறிப்பிடப்படுகிறது. மனிதாபிமான அமைப்புக்களும் ஊடகவியலாளர்கள் இப் பிரதேசத் துக்குச் செல்ல இயலாத நிலை ஏற்பட்டதில் இருந்து சுயாதீனமான தகவல்கள் இன்மையால் மோதலில் பாதிக்கப்படும் பொதுமக்களின் உண்மையான, சரியான விவரங்களை அறிய முடியாமல் உள்ளது.ஆனால், தினமும் பல டசின் மக்கள் கொல்லப்பட்டும் காய மடைந் தும் வருகின்றனர் என்றே நாம் நம்புகிறோம்.

அந்தப் பகுதியில் (வன்னியில்) அக் கப்பட்டுள்ள மக்கள் தொற்று நோயாலும் போஷாக்கின்மையாலும் மிகவும் மோசமாகப் பாதிக் கப்படும் நிலைமை கள் அங்கு அதிக ரித்து வருகின்றன. சுத்தமான குடி தண் ணீர் மற்றும் உணவு விநியோகம் சரியாகக் கிடையாது. விநியோகங்கள் படகுகள் மூலம் வர ஆரம் பித்திருக் கின்றன. ஆனால் கடலால் அவற் றைக் கொண்டு வருவதில் இருக் கின்ற பிரச்சினை கள் காரணமாக அவை போது மான அளவுக்கு வந்து சேர்வதில்லை - ஹோம்ஸ் தனது அறிக் கையில் இவ்வாறு தெரி வித்திருக்கிறார். (அ-2)

## புதுக்குடியிருப்புப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8.25 மணி, இரவு 9.50 மணி என்றும் மூன்று தடவைகள் இடம் பெற்ற தாக்குதல்களிலேயே இவர்கள் காயமடையவும், உயிரிழக்கவும் நேர்ந்தது.

உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்கள் தொடர்பான முழுமையான விவரங்கள் நேற்றிரவு செய்தி எழுதும் வரை வெளியிடப்படவில்லை. (அ-02)

## முல்லையில் உள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் செல்லத்துரை சபாநாயகம் வைரவப் புளியங்குளத்தில் உள்ள அவரது வீட் டில் வைத்து கடத்தப்பட்டார் என்று தெரி விக்கப்பட்டது.

வெள்ளை வானில் சிவில் உடையில் வந்த பத்துப் பேர் கொண்ட குழுவே இவரைக் கடத்திச் சென்றதாகக் கூறப்பட்டது.

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதி யில் தங்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் கனகரத்தினத்தின் பணிகளை, வவுனியா வைரவப்புளியங் குளத்தில் இருந்து இவர் மேற்கொண்டு வந்தார் எனத் தெரிவிக்கப் பட்டது. (அ-1)

## முகர்ஜிக்கு எதிராக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2 எம்.எல்.ஏ.,க்கள் உட்பட சுமார் 185 பேர் கைது செய்யப்பட்டனர்.

'இலங்கையில் போர்நிறுத்தம் செய்ய வலியுறுத்தாமல் தமிழர்களை அவமானப் படுத்தும் வகையில் பேசி வரும் பிரணாப் முகர்ஜிக்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம் நடைபெறும்' என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ. நெடுமாறன் வெள்ளிக்கிழமை கூறியிருந்தார்.

அதன்படி நேற்று தூத்துகுடியில் வைகோ தலைமையில் மதிமுக எம்எல்ஏ.,க்கள் வரதராஜன், ஞானதாஸ் உட்பட சுமார் 150 பேர் கருப்புக் கொடி போராட்டம் நடத்த முயன்றனர். மேலும், அவர்கள் இலங்கை அரசு மற்றும் ராஜபக்ஷவுக்கு எதிராக கோஷமிட்டனர். இதையடுத்து, பாலீசார் அவர்கள் அனைவரையும் கைது செய்தனர்.

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து தமிழ்நாடு மின்சார வாரியம் தூத்துக்குடியில் ஆயிரம் உயர் வலு கொண்ட அனல்மின் நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு நேற்று சனிக்கிழமை அடிக்கல் நாட்ட வந்த வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை திரும்பிப் போக வலியுறுத்தி இந்த கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி தொலைத் தொடர்பு அலுவலகம் முன்பாக இலங்கைத் தமிழர் பாதுகாப்பு அமைப்டைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் இன்று காலையில் வைகோ தலைமையில் கூடினர்.

கறுப்புக்கொடியுடன் வந்திருந்த அவர்கள் விழா நடைபெறும் ஏ.பி.சி. மகளிர் கல்லூரி விளையாட்டுத்திடலுக்கு ஊர்வலமாகப் புறப்பட்டனர். அவர்களை காவல் துறையினர் வழியில் மறித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் தூத்துக்குடி 2 ஆவது நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி ஹேமந்த் குமார் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

அனைவரையும் 15 நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி அவர்கள் அனைவரும் பாளையங் கோட்டை மத்திய சிறைக்குக் கொண்டு சென்று அடைக்கப் பட்டனர். (அ)

## புலிகளின் போர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வேண்டும் என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் நடைபெற்று வரும் போரால் அங்குள்ள தமிழ் மக்களின் நிலைமை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவது இந்தியாவுக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது.

இலங்கையில் போர் நடைபெறும் பகுதியில் 70 ஆயிரத்திற்கும் அதிகமான அப்பாவி மக்கள் சிக்கித் தவிக்கின்றனர் என் றும், அங்கு உணவு, குடிநீர், தண்ணீர் மற்றும் மருந்துப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

போரில் அப்பாவித் தமிழர்கள் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்

இலங்கையில் போர் நடைபெறும் பகுதியில் சிக்கியுள்ள மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இலங்கையில் சண்டை நிறுத்தம் செய்ய தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்திருக்கிறது. ஆயுதங்களைக் கீழே போடுவோம் என்பதை விட இது சிறிய அறிவிப்புதான்.

எனினும் இலங்கையில் போரை நிறுத்துவதற்காக விடுதலைப் புலிகள் ஏற்படுத்தியுள்ள இந்த வாய்ப்பை சிறிலங்கா அரசு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

எனவே, இலங்கையில் போரை நிறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் சிக்கியுள்ள தமிழ் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்ற நடவடிக்கை எ[illegible]க வேண்டும் என்று இலங்கை அரசை [illegible]டுக்கொள்கிறோம். இந்த முயற்சிக்கு [illegible]லைப் புலிகளும் ஒத்துழைக்க வேண்டு[illegible]

போர் பகுதிகளில் பகுதியில் இருந்து வெளியேற்றப்படும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட வேண்டும். அவர்களுக்கு முறையான மறுவாழ்வு வழங்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு, மருந்து உள்ளிட்ட உதவிகளை வழங்க அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் உள்ளிட்ட அமைப்புக்களுக்கு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

இலங்கை வடக்கு பகுதியில் இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவியை வழங்க மருத்துவர்கள், மருந்துப் பொருள்கள் அடங்கிய குழுவை இந்தியா விரைவில் அனுப்பி வைக்கும்.

போர் நிறுத்தத்திற்குப் பிறகு தமிழ் மக்கள் வாழும் மாநிலங்களுக்கு சமத்துவம், அனைத்து மக்களுக்கும் சம உரிமை உள்ளிட்ட அதிகாரங்கள் ஒன்ற[illegible] இலங்கைக்குள் வழங்கப்பட வேண்[illegible]

இலங்கையில் உள்ள அனைத்து [illegible]ப்பு மக்களின் நலன் கருதி நான் விடுத்துள்ள இந்தத் விசுவாசமான வேண்டுகோளை சிறிலங்கா அரசும், மற்றவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்-

தூத்துக்குடியில் நேற்று நடைபெற்ற ஆயிரம் உயர்வலு கொண்ட மின் உற்பத்தி நிலையத்திற்கு அடிக்கல் நாட்டி உரையாற்றும் போதும் இதே கருத்தை பிரணாப் முகர்ஜி வெளியிட்டார்.


கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

Dialog TELEKOM

டயலொக் ரெலிகொம் நடாத்தும் மாபெரும் மலிவு விற்பனை



இலவசம் சிம் ரூ.600/= ரீலோட் வர்ணத்திரை IDD கால் 10% விலைக் கழிவுடன்...

2700/= மட்டும்

→ ரூ.600/= ரீலோடுடன் கூடிய இலவச சிம்

→ இணைப்பு உங்களது பெயரிலேயே பதிவு செய்யப்படும்.

K.K போன் சொப் இல.[illegible] நியூ மார்க்கட், யாழ்ப்பாணம்

திருமுருகன் கொம் நெற் 46, ஆஸ்பத்திரி வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)


## மரண அறிவித்தல்

### முத்துக்குமாரு ஆச்சிப்பிள்ளை

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட முத்துக்குமாரு ஆச்சிப்பிள்ளை நேற்று(28.02.2009) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, தங்கச்சிப்பிள்ளை, சின்னப்பிள்ளை, கந்தையா, நல்லையா ஆகியோரின் சகோதரியும் ந.இராசரத்தினம், செல்வரத்தினம், விஜயரட்ணம், அன்னலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் மாமியும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(01.03.2009)ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணியளவில் கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
ந.இராசரத்தினம்
(இலங்கை வங்கி
உத்தியோகத்தர், அ[illegible])


புவியியல் பெரும் திருப்பம்

SUBRA-14 தொடர் பரீட்சை
Monday தோறும் நடைபெறும்
வெளி மாணவரும் தோற்றலாம்
முதற்பரீட்சை முடிவுகள்
1)ம.சஞ்சீவன் 84 -விக்ரோறியா
2)ந.கோகிலவாணி 82 -விக்ரோறியா
3)க.மயூரன் 82 -சென்.யோசப், 4)ச.மயூரதன்78-சென்.யோசப்
5)சி.பிரதீபன் 66-சென்.யோசப்
6)சி.நிதர்சன் 66 -இளவாலை ஹென்ரீஸ்
ஆசிரியர் S.ஐங்கரன் M.A.




SHAMROCK
A/L 2009 & DAY
இணைந்த கணிதம்
Sat., Sun.4p.m.
Mr.K.கஜபரன் B.Sc.
PHYSICS
Tue., Thur. 3.30p.m.
Paper பரீட்சைகளுடன்
Mon., Wed., Fri. 6.15a.m.
Mr.K.கஜன்
CHEMISTRY
Mr.M.A.நிரோஜன்

அட்சயா

பேசியல் - 10 விதமானவை (புதிய பரிமாணத்துடன்)
மேக் அப் - 7 விதமான சேலை உடுத்தும் முறையும், இந்து, கிறிஸ்தவ, சிங்கள, குஜராத், குப்தாஸ், மொடன், மடிசார் மணப்பெண் அலங்காரமும் (கொழும்பு ஸ்டைலில் செய்து காட்டப்படும்)
கெயா ஸ்டைல் - முற்றிலும் புதிய மொடேர்ண் கொண்டைகள், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல்
சாறி வேக் - 5 விதமானவை
ஐசிங் - 30 விதமான கேக் வடிவங்களும் புதிய வகையான ஐசிங் பூக்களும்
கைவேலை, பூவேலை, பெயின்டிங் மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பம்
மேலும் றிச் கேக் -25/=
ஆமெண் ஐசிங் றிச்கேக் -35/=
ஐசிங் கேக் - 5000 முதல் ஓடருக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.
மேக் அப், பேசியல் என அனைத்து சேவையினையும் பெறுபவர்களுக்கு கட்டணக் கழிவு வழங்கப்படும்.

அட்சயா
461, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org